# செயலாற்றுகை அறிக்கை
# 2018

இலங்கை பொலி



## பொலிஸ்மா அதிபரின் செய்தி

2018ஆம் ஆண்டிற்கான இலங்கை பொலிசின் செயலாற்றுகையை வெளிப்படுத்தும் இவ் அறிக்கைக்கு செய்தியொன்றை வழங்கக் கிடைத்தமையையிட்டு நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

நாட்டின் சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாத்து, அனைத்து பிரசைகளுக்கும் குற்றச் செயல்கள் குறித்த அச்சமின்றி வாழ்வதற்கான சூழலை உருவாக்குவதே இலங்கை பொலிசின் பிரதான குறிக்கோளாகும். குறித்த குறிக்கோளை அடைவதன் பொருட்டு இலங்கை பொலிஸ் கட்டுப்பட்டுள்ளது.

87000 ற்கும் மேற்பட்ட பொலிஸ் பணிக்குழுவினரையும் அவர்களுக்குத் துணையாக 4000 ற்கும் மேற்பட்ட சிவில் பணிக் குழுவினரையும் கொண்டமைந்த இலங்கை பொலிஸ், 2018 ஆம் ஆண்டில் தனது குறிக்கோள்களை அடைந்து கொண்ட முறை இவ் அறிக்கை மூலம் வெளிக்காட்டப்படுகிறது. அதன் மூலம் வெளிப்படும் மிக முக்கியமான சில விடயங்களை நான் இங்கு மிகச் சுருக்கமாகக் குறிப்பிட விரும்புகின்றேன்.

இவ் அறிக்கையில் அடங்கியுள்ள தரவுகளுக்கு அமைய 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் குற்றச் செயல்கள் அறிக்கையிடப்படும் வீதம் ஆல் ஆன அதிகரிப்பைக் காணக் கூடியதாக இருந்தாலும் வீடுடைப்பு, கொள்ளையிடுதல் போன்ற குற்றச் செயல்களும் பெண்களுக்கு எதிரான பாரிய குற்றங்களும் 2017 ஆம் ஆண்டை விடக் குறைந்திருப்பதைக் காணலாம். பாரிய குற்றங்களைத் தீர்க்கும் சதவீதம் 78% ஆகும்.

போதைப் பொருள் பாவனையை சமூகத்திலிருந்து முற்றாக ஒழிப்பதற்காக பொலிசினால் எடுக்கப்படும் முயற்சிகளை நன்கு வெளிக்காட்டும் ஒரு காரணியாக இங்கு உள்ளடங்கியுள்ள போதைப் பொருள் தேடுதல் நடவடிக்கை தொடர்பான தரவுகளைச் சுட்டிக் காட்ட விரும்புகின்றேன். குறிப்பாகக் கடந்த மூன்று வருடங்களை எடுத்துக் கொண்டால் இந்நாட்டிற்குக் கொண்டு வரப்படும் போதைப் பொருட்களின் எண்ணிக்கையில் பாரிய வீழ்ச்சியைக் காணலாம். உதாரணமாக, 2016 ஆம் ஆண்டில் பிடிபட்ட போதைப் பொருட்களின் எண்ணிக்கை 38876 கிலோ கிராமாக இருந்ததுடன், 2018 ஆம் ஆண்டில் அவ் எண்ணிக்கை படிப்படியாக 10254 கிலோ வரை 74% ஆல் குறைவடைந்துள்ளது. இலங்கை பொலிசினால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும் பாரிய அளவிலான போதைப் பொருள் தேடுதல் நடவடிக்கைகள் காரணமாக இந் நாட்டிற்கு போதைப் பொருள் கொண்டு வரப்படும் நடவடிக்கை முற்றாக பாதிக்கப்பட்டுள்ளமையே இதன் மூலம் வெளிப்படுகிறது.

2017 ஆம் ஆண்டிற்கு ஒப்பீட்டளவில் ஊழல் குற்றங்களின் 9% குறைவை தரவு பகுப்பாய்வுகள் மூலம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளதுடன், பல்வேறு முறைப்பாடுகள், குடும்பச் சண்டைகள், நபர்களுக்கும் ஆதனங்களுக்கும் எதிரான சிறு அளவிலான குற்றங்கள் அறிக்கையிடப்படலும் வீழ்ச்சியடைந்துள்ளமையைக் காணலாம்.

நியதிச் சட்டங்களின் கீழான குற்றங்களில் பாரிய சரிவு ஏற்பட்டுள்ளதோடு, குறிப்பாக சூழலுக்கு எதிரான குற்றங்களில் தெளிவானதொரு சரிவைக் காணலாம். கரையோரப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழான குற்றங்கள் 46% ஆலும், சுற்றாடல் கட்டளைச் சட்டத்தின் கீழான குற்றங்கள் 3% ஆலும், அனுமதியற்ற அகழ்வுகள் 16% ஆலும், காடுகள் கட்டளைச் சட்டத்தில் காட்டப்பட்டுள்ள குற்றங்கள் 36% ஆலும் குறைவடைந்துள்ளமையை உதாரணமாகக் காட்டலாம்.

இயற்கை அனர்த்தங்கள் தொடர்பில் இலங்கை பொலிசின் கூட்டுச் செயற்பாட்டில் 2018 ஆம் ஆண்டில் இயற்கை அனர்த்தங்களின் விபத்துக்கள் பெருமளவில் குறைவடைந்துள்ளன. அதற்கமைய 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டளவில் 2018 ஆம் ஆண்டின் இயற்கை அனர்த்த மரணங்கள் மற்றும் இடப் பெயர்வுகளை பாரிய அளவில் குறைக்க முடிந்தமை மிக விசேடமான ஒரு வெற்றியாக இங்கு குறிப்பிட வேண்டும்.

மனித வள அபிவிருத்தி தொடர்பில் அவதானம் செலுத்துகையில், அதிகளவான பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு 2018 ஆம் ஆண்டில் பதவியுயர்வுகள் வழங்க முடிந்துள்ளது. விசேட படையணி உள்ளடங்கலாக இலங்கை பொலிசுக்கு 2313 உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு இலங்கை பொலிஸ் 2018 ஆம் ஆண்டில் நடவடிக்கை எடுத்துள்ளது.

இலங்கை பொலிசின் சேவைகளை மேலும் விரிவுப்படுத்தி, மத்தெகொட மற்றம் அக்கரரயன்குளம் ஆகிய இரு பொலிஸ் நிலையங்களை நாம் தாபிக்கவுள்ளோம்.

இங்கு மிகச் சுருக்கமான சில விடயங்களே குறிப்பிடப்பட்டுள்ளன. 2018 ஆம் ஆண்டின் இலங்கை பொலிசின் செயலாற்றுகை குறித்த இன்னும் பல தகவல்கள் இவ் அறிக்கையில் உள்ளடங்கியுள்ளதுடன், அது குறித்து மேலும் அவதானத்துடன் படிக்குமாறு உங்களுக்கு அழைப்பு விடுக்கிறேன்.

இலங்கை பொலிஸ் 152 வருடங்களைக் கடந்து வந்த பாதையில் எதிர் காலத்திலும் பெருமிதத்துடன் நாட்டின் சமாதானத்திற்காக சேவையை வழங்குவதற்கு உங்களது ஒத்துழைப்பை தொடர்ந்தும் எதிர்பார்க்கின்றேன்.

**பூஜித் ஜயசுந்தர**
**பொலிஸ்மா அதிபர்**

## நோக்கு

குற்றம் மற்றும் வன்முறை
குறித்த அச்சமின்றி
நம்பிக்கையுடன்
வாழக் கூடிய சமாதானம் மிக்க
சூழல் ஒன்றை உருவாக்கல்

## செயற்பணி

அனைவருக்கும் சமமான,
எவருக்கும் தீங்கு விளைவிக்காது
குற்றங்களையும் பயங்கரவாதத்தையும்
தடுப்பதற்கும், சமாதானத்தைப்
பாதுகாப்பதற்கும்,
நாட்டில் சட்டத்தைப் பேணுவதற்கும்
இலங்கை பொலிஸ்
நம்பிக்கையுடன் செயற்படக் கட்டுப்பட்டுள்ளது

# இலங்கை பொலிசின் பணிகள்

- பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் சட்டத்தைப் பேணுதல்
- குற்றங்களைக் கட்டுப்படுத்தல் மற்றும் தடுத்தல்
- குற்றப் புலனாய்வு மற்றும் வழக்குகளைக் கையாளுதல்
- வீதிப் பாதுகாப்பு மற்றும் போக்குவரத்துக் கட்டுப்பாடு
- பிரமுகர்கள் பாதுகாப்பு
- சுற்றாடல் பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் அனர்த்த நேரங்களில் உரிய பிரிவினருக்கு உதவி வழங்குதல்
- கலகங்கள் மற்றம் ஊழல் ஒழிப்பு மற்றும் பல்வேறு முறைப்பாடுகளுக்குத் தீர்வு வழங்கல்
- பொலிஸ் இசைவுச் சான்றிதழ் மற்றும் பின்னணி அறிக்கைகளை உரிய பிரிவுகள் மற்றும் நபர்களுக்கு வழங்குதல்

# உள்ளடக்கம்

.


| இலக்கம | பக்க |
|---|---|
| 01. இலங்கை பொலிசின் கட்டமைப்பு | 01 – 04 |
| 02. குற்றங்கள் | 05 – 13 |
| 03. சிறு குற்றங்கள் | 14 – 18 |
| 04. பல்வேறு முறைப்பாடுகள் | 19 – 22 |
| 05. தற்கொலை செய்து கொள்ளல் | 23 – 31 |
| 06. மது மற்றும் சுயநினைவிழத்தற் பொருட்கள் குறித்த குற்றங்கள் | 32 – 37 |
| 07. ஊழல் மற்றும் நியதிச்சட்ட குற்றங்கள் | 38 – 45 |
| 08. வாகன விபத்தக்கள் | 46 – 52 |
| 09. திடீர் மரணங்கள் | 53 – 56 |
| 10. இயற்கை அனர்த்தங்கள் | 57 – 58 |
| 11. பொது மக்களுக்கான சிறப்பு சேவைகள | 59 – 60 |
| 12. சமூக பொலிஸ் சேவை | 61 – 68 |
| 13. சூழல் பாதுகாப்பு | 69 – 70 |
| 14. மனித வள அபிவிருத்தி | 71 – 83 |
| 15. பௌதீக வளங்கள் அபிவிருத்தி | 84 – 90 |
| 16. நிதிசார் முன்னேற்றம் | 91 – 92 |
| 17. 2018 ஆம் ஆண்டின் செயலாற்றுகை பற்றிய பொழிப்பு | 93 – 95 |
| 18. இணைப்பு 01 - சுருக்கப் பயன்பாடுகளுக்கான விளக்கம | 96 – 96 |
| 19. இணைப்பு 02 - திடீர் மரணங்கள் அட்டவணை | 97 – 97 |
| 20. இணைப்பு - 03 உள்நாட்டு விளையாட்டுப் போட்டி வெற்றிகள | 98 – 99 |
| 21. இணைப்பு 04 - நிர்மாணங்கள் | 100 – 105 |

# 01. இலங்கை பொலிசின் கட்டமைப்பு



## 1.1. பிரதேச பொலிஸ் பிரிவுக் கட்டமைப்பு (பிரதேச பொலிஸ் பிரிவுகளின் எண்ணிக்கை 42 ஆகும்)



## 1.2 செயற்பாட்டு பொலிஸ் பிரிவுக் கட்டமைப்பு (செயற்பாட்டு பொலிஸ் பிரிவுகளின் எண்ணிக்கை 62 ஆகும



### *1.3. விசேட அதிரடிப்படையினரின் கட்டமைப்பும் அதனது செயற்பாடுகளும்*




## 1.3.1 விசேட அதிரடிப்படையினரின் பணிகள்

- குற்றத்தடுப்பு நடவடிக்கைகள் (ஒழுங்கமைக்கப்பட்ட குற்றம்)
- உள்நாட்டு வெளிநாட்டு பிரபுக்களுக்கான பாதுகாப்பு பணிகள்.
- தேடுதல்களையும் வெடிகுண்டு அகற்றும் செயற்பாடுகளையும் முன்னெடுத்தல்.
- சட்டம்இ ஒழுங்கினை நிலைநாட்டுவதற்கு இலங்கை பொலிஸிற்கு உதவுதல்.
- இயற்கை அல்லது மனித செயற்பாடுகள் காரணமாக ஏற்படும் அவசர நிலைமைகளின் போது ஒழுங்கினை வழமைக்கு கொண்டுவர பொதுமக்களுக்கு உதவுதல்.
- சமூக விரோத செயற்பாடுகளையும் தவறான செயற்பாடுகளையும் (போதைப்பொருள்/கஞ்சாஇ மோசடி ) தடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- இயற்கை பாரம்பரியத்தை பாதுகாக்கவும் பொதுமக்களால் சுற்றுச்சூழல் பாதிக்கப்படுவதை தடுக்கவும் நடவடிக்கை எடுத்தல்.
- உயிர் காப்பு பணிகளை முன்னெடுத்தல்.

# 02. குற்றங்கள்

அடிப்படையில் குற்றங்களானது பாரிய குற்றங்கள் மற்றும் சிறு குற்றங்கள் என வகைப்படுத்தப்பட்டுள்ளது. மிகப் பாரதூரமான குற்றங்களாகக் கருதப்படும் குற்றங்களை பாரிய அளவிலான குற்றங்கள் எனவும் பாரதூரமற்ற குற்றங்களை சிறு குற்றங்கள் எனவும் சரளமாக விளக்கலாம். இவ் அத்தியாயத்தின் கீழ் 2018 ஆம் ஆண்டில் குற்றங்கள் அறிக்கையிடப்படல் மற்றும் தீர்த்தல் குறித்த தகவல்கள் 2016 மற்றும் 2017 ஆகிய இரு வருடங்களுடன் ஒப்பீட்டு ரீதியில் தரப்பட்டுள்ளன.

## 2.1 பாரிய குற்றங்கள்

இலங்கை பொலிசில் அறிக்கையிடப்படும் குற்றங்களுள் மிகப் பாரதூரமான குற்ற வகையைச் சார்ந்த குற்றங்கள் பாரிய குற்றங்கள் எனப்படுகின்றன. இத்தகைய குற்றங்கள் மூலம் ஆளொருவருக்கும் பொதுவில் சமூகத்திற்கும் ஏற்படுத்தப்படும் பாதிப்பு மிகப் பெரிதாகும். இலங்கை பொலிசானது இப் பாரிய குற்றங்களை 26 வகைகளின் கீழ் அறிக்கையிடுவதோடு, இவ் உப அத்தியாயத்தின் மூலம் 2018 ஆம் ஆணடில் பொலிசில் அறிக்கையிடப்பட்ட பாரிய குற்றங்கள் குறித்த புள்ளிவிபரவியல் தரவுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. அத் தரவுகள் கடந்த இரு வருடங்கள் அதாவது, 2016 மற்றும் 2017 ஆகிய வருடங்களுடன் ஒப்பீட்டு ரீதியில் பகுப்பாய்வு செய்யப்பட்டு தரப்பட்டுள்ளன.

அட்டவணை இலக்கம் 01

**2016 – 2018 பாரிய குற்றங்கள் அட்டவணை**

| பாரிய குற்றங்கள் | | 2016 | | | | 2017 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | அறிக்கையிடப் பட்டவை | விசாரிக்கப் பட்டு வருபவை | தீர்க்கப் பட்டவை | தீர்க்கப் படும் சதவீதம் | அறிக்கையிடப் பட்டவை | விசாரிக்கப் பட்டு வருபவை | தீர்க்கப் பட்டவை | தீர்க்கப் படும் சதவீதம் | அறிக்கையிடப் பட்டவை | விசாரிக்கப் பட்டு வருபவை | தீர்க்கப் பட்டவை | தீர்க்கப் படும் சதவீதம் |
| 1 | வன்கொடுமை | 738 | 73 | 665 | 90% | 647 | 64 | 583 | 90% | 754 | 82 | 672 | 89% |
| 2 | கடத்தல் | 297 | 33 | 264 | 89% | 251 | 21 | 230 | 92% | 260 | 26 | 234 | 90% |
| 3 | தீ வைத்தல் அல்லது வெடி பொருட்களினால் அனர்த்தத்தை ஏற்படுத்தல் | 486 | 119 | 367 | 76% | 418 | 102 | 316 | 76% | 460 | 114 | 346 | 75% |
| 4 | 25000 ரூபாவிற்கு மேல் நட்டம் ஏற்படும் வகையில் மேற்கொள்ளப்படும் அனர்த்தங்கள் | 394 | 36 | 358 | 91% | 424 | 27 | 397 | 94% | 476 | 53 | 423 | 89% |
| 5 | வீடுடைப்பு | 10287 | 4589 | 5698 | 55% | 8913 | 3394 | 5519 | 62% | 8085 | 3217 | 4868 | 60% |
| 6 | படுகாயம் ஏற்படுத்தல் | 1205 | 29 | 1176 | 98% | 1075 | 25 | 1050 | 98% | 942 | 30 | 912 | 97% |
| 7 | ஆபத்தான ஆயுதங்களினால் (கத்தி போன்றவை) காயம் விளைவித்தல் | 2358 | 67 | 2291 | 97% | 2131 | 66 | 2065 | 97% | 1947 | 92 | 1855 | 95% |
| 8 | மனிதப் படுகொலைகள் | 502 | 37 | 465 | 93% | 452 | 32 | 420 | 93% | 489 | 47 | 442 | 90% |
| 9 | மனிதப் படுகொலைக்கு முயற்சித்தல்/தனது உயிருக்கு ஆபத்து ஏற்படுத்திக் கொள்ள உடந்தையாக இருத்தல் | 160 | 12 | 148 | 93% | 163 | 12 | 151 | 93% | 144 | 12 | 132 | 92% |
| 10 | பெண்கள் துஷ்பிரயோகம் (16 வயதிற்கு மேற்பட்ட) | 350 | 21 | 329 | 94% | 294 | 15 | 279 | 95% | 346 | 23 | 323 | 93% |
| 11 | நியதிச்சட்ட பெண்கள் துஷ்பிரயோகம் (16 வயதிற்குக் கீழான) பாதிக்கப்பட்டவரின் சம்மதத்துடன் | 1394 | 19 | 1375 | 99% | 1206 | 37 | 1169 | 97% | 1196 | 34 | 1162 | 97% |
| | நியதிச்சட்ட பெண்கள் துஷ்பிரயோகம் (16 வயதிற்குக் கீழான) பாதிக்கப்பட்டவரின் சம்மதமின்றி | 292 | 8 | 284 | 97% | 232 | 13 | 219 | 94% | 248 | 17 | 231 | 93% |
| 12 | சட்ட விரோத கூட்டங்கள் /கலகங்கள் | 21 | 0 | 21 | 100% | 22 | 1 | 21 | 95% | 39 | 4 | 35 | 90% |
| 13 | கொள்ளை | 3455 | 1031 | 2424 | 70% | 3366 | 872 | 2494 | 74% | 3146 | 798 | 2348 | 75% |
| 14 | இயற்கைக்கு முரணான குற்றங்கள் மற்றும் கொடூர பாலியல் துஷ்பிரயோகம் | 716 | 16 | 700 | 98% | 616 | 21 | 595 | 97% | 750 | 39 | 711 | 95% |
| 15 | பலவந்தமாகப் பெற்றுக் கொள்ளல் /ஏதேனுமொரு ஆதனம் அல்லது பெறுமதியான பிணை அல்லது பெறுமதியான பிணையாக மாற்றக் கூடிய ஒப்பமிடப்பட்ட அல்லது இலச்சினையிடப்பட்ட ஏதேனுமொன்று) | 131 | 14 | 117 | 89% | 178 | 25 | 153 | 86% | 149 | 16 | 133 | 89% |
| 16 | 300000/- ற்கு (முந்நூறு இலட்சத்திற்கு மேற்பட்ட பெறுமதியுடைய குற்றவியல் ரீதியிலான தவறான பயன்பாடு, குற்றவியல் ரீதியிலான நம்பிக்கை மீறல் மற்றும் மோசடி | 5472 | 1964 | 3508 | 64% | 6192 | 1702 | 4490 | 73% | 6090 | 1967 | 4123 | 68% |
| 17 | 25000 ரூபாவிற்கு மேற்பட்ட பெறுமதியுடைய பயிர்ச்செய்கைப் பொருட்களைத் திருடுதல் | 75 | 12 | 63 | 84% | 80 | 5 | 75 | 94% | 48 | 7 | 41 | 85% |
| | 25000 ரூபாவிற்கு மேற்பட்ட பெறுமதியுடைய மாடுகளைத் திருடுதல் | 640 | 125 | 515 | 80% | 802 | 145 | 657 | 82% | 777 | 166 | 611 | 79% |
| | 25000 ரூபாவிற்கு மேற்பட்ட பெறுமதியுடைய ஆதனங்களைத் திருடுதல் | 5448 | 1843 | 3605 | 66% | 5261 | 1366 | 3895 | 74% | 5171 | 1337 | 3834 | 74% |
| 18 | போலி பணத்தாள் வைத்திருத்தல் மற்றும் அச்சிடுதல் | 76 | 2 | 74 | 97% | 88 | 2 | 86 | 98% | 74 | 2 | 72 | 97% |

| | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 19 | அரசுக்கு எதிரான முறையில் மேற்கொள்ளப்படும் குற்றங்கள் | 0 | 0 | 0 | | 0 | 0 | 0 | | 0 | 0 | 0 | |
| 20 | சிறுவர்களை கொ^ரமான முறையில் நடாத்தல் | 107 | 4 | 103 | 96% | 88 | 3 | 85 | 97% | 104 | 5 | 99 | 95% |
| 21 | சிறுவர்களிடம் முறையற்ற வகையில் பாலியல் இன்பம் அனுபவித்தல் | 49 | 0 | 49 | 100% | 43 | 0 | 43 | 100% | 50 | 2 | 48 | 96% |
| 22 | கடத்தல் மற்றும் ஆட்கடத்தல் வியாபாரத்தில் ஈடுபடல் | 26 | 2 | 24 | 92% | 15 | 1 | 14 | 93% | 23 | 8 | 15 | 65% |
| 23 | மன அழுத்த ஆயுதக் கட்டளைச் சட்டத்தின் கீழான குற்றங்கள் | 78 | 6 | 72 | 92% | 63 | 3 | 60 | 95% | 74 | 4 | 70 | 95% |
| 24 | தன்னியக்கத் துப்பாக்கிகள் அல்லது ரிப்பீட்டர் துப்பாக்கிகளை தம்வசம் வைத்திருத்தல் | 28 | 0 | 28 | 100% | 25 | 0 | 25 | 100% | 24 | 0 | 24 | 100% |
| 25 | ஹெரோயின், கொக்கேன், மோப்பீன் என்பவற்றை குறிப்பிட்ட அளவிலேனும் தயாரித்தல், விற்பனை செய்தல், இறக்குமதி செய்தல் அல்லது ஏற்றுமதி செய்தல், ஹெரோயின் 2 கிராம் அல்லது அதற்கு மேல், கொக்கேன் 02 கிராம் அல்லது அதற்கு மேல், மோப்பீன் 03 கிராம் அல்லது அதற்கு மேல், ஒப்பியம் 500 கிராம் அல்லது அதற்கு மேல்,கஞ்சா 5 கிலோ கிராம் அல்லது அதற்கு மேல், ஹஸீஸ் 1 கிலோ கிராம் அல்லது அதற்கு மேல்,என்ற அளவுகளில் ஆபத்தான போதைப் பொருட்களை தம்வசம் வைத்திருத்தல் | 2078 | 6 | 2072 | 100% | 2845 | 7 | 2838 | 100% | 4387 | 5 | 4382 | 100% |
| 26 | பொலிஸ் உத்தியோகத்தர்களின் கடமைகளுக்கு இடையூறு விளைவித்தல் | 74 | 0 | 74 | 100% | 89 | 2 | 87 | 98% | 102 | 2 | 100 | 98% |
| | மொத்தம் | **35902** | **10068** | **25940** | **72%** | **35081** | **7963** | **27203** | **78%** | **35341** | **8109** | **27340** | **77%** |

மூலம் - பொலிஸ் புள்ளிவிபரவியல் அலகு

## ❖ தரவுகள் பகுப்பாய்வு

மேற்குறித்த அட்டவணை இலக்கம் 01 இன் தரவுகளுக்கு அமைய 2016 ஆம் ஆண்டில் 502 மனிதப் படுகொலைகள் அறிக்கையிடப்பட்டுள்ளதுடன், 2017 ஆம் ஆண்டில் குறித்த எண்ணிக்கையானது 452 வரை 10% ஆல் குறைந்துள்ளது. 2018 ஆம் ஆண்டில் 489 மனிதப் படுகொலைகள் அறிக்கையிடப்பட்டுள்ளதுடன், அதனை 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 3மூ குறைவைக் காட்டினாலும், 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டளவில் 8மூ அதிகரிப்பாகும். மனிதப் படுகொலைகளின் தீர்வுகளின் வீதத்தை எடுத்துக் கொண்டால், 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் 93% ஆகக் காணப்பட்டதுடன், 2018 ஆம் ஆண்டின் தீர்வு வீதம் 90% ஆக வீழ்ச்சி கண்டுள்ளது.

மனித வாழ்க்கைக்குப் பாரியளவில் பாதிப்பை ஏற்படுத்தும் மற்றும் பாரிய அளவிலான குற்றங்களுள் அதிக அளவில் அறிக்கையிடப்படும் ஒரு வகையான வீடுடைப்பு குறித்த தரவுகளை நோக்குகையில், 2017 ஆண்டுடன் ஒப்பீட்டளவில் 2018 ஆம் ஆண்டில் குறிப்பிடத்தக்க அளவு வீழ்ச்சி ஏற்பட்டுள்ளமை புலனாகிறது. கடந்த மூன்று வருடங்களுள் வீடுடைப்புச் சம்பவங்களில் வீழ்ச்சியைக் காண முடிவதோடு, வீடுடைப்பில் ஈடுபடுவோர் அதிகளவில் கைதானமை மற்றும் பொலிசின் குற்ற ஒழிப்புச் செயற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளமை போன்றன இவ் வீழ்ச்சிக்குக் காரணமாகியுள்ளமையானது கடந்த சில வருடங்களின் தரவு ஆய்வுகளினால் தெளிவாகின்றது.

அதற்கமைய 2016 ஆம் ஆண்டில் 10287 ஆக இருந்த வீடுடைப்பானது 2017 ஆம் ஆண்டில் 8913 வரை 13% ஆலும், 2018 ஆம் ஆண்டில் அது மேலும் சரிவடைந்து 8085 வரை 9% ஆலும் குறைவடைந்துள்ளது. 2018 ஆம் ஆண்டில் வீடுடைப்புக் குற்றங்களின் தீர்வு சதவீதமானது 60% ஆகும்.

ஒரு நபருக்குப் பாரிய அளவில் உள மற்றும் சரீர அழுத்தத்தை ஏற்படுத்தும் குற்றமான பெண்களுக்கு எதிரான பாலியல் து்பிரயோகத்தை எடுத்துக் கொண்டால் இக் குற்ற அட்டவணையானது மூன்று வகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அதன் முதல் வகுதியான 16 வயதிற்குக் குறைந்த பெண்களை பாலியல் து்பிரயோகத்திற்கு உட்படுத்தும் குற்றமானது 2018 ஆம் ஆண்டில் குறிப்பிடத்தக் அளவு அதிகரித்துள்ளமையைக் காணலாம். 2018 ஆம் ஆண்டில் பெண்களுக்கு எதிரான பாலியல் து்பிரயோக குற்றங்கள் 346 அறிக்கையிடப்பட்டுள்ளன. 2016 ஆம் ஆண்டில் இக்குற்றங்கள் 350 அறிக்கையிடப்பட்டுள்ளதுடன், 2017 ஆம் ஆண்டில் அவ் எண்ணிக்கையானது 294 வரை 16% வீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்தது. அதற்கமைய 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டளவில் பெண்களுக்கு எதிரான கற்பழிப்புக் குற்றங்களின் எண்ணிக்கையானது 2018 ஆம் ஆண்டில் 346 வரை 18% வீதத்தால் உயர்வடைந்துள்ளது. 2018 ஆம் ஆண்டில் தீர்வு வழங்கப்பட்ட 16 வயதிற்குக் மேற்பட்ட பெண்களுக்கு எதிரான கற்பழிப்புக் குற்றங்களின் எண்ணிக்கை 323 ஆகக் காணப்பட்டதுடன், அது 93% ஆகும்.

இரண்டாம் வகுதியான 16 வயதிற்குக் குறைந்த பாதிக்கப்பட்டவர்களின் விருப்பத்துடன் மேற்கொள்ளப்பட்ட பாலியல் துஂபிரயோகக் குற்றங்களை எடுத்துக் கொண்டால் 2016 ஆம் ஆண்டில் இவ்வாறான குற்றங்கள் 1394 அறிக்கையிடப்பட்டுள்ளதுடன், 2017 ஆம் ஆண்டில் குறித்த குற்றங்கள் 1206 வரை 13% ஆல் குறைவடைந்துள்ளன. 2018 ஆம் ஆண்டில் குறித்த குற்றங்கள் 1196 வரை 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியில் சிறியதொரு வீழ்ச்சியைக் (0.8%) காட்டுகிறது. ஆழமாகப் பகுப்பாய்வு செய்கையில், பெண்களுக்கெதிரான இப் பாலியல் துஂபிரயோகக் குற்றங்கள் பெரும்பாலும் காதல் தொடர்புகள் காரணமாகவே இடம்பெற்றுள்ளமையே இதன் மூலம் புலனாகிறது. 2018 ஆம் ஆண்டில் இக் குற்றங்களின் தீர்வு சதவீதமானது 97% ஆகும்.

மூன்றாம் வகுதியானது 16 வயதிற்குக் குறைவான பாதிக்கப்பட்டவர்களின் விருப்பமின்றி மேற்கொள்ளப்பட்ட பாலியல் துஂபிரயோகங்களாகும். 2017 ஆம் ஆண்டில் இக் குற்றங்கள் 232 அறிக்கையிடப்பட்டுள்ளதுடன், 2018 ஆம் ஆண்டில் 248 வரை 7% அதிகரிப்பைக் காணலாம். ஒட்டுமொத்தமாக நோக்குகையில் 2018 ஆம் ஆண்டில் அனைத்து வகுதிகளிலுமான பெண்களுக்கெதிரான 1790 பாலியல் துஂபிரயோகங்கள் இடம்பெற்றுள்ளதுடன், அவற்றுள் 1716 அதாவது 96% குற்றங்கள் வெற்றிகரமாக விசாரணை செய்யப்பட்டு தீர்வுகள் வழங்கப்பட்டுள்ளன.

பாரிய அளவிலான குற்றங்களுள் மிக அச்சுறுத்தலான குற்றமாகக் கொள்ளைக் குற்றத்தைக் குறிப்பிடலாம். அட்டவணையில் காணப்படும் கடந்த மூன்று வருடங்களின் தரவுகளைப் பகுப்பாய்வு செய்கையில், அக் குற்றங்கள் குறைவடைந்து செல்லும் போக்கைக் காணலாம். 2016 ஆம் ஆண்டில் 3455 கொள்ளைக் குற்றங்கள் அறிக்கையிடப்பட்டுள்ளதுடன், அது 2017 ஆம் ஆண்டில் 3366 வரை 2% ஆல் குறைவடைந்திருந்ததோடு, 2018 ஆம் ஆண்டில் 3146 வரை 6% ஆல் மேலும் குறைவடைந்துள்ளது.

அட்டவணைக்கு அமைவாக பாரிய பாலியல் துஂபிரயோகம் எனப்படும் குற்றங்களின் குறிப்பிடத்தக்க அளவிலான உயர்வை 2018 ஆம் ஆண்டில் காணக் கூடியதாக உள்ளது. அதற்கமைய 2017 ஆம் ஆண்டில் 616 இருந்த இக் குற்றங்கள் 2018 ஆம் ஆண்டில் 750 வரை 22% ஆல் அதிகரித்துள்ளது. பாரிய பாலியல் துஂபிரயோகக் குற்றங்கள் குறித்த புலனாய்வு நடவடிக்கைகள் 2018 ஆம் ஆண்டில் 94% உயர் மட்டத்தில் பேணப்பட்டுள்ளன.

அட்டவணையின் தரவுகளுக்கு அமைவாக மிக உயர்ந்த அளவில் அறிக்கையிடப்படும் குற்றமாகக் கருதக் கூடிய மூன்று இலட்சத்திற்கும் மேற்பட்ட குற்றவியல் ரீதியிலான முறைகேடான துஂபிரயோகம், நம்பிக்கை மீறல் மற்றும் மோசடி குறித்த குற்றங்களை நோக்குகையில், 2017 ஆம் ஆண்டை விட 2018 ஆம் ஆண்டில் ஓரளவு குறைவைக் காட்டினாலும் 2016 ஆம் ஆண்டை விட அதிகரிப்பைக் காட்டுகிறது. தொடர்ச்சியான அவதானத்திற்கு உள்ளாகும் கொலை, கொள்ளை போன்ற குற்றங்களைப் போன்றே மக்கட் சமூகத்தில் பெருமளவில் பேசப்படாவிட்டாலும் இக் குற்றங்கள் மூலமாகவும் சமூகத்திற்கு ஓரளவு தாக்கம் ஏற்படுகிறது. 2016 ஆம் ஆண்டில் இக் குற்றங்கள் 5472 அறிக்கையிடப்பட்டதுடன், 2017 ஆம் ஆண்டில் 6192 வரை 13% ஆல் இக் குற்றங்கள் அதிகரித்துள்ளன. 2018 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்ட இக் குற்றங்களின் எண்ணிக்கை 6090 ஆக இருந்ததுடன், 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியில் 2% வீழ்ச்சியைக் காட்டுகிறது. இக் குற்றங்களுக்கான தீர்வு நடவடிக்கைகளின் முன்னேற்றம் குறித்து கடந்து சில வருடங்களில் அவதானிக்கையில், இது தொடர்பிலான விசாரணைகளின் முன்னேற்றம் 75% மட்டத்தைக் கடந்திராமையே புலனாகிறது.

பாரிய குற்றங்களுள் நியதிச்சட்ட பெண்களுக்கு எதிரான பாலியல் துஂபிரயோகங்களைத் தவிர சிறுவர்களுக்கு எதிரான குற்றங்களின் இரு வகைகள் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. அதாவது, சிறுவர்ளை கொடூரமான முறையில் நடாத்துதல் மற்றும் அவர்களிடம் முறைகேடான பாலியல் இன்பம் அனுபவித்தல் போன்ற குற்றங்களாகும். இவ் இரு வகையான குற்றங்களையும் நோக்குகையில், 2016 ஆம் ஆண்டு அறிக்கையிடப்பட்ட குற்றங்களின் எண்ணிக்கை 156 ஆகும். 2017 ஆம் ஆண்டில் இக் குற்றங்கள் 131 வரை 16% ஆல் குறைவடைந்திருந்தாலும், மீண்டும் 2018 ஆம் ஆண்டில் 154 வரை 17% ஆல் அதிகரித்துள்ளது, இக் குற்றங்கள் தொடர்பான

இலங்கை பொலிஸ் புலனாய்வு முன்னேற்றத்தை கடந்த மூன்று வருடங்களில் நோக்குகையில், தீர்வு வீதமானது 96% ற்கு அப்பாற்பட்ட மட்டத்தில் காணப்படுகிறது.

நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்லும் பாரிய குற்ற வகையாகப் போதைப்பொருள் குற்றங்களைக் குறிப்பிடலாம். 2078 போதைப்பொருள் குற்றங்கள் 2016 ஆம் ஆண்டு அறிக்கையிடப்பட்டுள்ளன. 2017 ஆம் ஆண்டில் அக் குற்றங்கள் 2845 அறிக்கையிடப்பட்டுள்ளதுடன், 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டளவில் அது 37% அதிகரிப்பாகும். 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டளவில் 2018 ஆம் ஆண்டில் இக் குற்றங்கள் 54% அதிகரித்துள்ளதுடன், அதற்கமைய 2018 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்டுள்ள போதைப்பொருள் குற்றங்களின் எண்ணிக்கை 4389 ஆகும்.

போதைப்பொருள் குற்றப் புலனாய்வின் போது இலங்கை பொலிஸ் உயர்ந்த மட்ட முன்னேற்றத்தைக் காட்டியுள்ளதுடன், 2016, 2017 மற்றும் 2018 ஆகிய மூன்று வருடங்களிலும் போதைப்பொருள் குற்றங்களுக்கான தீர்வு சதவீதம் 99% ஐ விஞ்சியுள்ளது.

## 2.2. பெண்களுக்கு எதிரான பாரிய குற்றங்கள்

இலங்கை பொலிசில் அறிக்கையிடப்படும் பாரிய குற்றங்களுள் பெண்களுக்கு எதிரான பாரிய குற்றங்கள் பிறிதாக வகைப்படுத்தப்படுகின்றன. 2018 ஆம் ஆண்டின் ஒட்டுமொத்தக் குற்றங்களுள் பெண்களுக்கு எதிரான பாரிய குற்றங்கள் அறிக்கையிடப்படலானது 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளுடன் ஒப்பீட்டளவில் பின்வரும் அட்டவணை மூலம் முன்வைக்கப்படுகிறது

அட்டவணை இலக்கம் 02 **2016 – 2018 வரை பெண்களுக்கு எதிரான பாரிய குற்றங்களின் அட்டவணை**

| | குற்றங்கள் | 2016 | | | | 2017 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | அறிக்கையிடப்பட்டவை | விசாரிக்கப்பட்டு வருபவை | தீர்க்கப்பட்டவை | தீர்க்கப்படும் சதவீதம் | அறிக்கையிடப்பட்டவை | விசாரிக்கப்பட்டு வருபவை | தீர்க்கப்பட்டவை | தீர்க்கப்படும் சதவீதம் | அறிக்கையிடப்பட்டவை | விசாரிக்கப்பட்டு வருபவை | தீர்க்கப்பட்டவை | தீர்க்கப்படும் சதவீதம் |
| 1 | கொலை | 109 | 62 | 47 | 43% | 77 | 35 | 42 | 55% | 111 | 55 | 40 | 36% |
| 2 | தனது உயிருக்கு ஆபத்து ஏற்படுத்திக் கொள்ள உடந்தையாக இருத்தல் | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 3 | மனிதக் கொலைக்கு முயற்சித்தல் | 23 | 18 | 5 | 22% | 10 | 6 | 4 | 40% | 11 | 9 | 2 | 18% |
| 4 | கற்பழிப்பு | 350 | 163 | 187 | 53% | 294 | 102 | 192 | 65% | 278 | 141 | 137 | 49% |
| 5 | துர்நடத்தை | | | | | | | | | | | | |
| 6 | படுகாயம் /கத்தி போன்றவற்றால் காயம் ஏற்படுத்தல் | 320 | 150 | 170 | 53% | 297 | 108 | 189 | 64% | 241 | 144 | 97 | 40% |
| 7 | இயற்கைக்கு முரணான குற்றங்கள் | 48 | 23 | 25 | 52% | 33 | 15 | 18 | 55% | 5 | 5 | 0 | 0% |
| 8 | பாரதூரமான பாலியல் துர்பிரயோகங்கள் | | | | | | | | | 28 | 16 | 12 | 43% |
| 9 | வன்கொடுமை | 103 | 52 | 51 | 50% | 75 | 25 | 50 | 67% | 7 | 6 | 0 | 0% |
| 10 | கடத்தல் | | | | | | | | | 68 | 37 | 30 | 44% |
| 11 | பாலியல் இச்சைகளுக்காக பெண்களை விநியோகித்தல் | 15 | 8 | 7 | 47% | 4 | 1 | 3 | 75% | 2 | 2 | 0 | 0% |
| 12 | பாலியல் இச்சை தொடர்பிலான வியாபாரம் | | | | | | | | | 0 | 0 | 0 | 0% |
| 13 | நபர்களுக்கிடையிலான மோசமான நடத்தை | 0 | 0 | 0 | 0% | 0 | 0 | 0 | 0% | 0 | 0 | 0 | 0% |
| 14 | வேறு | 0 | 0 | 0 | 0% | 0 | 0 | 0 | 0% | 24 | 13 | 11 | 46% |
| | மொத்தம் | 968 | 476 | 492 | 51% | 790 | 292 | 498 | 63% | 775 | 428 | 329 | 42% |

மூலம் - பொலிஸ் புள்ளிவிபரவியல் அலகு

❖ தரப் பகுப்பாய்வு

பெண்களுக்கு எதிரான பாரிய குற்றங்களுள் கொலை தொடர்பில் முதலில் எடுத்துக் கொண்டால், அக் குற்றங்களில் தெளிவானதொரு அதிகரிப்பை 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியில் 2018 ஆம் ஆண்டில் காணலாம். அதற்கமைய 2017 ஆம் ஆண்டில் இடம்பெற்ற 77 மனிதப் படுகொலைகளுடன் ஒப்பீட்டு ரீதியில் 2018 ஆம் ஆண்டில் 111 மனிதப் படுகொலைகள் இடம்பெற்றுள்ளதுடன், சதவீதமாகக் கூறுகையில் 44மூ அதிகரிப்பாகும். அட்டவணைக்கு அமைவாக 2016 ஆம் ஆண்டில் இடம்பெற்ற பெண்களுக்கு எதிரான மனிதப் படுகொலைகளின் எண்ணிக்கை 109 ஆக இருந்ததுடன், அது 2017 ஆம் ஆண்டில் 77 வரை 29மூ ஆல் குறைவடைந்துள்ளது. இம் மனிதப் படுகொலைகளுக்கான தீர்வுகளின் சதவீதமும் 2017 ஆம் ஆண்டில் 45மூ ஆகக் காணப்பட்டதுடன், 2018 ஆம் ஆண்டில் அது 42மூ வரை வீழ்ச்சியடைந்துள்ளது.

அட்டவணைக்கு அமைவாக கற்பழிப்புக் குற்றங்கள் 2016 ஆம் ஆண்டில் 350 அறிக்கையிடப்பட்டிருந்ததுடன், 2017 ஆம் ஆண்டில் அது 294 வரை 16% வரை வீழ்ச்சியடைந்துள்ளது. 2018 ஆம் ஆண்டில் 274 வரை இக் குற்றங்கள் மேலும் 17% ஆல் வீழ்ச்சியடைந்துள்ளது. அதே போன்று குற்றங்களுக்கானத் தீர்வை வழங்கும் சதவீதத்தை எடுத்துக் கொண்டால், 2016 ஆம் ஆண்டில் 47% உம், 2017 ஆம் ஆண்டில் 35% உம் காணப்பட்டதோடு, 2018 ஆம் ஆண்டில் குற்றங்களுக்கானத் தீர்வை வழங்கும் சதவீதம் 49% வரை உயர்வடைந்துள்ளது.

2016 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆம் ஆண்டு வரை பெண்களுக்குப் படுகாயம் ஏற்படுத்தும் குற்றங்கள் குறித்த தரவுகளை நோக்கினால், குறித்த குற்றங்கள் படிப்படியாகக் குறைவடைந்துள்ளமையைக் காணலாம். 2016 ஆம் ஆண்டில் இக் குற்றங்கள் 320 உம், 2017 ஆம் ஆண்டில் 297 உம் அறிக்கையிடப்பட்டதோடு, 2018 ஆம் ஆண்டில் 241 அறிக்கையிடப்பட்டுள்ளன. அதற்கமைய 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியில் 2017 ஆம் ஆண்டில் பெண்களுக்குப் படுகாயம் ஏற்படுத்தும் குற்றங்கள் 7% ஆல் குறைவடைந்ததோடு, 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியில் 2018 ஆம் ஆண்டில் 19% ஆல் குறைவடைந்துள்ளது. இக் குற்றங்களுக்கான தீர்வினை வழங்கும் சதவீதத்தை எடுத்துக் கொண்டால் 2016 ஆம் ஆண்டில் 53% உம், 2017 ஆம் ஆண்டில் 64% உம் காணப்பட்டதோடு, 2018 ஆம் ஆண்டில் குற்றங்களுக்கானத் தீர்வை வழங்கும் சதவீதம் 40% வரை குறைவடைந்துள்ளது.

பெண்களுக்கு எதிரான பாரதூரமான பாலியல் துஷ்பிரயோகம் எனும் குற்றத்தை எடுத்துக் கொண்டால், 2018 ஆம் ஆண்டில் இக் குற்றங்கள் 28 அறிக்கையிடப்பட்டிருந்தன. 2016 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்ட குற்றங்களின் எண்ணிக்கை 48 ஆ இருந்ததோடு, 2017 ஆம் ஆண்டில் 33 குற்றங்கள் 3 ஆல் குறைவடைந்ததோடு, 2018 ஆம் ஆண்டில் பெண்களுக்கு எதிரான பாரதூரமான பாலியல் துஷ்பிரயோகக் குற்றங்கள் 28 வரை 15மூ ஆல் குறைவடைந்துள்ளன. 2018 ஆம் ஆண்டில் குற்றங்களுக்கான தீர்வினை வழங்கும் சதவீதம் 43மூ ஆகும். அது 2017 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்ட 55மூ தீர்வு சதவீதத்தை விட ஒப்பீட்டளவில் குறைந்த பெறுமதியாகும்.

வன்கொடுமை மற்றும் கடத்தல் குற்றங்கள் பெண்களுக்கு எதிராக 2018 ஆம் ஆண்டில் 75 அறிக்கையிடப்பட்டுள்ளன. அவ் எண்ணிக்கையானது 2017 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்ட எண்ணிக்கையுடன் சமனாவதோடு, 2016 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்ட 103 குற்றங்களுடன் ஒப்பீட்டு ரீதியில் 27% வீழ்ச்சியாகக் குறிப்பிடலாம். 2017 ஆம் ஆண்டில் 67% ஆக இருந்த இக் குற்றங்களுக்கான தீர்வு சதவீதம் 2018 ஆம் ஆண்டில் 40% வரை குறைவடைந்துள்ளது.

அட்டவணையின் ஒட்டுமொத்த தரப் பகுப்பாய்விற்கு அமைய 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியில் 2018 ஆம் ஆண்டில் பெண்களுக்கு எதிரான ஒட்டுமொத்த குற்றங்கள் 2 ஆல் குறைவடைந்துள்ளதோடு, 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியில் 2 ஆல் குறைவடைந்துள்ளது.

பெண்களுக்கு எதிரான ஒட்டுமொத்த குற்றங்களைத் தீர்க்கும் சதவீதமானது 2016 ஆம் ஆண்டில் 5 ஆக இருந்ததோடு, 2017 ஆம் ஆண்டில் அது 63% வரை உயர்வடைந்திருந்தது. இருப்பினும், 2018 ஆம் ஆண்டில் பெண்களுக்கு எதிரான ஒட்டுமொத்த குற்றங்களைத் தீர்க்கும் சதவீதம் 40% வரை வீழ்ச்சியடைந்துள்ளமையைக் காணலாம்.

## 2.3. சிறுவர்களுக்கு எதிரான பாரிய குற்றங்கள்

இலங்கை பொலிசிடம் அறிக்கையிடப்படும் சிறுவர்களுக்கு எதிரான பாரிய குற்றங்கள் 15 வகுதிகளின் கீழ் வகைப்படுத்தப்படுகின்றன. 2018 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்ட ஒட்டுமொத்த குற்றங்களுள் சிறுவர்களுக்கு எதிரான பாரிய குற்றங்களை சதவீதமாகக் குறிப்பிட்டால் 9% ஆகும். இதன் போது 2016, 2017, மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் சிறுவர்களுக்கு எதிரான பாரிய குற்றங்கள் அறிக்கையிடப்படல் தொடர்பில் ஒப்பீட்டு ரீதியில் பின்வரும் அட்டவணை மூலம் தரவுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

அட்டவணை இலக்கம் 03 **2016 – 2018 வரை சிறுவர்களுக்கு எதிரான பாரிய குற்றங்கள் அட்டவணை**

| | குற்றங்கள் | | 2016 | | | | 2017 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | அறிக்கையிடப்பட்டவை | விசாரிக்கப்பட்டு வருபவை | தீர்க்கப்பட்டவை | தீர்க்கப்படும் சதவீதம் | அறிக்கையிடப்பட்டவை | விசாரிக்கப்பட்டு வருபவை | தீர்க்கப்பட்டவை | தீர்க்கப்படும் சதவீதம் | அறிக்கையிடப்பட்டவை | விசாரிக்கப்பட்டு வருபவை | தீர்க்கப்பட்டவை | தீர்க்கப்படும் சதவீதம் |
| 1 | கொலை | | 27 | 10 | 17 | **63%** | 22 | 4 | 18 | **82%** | 19 | 8 | 7 | **42%** |
| 2 | தனது உயிருக்கு ஆபத்து ஏற்படுத்திக் கொள்ள உடந்தையாக இருத்தல் | | 0 | 0 | 0 | **0%** | 1 | 1 | 0 | **0%** | 0 | 0 | 0 | **0%** |
| 3 | மனிதக் கொலைக்கு முயற்சித்தல் | | 10 | 6 | 4 | **40%** | 9 | 5 | 4 | **44%** | 4 | 0 | 4 | **0%** |
| 4 | கற்பழிப்பு | 16 வயதிற்குக் கீழ் விருப்பத்துடன் | 1686 | 699 | 987 | **59%** | 1438 | 446 | 992 | **69%** | 1196 | 631 | 555 | **53%** |
| | | 16 வயதிற்குக் கீழ் விருப்பமின்றி | | | | | | | | | 248 | 112 | 134 | **45%** |
| | | 16 – 18 வயதிற்கு இடைப்பட்ட | | | | | | | | | 72 | 36 | 34 | **50%** |
| | | துர்நடத்தை | | | | | | | | | 24 | 11 | 13 | **46%** |
| 5 | படுகாயம்/கத்தி போன்றவற்றால் காயம் ஏற்படுத்தல் | | 41 | 18 | 23 | **56%** | 35 | 13 | 22 | **63%** | 54 | 21 | 33 | **39%** |
| 6 | இயற்கைக்கு முரணான குற்றங்கள் | | 654 | 253 | 401 | **61%** | 556 | 194 | 362 | **65%** | 35 | 2 | 32 | **56%** |
| 7 | பாரதூரமான பாலியல் து\பிரயோகங்கள் | | | | | | | | | | 688 | 403 | 280 | |
| 8 | வன்கொடுமை | | 788 | 364 | 424 | **54%** | 713 | 202 | 511 | **72%** | 784 | 426 | 346 | **52%** |
| 9 | கடத்தல் | | | | | | | | | | 68 | 17 | 47 | |
| 10 | பாலியல் இச்சைகளுக்காக பெண்களை விநியோகித்தல் | | 9 | 6 | 3 | **33%** | 6 | 1 | 5 | **83%** | 8 | 5 | 2 | **63%** |
| 11 | ஆட்கடத்தல் வியாபாரம் | | | | | | | | | | 2 | 0 | 2 | **0%** |
| 12 | சிறுவர்களை கொடூரமாக நடாத்தல் | | 156 | 56 | 100 | **64%** | 131 | 47 | 84 | **64%** | 104 | 45 | 58 | **41%** |
| 13 | முறையற்ற பாலியல் இன்பம் அனுபவித்தல் | | | | | | | | | | 30 | 10 | 19 | |
| 14 | நபர்களுக்கிடையிலான மிக மோசமான நடத்தை | | 0 | 0 | 0 | **0%** | 0 | 0 | 0 | **0%** | 2 | 0 | 2 | **0%** |
| 15 | வேறு | | 0 | 0 | 0 | | 0 | 0 | 0 | **0%** | 6 | 2 | 4 | **33%** |

மூலம் - பொலிஸ் புள்ளிவிபரவியல் அலகு

## ❖ தரப் பகுப்பாய்வு

அட்டவணைக்கு அமைவாக சிறுவர்களுக்கு எதிரான 19 கொலைகள் 2018 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்டுள்ளதோடு, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளுடன் ஒப்பீட்டு ரீதியில் 14% வீழ்ச்சியைக் காட்டுகிறது. அதாவது 2016 ஆம் ஆண்டில் 27 மனிதப் படுகொலைகள் அறிக்கையிடப்பட்டதோடு. 2017 ஆம் ஆண்டில் அது 22 வரை 18% ஆல் குறைவடைந்துள்ளது. சிறுவர்களுக்கு எதிரான கொலைக் குற்றங்களின் தீர்வு சதவீதத்தை எடுத்துக் கொண்டால், 2018 ஆம் ஆண்டின் தீர்வு சதவீதம் வீழ்ச்சியடைந்துள்ளமையைக் காணலாம். அதற்கமைய 2016 ஆம் ஆண்டில் 63% ஆக இருந்த தீர்வு சதவீதம் 2017 ஆம் ஆண்டில் 82% ஆக இருந்தது. 2018 ஆம் ஆண்டில் அத் தீர்வு சதவீதம் 42% ஆகும்.

அட்டவணையின் தரவுகளுக்கு அமைய சிறுவர்களுக்கு எதிரான பாலியல் து்பிரயோகக் குற்றங்களை நோக்குகையில் அவ்வாறான 1518 குற்றங்கள் 2018 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்டன. அவற்றுள் 16 வயதிற்குக் குறைந்த பிள்ளையின் விருப்பத்துடன் இடம்பெற்ற பாலியல் து்பிரயோகக் குற்றங்கள் 1199 அறிக்கையிடப்பட்டுள்ளதுடன், 16 வயதிற்குக்

குறைந்த பிள்ளையின் விருப்பமின்றி இடம்பெற்ற பாலியல் துஷ்பிரயோகக் குற்றங்கள் 248 அறிக்கையிடப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக 16 – 18 வயதிற்குட்பட்ட சிறுவர்களுக்கு எதிரான 71 பாலியல் துஷ்பிரயோகங்கள் அறிக்கையிடப்பட்டுள்ளன. 2018 ஆம் ஆண்டில் சிறுவர்களுக்கு எதிரான ஒட்டுமொத்த பாலியல் துஷ்பிரயோகங்களுள் 79% பிள்ளையின் விருப்பத்தின் பேரில் (பெரும்பாலும் காதல் தொடர்புகளினால்) இடம்பெற்ற குற்றங்களாகும்.

2016 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்ட சிறுவர்களுக்கு எதிரான பாலியல் துஷ்பிரயோகக் குற்றங்களின் எண்ணிக்கை 1686 ஆக இருந்ததுடன், 2017 ஆம் ஆண்டில் அவ் எண்ணிக்கை 1483 வரை 15% ஆல் குறைவடைந்துள்ளது. 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டளவில் 2018 ஆம் ஆண்டில் இக் குற்றங்கள் 5% ஆல் அதிகரித்துள்ளன. தீர்வு வழங்கும் சதவீதத்தை எடுத்துக் கொண்டால் சிறுவர்களுக்கு எதிரான பாலியல் துஷ்பிரயோகக் குற்றங்களுக்குத் தீர்வு வழங்கும் சதவீதம் 2016 ஆம் ஆண்டில் 58% ஆக இருந்ததுடன், 2017 ஆம் ஆண்டில் அது 69% வரை அதிகரித்துள்ளது. 2018 ஆம் ஆண்டில் தீர்வு வழங்கும் சதவீதம் 5 வரை வீழ்ச்சியடைந்துள்ளதைக் காணலாம்.

சிறுவர்களுக்கு எதிரான படுகாயம் விளைவிக்கும் குற்றங்களை எடுத்துக் கொண்டால், அட்டவணையின் தரவுகளுக்கு அமைய 2016 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்ட குற்றங்களின் எண்ணிக்கை 41 ஆகும். 2017 ஆம் ஆண்டில் அவ் எண்ணிக்கை 35 வரை 15% ஆல் குறைவடைந்துள்ளதுடன், 2018 ஆம் ஆண்டில் சிறுவர்களுக்கு எதிரான படுகாயம் விளைவிக்கும் குற்றங்களின் சதவீதம் 54 வரை 54% வரை அதிகரித்துள்ளது.

சிறுவர்களுக்கு எதிரான படுகாயம் விளைவிக்கும் குற்றங்களுக்கான தீர்வினை வழங்கும் சதவீதத்தை நோக்கினால், 2016 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்ட குற்றங்களுள் 56% ற்குத் தீர்வு வழங்கப்பட்டுள்ளதுடன், 2017 ஆம் ஆண்டில் அச் சதவீதமானது 63% வரை அதிகரித்துள்ளது. 2018 ஆம் ஆண்டில் தீர்வினை வழங்கும் சதவீதத்தில் குறிப்பிடத்தக்க அளவு வீழ்ச்சியைக் காண முடிவதோடு, அச் சதவீதமானது 39% ஆகும்.

சிறுவர்களுக்கு எதிரான பாரதூரமான பாலியல் துஷ்பிரயோகம் எனும் குற்றம் தொடர்பில் அட்டவணையில் தரப்பட்டுள்ள தரவுகளை ஆய்வு செய்கையில், 2016 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்ட இக் குற்றங்கள் 654 இலிருந்து 2017 ஆம் ஆண்டில் 556 வரை 15% ஆல் குறைவடைந்துள்ளமை தெளிவாகிறது. 2018 ஆம் ஆண்டில் சிறுவர்களுக்கு எதிரான பாரதூரமான பாலியல் துஷ்பிரயோகக் குற்றங்கள் 723 அறிக்கையிடப்பட்டுள்ளதுடன், அது 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியில் 30% அதிகரிப்பாகும்.

சிறுவர்களுக்கு எதிரான பாரதூரமான பாலியல் துஷ்பிரயோகத்திற்கான தீர்வினை வழங்கும் சதவீதத்திலும் ஏற்ற இறக்கங்களைக் காணலாம். அதாவது 2016 ஆம் ஆண்டில் 6 ஆக இருந்த தீர்வு வழங்கும் சதவீதம் 2017 ஆம் ஆண்டில் 65% வரை உயர்வடைந்திருப்பதோடு, 2018 ஆம் ஆண்டில் மீண்டும் 56% வரை வீழ்ச்சியைக் காணலாம்.

2018 ஆம் ஆண்டில் சிறுவர்களுக்கு எதிரான வன்கொடுமை மற்றும் கடத்தல் போன்ற குற்றங்களை 2016 மற்றும் 2017 ஆகிய வருடங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் முதல் இரண்டு வருடங்களுடன் ஒப்பீட்டு ரீதியில் 2018 ஆம் ஆண்டில் இக் குற்றங்களில் அதிகரிப்பைக் காணலாம். அட்டவணையின் தரவுகளுக்கு அமைய 2016 ஆம் ஆண்டில் இக் குற்றங்கள் 788 அறிக்கையிடப்பட்டுள்ளதுடன், 2017 ஆம் ஆண்டில் அக் குற்றங்கள் 713 வரை 9% ஆல் குறைவடைந்துள்ளது. 2018 ஆம் ஆண்டில் சிறுவர்களுக்கு எதிரான வன்கொடுமை மற்றும் கடத்தல் குற்றங்கள் 852 அறிக்கையிடப்பட்டுள்ளதுடன், அது 2017 ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியில் 19% அதிகரிப்பாகும். அதே போன்று 2017 ஆம் ஆண்டில் 72% ஆக இருந்த தீர்வு வழங்கும் சதவீதம் 2018 ஆம் ஆண்டில் 52% வரை குறைவடைந்துள்ளது.

அட்டவணையில் தரப்பட்டுள்ள மற்றுமொரு பாரிய குற்றமாக சிறுவர்களை கொடூரமான முறையில் நடத்துவதைக் குறிப்பிடலாம். கடந்த 03 வருட தரவுகளின் அடிப்படையில் நோக்குகையில், 2016

ஆம் ஆண்டில் இக் குற்றங்கள் 156 அறிக்கையிடப்பட்டுள்ளன. 2017 ஆம் ஆண்டில் அக் குற்றங்கள் 131 அறிக்கையிடப்பட்டதுடன், அது சதவீத ரீதியில் 2016 ஆம் ஆண்டை விட 16% வீழ்ச்சியாகக் குறிப்பிடலாம். 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியில் 2018 ஆம் ஆண்டில் சிறுவர்களை கொடூரமான முறையில் நடாத்தும் குற்றங்களில் சிறியதொரு அதிகரிப்பு ஏற்பட்டுள்ளமையை அட்டவணையின் மூலம் காணலாம்.

சிறுவர்களை கொடூரமான முறையில் நடத்தும் குற்றங்களுக்கான தீர்வு வழங்கும் சதவீதத்தை எடுத்துக் கொண்டால், 2016 மற்றும் 2017 ஆகிய வருடங்களில் அறிக்கையிடப்பட்ட குற்றங்களுள் 64% தீர்க்கப்பட்டுள்ளதுடன், 2018 ஆம் ஆண்டில் அச் சதவீதம் 4 வரை குறைவடைந்துள்ளது.

2018 ஆம் ஆண்டில் சிறுவர்களுக்கு எதிரான ஒட்டுமொத்த பாரிய குற்றங்களையும் முந்தைய இரு வருடங்களுடன் ஒப்பிடுகையில், அதன் மாற்றங்களை அறிந்து கொள்ளலாம். அதற்கமைய 2016 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்ட 3371 குற்றங்களானது 2017 ஆம் ஆண்டில் 2911 வரை 14% ஆல் குறைவடைந்தன. 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டளவில் 2018 ஆம் ஆண்டில் சிறுவர்களுக்கு எதிரான ஒட்டுமொத்த பாரிய குற்றங்களின் எண்ணிக்கையானது 3346 வரை 15% ஆல் அதிகரித்துள்ளது.

தீர்வு வழங்கப்படும் சதவீதத்தை எடுத்துக் கொண்டால், சிறுவர்களுக்கு எதிரான பாரிய குற்றங்களுள் 2016 ஆம் ஆண்டில் 58% தீர்க்கப்ட்டிருந்ததோடு. 2017 ஆம் ஆண்டில் 69% வரை அச் சதவீதம் அதிகரித்துள்ளது. 2018 ஆம் ஆண்டில் மீண்டும் 52% வரை குறைவடைவதைக் காணலாம்.

### 2.4. சனத்தொகை மற்றும் பாரிய குற்றங்களுக்கான பொலிஸ் உத்தியோகத்தர்களின் விகிதம்

இலங்கையில் பாரிய குற்றங்கள் உயர்வடைதல் அல்லது குறைவடைதல் குறித்த முடிவுகளுக்கு வருவதற்கு சனத்தொகை மற்றும் பாரிய குற்றங்களுக்கான பொலிஸ் உத்தியோகத்தர் விகிதத்தை மிக முக்கியமானக் காரணியாகக் கருதலாம். 2014 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரை கடந்த ஐந்து வருடங்களுக்கான தரவுகள் அட்டவணை இலக்கம் 04 மூலம் தரப்பட்டுள்ளன.

அட்டவணை இலக்கம் 04 **சனத்தொகை மற்றும் பாரிய குற்றங்களுக்கான பொலிஸ் உத்தியோகத்தர்களின் விகிதம் குறித்த அட்டவணை**

| ஆண்டு | சனத்தொகை பத்தின் மடங்காக | பொலிஸ் உத்தியோகத்தர்களின் உண்மையான எண்ணிக்கை | சனத்தொகையின் விகிதமாக பொலிஸ் | ஒரு சதுர கிலோ மீற்றருக்கு பொலிசாரின் விகிதம் | பாரிய குற்றங்களுக்கான பொலிசார் விகிதம் | ஒட்டுமொத்த பாரிய குற்றங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| 2014 | 20,771 | 84,166 | 0.2125 | 01:00.8 | 01:00.6 | 50,962 |
| 2015 | 20,966 | 86,037 | 0.210416667 | 01:00.8 | 01:00.5 | 40,188 |
| 2016 | 21,203 | 85,245 | 0.213888889 | 01:00.8 | 01:00.4 | 36,937 |
| 2017 | 21,444 | 85,357 | 0.215972222 | 01:00.8 | 01:00.4 | 35,979 |
| 2018 | 21670 | 87075 | 0.213888889 | 01:00.7 | 01:00.4 | 36355 |

மூலம் - பொலிஸ் புள்ளிவிபரவியல் அலகு

அட்டவணை இலக்கம் 04 ற்கு அமைய கடந்த ஐந்து வருடங்களில் இலங்கையின் சனத்தொகை 20.7 மில்லியனிலிருந்து 21.6 மில்லியன் வரை அதிகரித்துள்ளது. பொலிஸ் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை குறித்த ஐந்து வருடங்களில் 84166 இலிருந்து 87075 வரை அதிகரித்துள்ளது.

சதவீதமாகக் கூறினால் 2014 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆம் ஆண்டு வரை சனத்தொகையானது 4% ஆல் அதிகரித்துள்ளதோடு, குறிப்பிட்ட காலப்பகுதியில் பொலிஸ் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை மூ ஆல் அதிகரித்துள்ளது.

2014 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆம் ஆண்டு வரை பாரிய குற்றங்களானது 50962 இலிருந்து 36355 வரை 29% ஆல் குறைவடைந்துள்ளதோடு, பாரிய குற்றங்களுக்கான பொலிஸ் உத்தியோகத்தர்களின் விகிதம் 1:0:60 இலிருந்து 1:0:41 வரை 32% ஆல் குறைவடைந்துள்ளது.

- **இலங்கை சனத்தொகைக்கு பொலிஸ் உத்தியோகத்தர்களின் விகிதம்**

ஐக்கிய நாடுகளின் பரிந்துரைகளுக்கு அமைய தரநிலைப்படுத்தப்பட்ட சனத்தொகைக்கு பொலிஸ் உத்தியோகத்தர்களின் விகிதமாவது, ஒரு இலட்சம் மக்களுக்கு பொலிஸ் உத்தியோகத்தர்கள் 222 பேராவர். அதாவது, 450 நபர்களுக்கு ஒரு பொலிஸ் உத்தியோகத்தராவர்.

அப் பரிந்துரைகளுக்கு அமைய எமது அயல் நாடான இந்தியாவின் இவ் விகிதமானது சனத்தொகையில் ஒரு இலட்சத்திற்கு 150 பொலிஸ் உத்தியோகத்தர்களாவர். அண்ணளவாக 761 நபர்களுக்கு ஒரு பொலிஸ் உத்தியோகத்தராவர். வங்காள தேசத்தை எடுத்துக் கொண்டால், ஒரு இலட்ச சனத்தொகைக்கு 160 பொலிஸ் உத்தியோகத்தர்களாவர். அபிவிருத்தியடைந்த நாடுகளை நோக்குகையில், ஐக்கிய இராச்சியத்தின் இவ் விகிதமானது சனத்தொகையில் ஒரு இலட்சத்திற்கு 208 பொலிஸ் உத்தியோகத்தர்களாவர். சுவீடனை எடுத்துக் கொண்டால், ஒரு இலட்சத்திற்கு 195 ஆகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஹொங்கொங் நாட்டின் சனத்தொகையில் ஒரு இலட்சத்திற்கு 462 பொலிஸ் உத்தியோகத்தர்கள் காணப்படுகின்றனர்.

அட்டவணைக்கு அமைய இலங்கை பொலிசின் உத்தியோகத்தர்கள் விகிதத்தை எடுத்துக் கொண்டால், 248 நபர்களுக்கு ஒரு பொலிஸ் உத்தியோகத்தர் காணப்படுகிறார். ஒரு இலட்ச சனத்தொகைக்கு பொலிஸ் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை அண்ணளவாக 402 எனக் கணக்கிடலாம். அதற்கமைய இலங்கையின் சனத்தொகைக்கு பொலிஸ் உத்தியோகத்தர்களின் விகிதமானது தென் ஆசிய நாடுகளுடன் ஒப்பீட்டளவில் மிகச் சிறந்த முறையில் காணப்படுகிறது.

# 03. சிறு குற்றங்கள்

பாரதூரமற்ற குற்றங்கள் இவ் அத்தியாயத்தின் கீழ் பகுப்பாய்வு செய்யப்படுகின்றன. அடிப்படையில் ஆட்களுக்கு எதிரான சிறு குற்றங்கள் மற்றும் ஆதனங்களுக்கு எதிரான சிறு குற்றங்கள் என்றவாறு இரு வகைப்படும். ஆட்களுக்கு எதிரான 14 சிறு குற்ற வகைகளின் கீழ் அறிக்கையிடப்படுவதோடு, ஆதனங்களுக்கு எதிரான 11 சிறு குற்ற வகைகளின் கீழ் அறிக்கையிடப்படும்.

## 3.1. ஆட்களுக்கு எதிரான சிறு குற்றங்கள்

2016 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரை இலங்கை பொலிசிடம் அறிக்கையிடப்பட்ட சிறு குற்றங்கள் தொடர்பான புள்ளிவிபரத் தரவுகள் பின்வரும் அட்டவணை மூலம் முன்வைக்கப்படுகின்றன. அதன் போது 2016 மற்றும் 2017 ஆகிய இரு வருடங்களுள் அறிக்கையிடப்பட்ட சிறு குற்றங்கள் தொடர்பான புள்ளிவிபரத் தரவுகள் 2018 ஆம் ஆண்டின் குறித்த தரவுகளுடன் ஒப்பிடப்பட்டு, பகுப்பாய்வு ரீதியில் விடயங்கள் முன்வைக்கப்படுகின்றன.

அட்டவணை இலக்கம் 05

**2016 – 2018 வரை ஆட்களுக்கு எதிரான சிறு குற்றங்களின் அட்டவணை**

| | குற்றங்கள் | 2016 | | | | 2017 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | அறிக்கையிடப்பட்டவை | விசாரிக்கப்பட்டு வருபவை | தீர்க்கப்பட்டவை | தீர்க்கப்படும் சதவீதம் | அறிக்கையிடப்பட்டவை | விசாரிக்கப்பட்டு வருபவை | தீர்க்கப்பட்டவை | தீர்க்கப்படும் சதவீதம் | அறிக்கையிடப்பட்டவை | விசாரிக்கப்பட்டு வருபவை | தீர்க்கப்பட்டவை | தீர்க்கப்படும் சதவீதம் |
| 1 | சிறு தாக்குதல்கள் | 24870 | 8588 | 16282 | 65% | 22947 | 7315 | 15632 | 68% | 23629 | 7924 | 15703 | 66% |
| 2 | சட்ட விரோத கருக்கலைப்பு | 39 | 18 | 21 | 54% | 25 | 15 | 10 | 40% | 69 | 36 | 33 | 48% |
| 3 | குற்றவியல் அத்துமீறல்/ வீடொன்றினுள் அத்துமீறல் | 2178 | 900 | 1278 | 59% | 2066 | 764 | 1302 | 63% | 1803 | 733 | 1070 | 59% |
| 4 | கற்பழிப்பு | 3764 | 1370 | 2394 | 64% | 3324 | 1229 | 2095 | 63% | 3327 | 1470 | 1826 | 55% |
| 5 | முறையற்றத் தடை / முறையற்ற வகையில் சிறைப்படுத்தல் | 317 | 150 | 167 | 53% | 148 | 42 | 106 | 72% | 204 | 73 | 131 | 64% |
| 6 | சட்ட விரோதமான செயலொன்றிற்காக ஏதேனும் ஒரு கட்டடம் போன்ற இட | 218 | 89 | 129 | 59% | 20 | 12 | 8 | 40% | 14 | 5 | 9 | 64% |
| 7 | பிரபல கொள்ளைக்காரன் ஒருவனின் நடமாட்டம் | 182 | 71 | 111 | 61% | 45 | 11 | 34 | 76% | 108 | 41 | 67 | 62% |
| 8 | பொது இடமொன்றில் சண்டையிடல் | 578 | 132 | 446 | 77% | 442 | 105 | 337 | 76% | 381 | 97 | 284 | 75% |
| 9 | குற்றவியல் பலவந்தம், குற்றவியல் அச்சுறுத்தல், வேண்டுமென்றே நிந்தித்தல் | 2747 | 1178 | 1569 | 57% | 2199 | 777 | 1422 | 65% | 2461 | 1028 | 1433 | 58% |
| 10 | பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரின் சட்டப்பூர்வமான கட்டளைக்குக் கீழ்படியாத வகையில் வருகை தராமை | 333 | 130 | 203 | 61% | 198 | 61 | 137 | 69% | 252 | 52 | 200 | 79% |
| 11 | எந்த வழியிலேனும் காயமேற்படுத்த முயற்சித்தல் | 982 | 273 | 709 | 72% | 593 | 164 | 429 | 72% | 590 | 126 | 464 | 79% |
| 12 | நன்னடத்தைப் பிணைக் கோரல் | 2092 | 152 | 1940 | 93% | 1667 | 44 | 1623 | 97% | 1841 | 95 | 1744 | 95% |
| 13 | நீதிமன்றில் பொய் சாட்சி கூறல் அல்லது தயாரித்தல் | 179 | 70 | 109 | 61% | 151 | 28 | 123 | 81% | 252 | 56 | 196 | 78% |
| 14 | இ.த.ச.கோ. இன் கீழ் புரியும் வேறு சிறு குற்றங்கள் | 7100 | 1977 | 5123 | 72% | 8399 | 2353 | 6045 | 72% | 6957 | 2286 | 4671 | 67% |
| | **மொத்தம்** | **45579** | **15098** | **30481** | **67%** | **42224** | **12920** | **29303** | **69%** | **41888** | **14022** | **27831** | **66%** |

மூலம் - பொலிஸ் புள்ளிவிபரவியல் அலகு

### ❖ தரப் பகுப்பாய்வு

அட்டவணைக்கு அமைய அதிகளவில் அறிக்கையிடப்படும் சிறு குற்ற வகையான தாக்குதல்கள் 2016 ஆம் ஆண்டை விட 2017 ஆம் ஆண்டில் வீழ்ச்சியைக் காட்டினாலும், 2018 ஆம் ஆண்டில் மீண்டும் உயர்வடைந்துள்ளன. அதற்கமைய 2016 ஆம் ஆண்டில் சிறு அளவிலான தாக்குதல்கள் 24870 அறிக்கையிடப்பட்டதோடு, 2017 ஆம் ஆண்டில் 22947 வரை 8% ஆல் வீழ்ச்சியடைந்துள்ளன. 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டளவில் 2018 ஆம் ஆண்டில் சிறு அளவிலான தாக்குதல்கள் 23629 வரை 3% ஆல் மீண்டும் உயர்வடைந்துள்ளன. தீர்வு வழங்கும் சதவீதத்தை எடுத்துக் கொண்டால், 2017 ஆம் ஆண்டில் 68% ஆகக் காணப்பட்ட சிறு அளவிலான தாக்குதல்களுக்கான தீர்வு வழங்கும் வீதம் 2018 ஆம் ஆண்டில் 66% ஆல் குறைவடைந்துள்ளது.

பொலிசிடம் அறிக்கையிடப்பட்ட சட்ட விரோத கருக்கலைப்புக் குற்றமானது மிகக் குறைந்த மட்டத்தில் காணப்படுகின்றமையானது தரவுகளின் மூலம் புலனாகின்றது. 2016 ஆம் ஆண்டில் சட்ட விரோதமான கருக்கலைப்புக்கள் 39 அறிக்கையிடப்பட்டுள்ளதோடு, 2017 ஆம் ஆண்டில் குறித்த எண்ணிக்கையானது 25 வரை 36% ஆல் குறைவடைந்துள்ளது. 2018 ஆம் ஆண்டில் மீண்டும் 69 வரை 176% ஆல் சட்ட விரோத கருக்கலைப்பு தொடர்பான குற்றங்களில் அதிகரிப்பைக் காணலாம்.

2718 குற்றவியல் அத்துமீறற் குற்றங்கள் 2016 ஆம் ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்டுள்ளதோடு, 2017 ஆம் ஆண்டில் அது 2066 வரை 5% ஆல் குறைவடைந்துள்ளது. 2018 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்ட குற்றங்களின் எண்ணிக்கை 1803 ஆவதோடு, 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியில் அதனை 13% வீழ்ச்சியாகக் குறிப்பிடலாம். 2016 ஆம் ஆண்டில் இக் குற்றங்களுக்கான தீர்வு வழங்கும் சதவீதம் 59% ஆவதோடு, 2017 ஆம் ஆண்டில் அது 63% வரை உயர்வடைந்துள்ளது. 2018 ஆம் ஆண்டில் தீர்வு வழங்கும் சதவீதம் 59% ஆகும்.

பாலியல் தாக்குதல்களைக் கவனத்திற் கொள்கையில் அட்டவணையின் தரவுகளுக்கு அமைவாக 2016 ஆம் ஆண்டை விட 2017 ஆம் ஆண்டில் இக் குற்றங்கள் 3764 முதல் 3324 வரை 12% வீழ்ச்சியைக் காட்டுகிறது. 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியில் 2018 ஆம் ஆண்டில் இக் குற்றங்கள் 3327 வரை மிகச் சிறிய அளவிலான அதிகரிப்பைக் காட்டினாலும், 2016 ஆம் ஆண்டை விடவும் குறைந்த பெறுமதியாக அதனைக் குறிப்பிடலாம். எவ்வாறாயினும், 2017 ஆம் ஆண்டில் 63% ஆகக் காணப்பட்ட தீர்வு வழங்கும் சதவீதம் 2018 ஆம் ஆண்டில் 54% வரை குறைவடைந்துள்ளது.

பொது இடமொன்றில் சண்டையிடும் குற்றத்தை எடுத்துக் கொண்டால், அட்டவணைக்கு அமைவாக 2016 ஆம் ஆண்டில் 578 குற்றங்கள் அறிக்கையிடப்பட்டுள்ளதோடு, 2017 ஆம் ஆண்டில் 442 குற்றங்களாக 23% வீழ்ச்சியையும், 2018 ஆம் ஆண்டில் அக் குற்றங்கள் 381 வரை 14% வீழ்ச்சியையும் காணலாம். தீர்வ வழங்கும் சதவீதம் 2016, 2017 மற்றும் 2018 ஆகிய வருடங்களில் முறையே, 77% , 76% மற்றும் 74% எனக் காட்டலாம்.

அட்டவணையின் தரவுகளுக்கு அமைவாக குற்றவியல் பலவந்தம் எனும் குற்றத்தை எடுத்துக் கொண்டால், 2016 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்ட குற்றங்களின் எண்ணிக்கை 2747 ஆகும். அக் குற்றங்கள் 2017 ஆம் ஆண்டில் 2199 வரை 20% ஆல் வீழ்ச்சியடைந்துள்ளதோடு, 2018 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்ட குற்றங்களின் எண்ணிக்கை 2461 ஆகும். சதவீதமாக 2017 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்ட எண்ணிக்கையை விட 12% அதிகரிப்பை 2018 ஆம் ஆண்டில் காணலாம்.

குற்றவியல் பலவந்தக் குற்றத்திற்கான தீர்வு வழங்கும் சதவீதம் 2016 ஆம் ஆண்டில் 57% ஆகும். 2017 ஆம் ஆண்டில் அச் சதவீதமானது 65% ஆக இருந்ததோடு, 2018 ஆம் ஆண்டில் தீர்வு வழங்கும் சதவீதம் 58% வரை சிறு வீழ்ச்சியைக் காணலாம்.

ஆட்களுக்கு எதிரான சிறு குற்றங்கள் தொடர்பான தரவுகளை ஆராய்கையில், சில குற்றங்கள் அறிக்கையிடப்படலானது, 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியில் 2018 ஆம் ஆண்டில் அதிகரிப்பைக் காட்டினாலும் 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியில் மேலும் மிகக் குறைந்த மட்டத்தில் இருப்பதைக் காணலாம்.

ஆட்களுக்கு எதிரான ஒட்டுமொத்த சிறு குற்றங்களின் எண்ணிக்கை 2017 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்ட 42224 ஐ விட 2018 ஆம் ஆண்டில் 41888 வரை 7 குற்றங்களால் குறைந்துள்ளதோடு, தீர்வு வழங்கும் சதவீதம் 2017 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்ட 69% இலிருந்து 2018 ஆம் ஆண்டில் 66% வரை குறைவடைந்துள்ளது.

### 3.2. ஆதனங்களுக்கு எதிரான சிறு குற்றங்கள்

2016 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆம் ஆண்டு வரை அட்டவணை இலக்கம் 06 மூலம் தரப்பட்டுள்ளவாறு 11 விடயங்களின் கீழ் ஆதனங்களுக்கு எதிரான சிறு குற்றங்கள் தொடர்பான தரவுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

அட்டவணை இலக்கம் 06 **2016 – 2018 வரை ஆதனங்களுக்கு எதிரான சிறு குற்றங்கள் அட்டவணை**

| | குற்றங்கள் | 2016 | | | | 2017 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | அறிக்கையிடப்பட்டவை | விசாரிக்கப்பட்டு வருபவை | தீர்க்கப்பட்டவை | தீர்க்கப்படும் சதவீதம் | அறிக்கையிடப்பட்டவை | விசாரிக்கப்பட்டு வருபவை | தீர்க்கப்பட்டவை | தீர்க்கப்படும் சதவீதம் | அறிக்கையிடப்பட்டவை | விசாரிக்கப்பட்டு வருபவை | தீர்க்கப்பட்டவை | தீர்க்கப்படும் சதவீதம் |
| 1 | வீடுடைப்பு உபகரணங்களை சட்ட விரோதமாக தம்வசம் வைத்திருத்தல் | 185 | 21 | 164 | 89% | 130 | 37 | 93 | 72% | 87 | 15 | 72 | 83% |
| 2 | மதங்களுக்கு/ புண்ணிய ஸ்தலங்களுக்கு/ பூசைப் பொருட்களுக்கு சேதம் விளைவித்தல் | 37 | 14 | 23 | 62% | 49 | 27 | 22 | 45% | 32 | 19 | 13 | 41% |
| 3 | நிறை மற்றும் அளவு குறித்த குற்றங்கள் | 99 | 0 | 99 | 100% | 28 | 0 | 28 | 100% | 32 | 11 | 21 | 66% |
| 4 | விற்பனைக்கு அல்லது பொது மக்களின் பார்வைக்கு ஆபாசப் புத்தகம் போன்றவற்றை வைத்திருத்தல், ஆபாச சஞ்சிகைகள், புகைப்படங்கள், புத்தகங்களை விற்பனை செய்தல் | 112 | 5 | 107 | 96% | 84 | 16 | 68 | 81% | 49 | 4 | 45 | 92% |
| 5 | திருட அல்லது கொள்ளையிட முயற்சித்தல் | 954 | 479 | 475 | 50% | 1183 | 519 | 664 | 56% | 798 | 344 | 454 | 57% |
| 6 | 25000 ரூபாவிற்குக் குறைந்த பாதிப்பு | 3488 | 1564 | 1924 | 55% | 2863 | 1247 | 1616 | 56% | 2980 | 1476 | 1504 | 50% |
| 7 | 25000 ரூபாவிற்குக் குறைந்த திருட்டு | 17181 | 10061 | 7120 | 41% | 17540 | 9259 | 8281 | 47% | 16817 | 10085 | 6727 | 40% |
| 8 | குற்றவியல் ரீதியிலான நம்பிக்கை மீறல்/ மோசடி/தவறான பயன்பாடு ரூ. 100000 ற்குக் குறைந்த | 8079 | 4253 | 3826 | 47% | 8022 | 4077 | 3945 | 49% | 8047 | 4361 | 3683 | 46% |
| 9 | பொது மக்களின் துன்பங்கள் குறித்து முறையிடல் | 360 | 58 | 302 | 84% | 171 | 36 | 135 | 79% | 158 | 47 | 111 | 70% |
| 10 | 44 ஆம் இலக்க ஆரம்ப நீதிமன்றச் சட்டத்தின் 66 ஆம் பிரிவின் கீழ் செய்யப்பட்ட கோரிக்கை | 562 | 78 | 484 | 86% | 670 | 167 | 503 | 75% | 437 | 65 | 372 | 85% |
| 11 | வேறு | 2292 | 847 | 1445 | 63% | 2141 | 832 | 1309 | 61% | 1978 | 833 | 1141 | 58% |
| **மொத்தம்** | | **33349** | **17380** | **15969** | **48%** | **32881** | **16217** | **16664** | **51%** | **31415** | **17260** | **14143** | **45%** |

மூலம் - பொலிஸ் புள்ளிவிபரவியல் அலகு

### ❖ தரப் பகுப்பாய்வு

கடந்த மூன்று வருடங்களின் தரவுகளுக்கு அமைய ஆதனங்களுக்கு எதிரான சிறு குற்றங்கள் ஒட்டுமொத்தமாகக் குறைவடைந்துள்ளமையே புலனாகிறது. உதாரணமாக, வீடுடைப்பு உபகரணங்களை தம்வசம் வைத்திருக்கும் 185 குற்றங்கள் 2016 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்டதோடு, 2017 ஆம் ஆண்டில் அது 130 வரை 30% ஆலும், 2018 ஆம் ஆண்டில் மேலும் குறைவடைந்து, 87 வரை 33% ஆலும் குறைவடைந்துள்ளன. இச் சிறு குற்றங்களின் தீர்வு சதவீதம் 2016 ஆம் ஆண்டில் 89% ஆக இருந்ததோடு, 2017 ஆம் ஆண்டில் 7 ஆகும். 2018 ஆம் ஆண்டில் தீர்வு சதவீதம் 83% வரை உயர்வடைந்துள்ளது.

மதங்கள் மற்றும் புண்ணிய ஸ்தலங்களுக்கு ∴ பொருட்களுக்கு விளைவிக்கும் சேதங்கள் 2016 ஆம் ஆண்டில் 37 அறிக்கையிடப்பட்டதோடு, 2017 ஆம் ஆண்டில் 49 வரை 32% உயர்வைக் காண முடிந்தது. 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியில் 2018 ஆம் ஆண்டில் அக் குற்றங்கள் 32 வரை 35% ஆல் வீழ்ச்சியடைந்துள்ளன. 2016 ஆம் ஆண்டின் தீர்வு வழங்கும் சதவீதம் 62% ஆக இருந்ததோடு, 2017 ஆம் ஆண்டில் அச் சதவீதம் 45% ஆகும். 2018 ஆம் ஆண்டில் தீர்வு சதவீதம் 4 வரை மேலும் குறைவடைந்துள்ளது.

நிறை மற்றும் அளவு குறித்த குற்றங்கள் 2017 ஆம் ஆண்டில் 28 அறிக்கையிடப்ட்டதோடு, 2018 ஆம் ஆண்டில் அது 32 வரை 14% ஆல் உயர்வடைந்துள்ளது. இருப்பினும், 2016 ஆம் ஆண்டில் இக் குற்றங்கள் 99 அறிக்கையிடப்பட்டுள்ளதுடன், அதற்கு ஒப்பீட்டு ரீதியில் 2018 ஆம் ஆண்டில் நிறை மற்றும் அளவு குறித்த குற்றங்கள் 68% ஆல் குறைவடைந்துள்ளன.

நிறை மற்றும் அளவு குறித்த குற்றங்களின் தீர்வு சதவீதத்தை எடுத்துக் கொண்டால், 2016 மற்றும் 2017 ஆகிய வருடங்களில் 100மூ ஆகும். 2018 ஆம் ஆண்டில் தீர்வு சதவீதம் 66% வரை குறைவடைந்துள்ளது.

ஆபாச வெளியீடுகளைக் காட்சிப்படுத்தல், விற்பனை செய்தல் அல்லது அதன் பொருட்டு தம்வசம் வைத்திருத்தல் என்ற குற்றத்தை எடுத்துக் கொண்டால், தொடர்ச்சியான வீழ்ச்சியைக் காட்டுகின்றது. 2016 ஆம் ஆண்டில் 112 குற்றங்களும் 2017 ஆம் ஆண்டில் 84 குற்றங்களும் அறிக்கையிடப்பட்டதோடு, 2018 ஆம் ஆண்டில் 49 வரை 42% ஆல் 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியில் இக் குற்றங்கள் குறைவடைந்துள்ளன. ஆபாச வெளியீடுகள் குறித்த குற்றங்களுக்கான தீர்வு வழங்கும் சதவீதத்தை எடுத்துக் கொண்டால், 2016, 2017 மற்றும் 2018 ஆகிய வருடங்களில் முறையே 95மூ, 8 மற்றும் 92% எனக் காட்டலாம்.

அட்டவணைக்கு அமைவாக திருட அல்லது கொள்ளையிட முயற்சிக்கும் 954 குற்றங்கள் 2016 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்டதோடு, 2017 ஆம் ஆண்டில் அது 1183 வரை 74% ஆல் உயர்வடைந்துள்ளன. அதனுடன் ஒப்பீட்டு ரீதியில் 2018 ஆம் ஆண்டில் இக் குற்றங்கள் 798 வரை 32% ஆல் குறைவடைந்துள்ளன.

திருட அல்லது கொள்ளையிட முயற்சிக்கும் குற்றங்கள் தொடர்பில் தீர்வு வழங்கும் சதவீதம் 2016 ஆம் ஆண்டில் 50% ஆக இருந்ததோடு, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் முறையே 56% மற்றும் 57% எனக் காட்டலாம்.

ரூ. 25000 ற்குக் குறைந்த பாதிப்பு எனும் குற்றங்கள் 2980 ஆக 2018 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்டதோடு, 2017 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்ட குற்றங்கள் 2863 ஐயும் விட 4% அதிகரிப்பாகும். இருப்பினும், 2016 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்ட பாதிப்பு குறித்த குற்றங்கள் 3488 ஐயும் விட 14% வீழ்ச்சியை 2018 ஆம் ஆண்டில் காணலாம்.

ரூ. 25000 ற்குக் குறைந்த பாதிப்பு எனும் குற்றங்கள் தொடர்பான தீர்வு வழங்கும் முன்னேற்றத்தை நோக்குகையில், 2016 ஆம் ஆண்டில் தீர்வு மட்டம் சதவீதமாக 55% ஆகும். 2017 ஆம் ஆண்டில் இக் குற்றங்களுக்கான தீர்வு சதவீதம் 56% ஆக இருந்ததோடு, 2018 ஆம் ஆண்டில் 50% ஐக் காணலாம்.

ரூ. 25000 ற்குக் குறைந்த 17181 திருட்டுச் சம்பவங்கள் 2016 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்டதோடு, 2017 ஆம் ஆண்டில் அது 17540 வரை 2% ஆல் உயர்வடைந்துள்ளது. 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியில் 2018 ஆம் ஆண்டில் அக் குற்றங்கள் 16817 வரை 4% ஆல் வீழ்ச்சியடைந்துள்ளன.

ரூ. 25000 ற்குக் குறைந்த திருட்டு குறித்த தீர்வு வழங்கும் சதவீதத்தை எடுத்துக் கொண்டால், 2016 ஆம் ஆண்டில் 4 ஆக இருந்ததோடு, 2017 ஆம் ஆண்டில் தீர்வு வழங்கும் சதவீதம் 47%

வரை உயர்வடைந்துள்ளது. 2018 ஆம் ஆண்டாகையில் ரூ. 25000 ற்குக் குறைந்த திருட்டு குறித்த தீர்வு வழங்கும் சதவீதம் 40% வரை வீழ்ச்சியைக் காணலாம்.

ரூ. 100000 ற்குக் குறைந்த குற்றவியல் ரீதியிலான நம்பிக்கை மீறல் ∴ மோசடி ∴ தவறான பயன்பாடு போன்ற குற்றங்கள் தொடர்பில் அட்டவணையில் உள்ளடக்கப்பட்டள்ள தரவுகளின் படி 2016 ஆம் ஆண்டில் 8079 குற்றங்கள் அறிக்கையிடப்பட்டுள்ளதோடு, 2017 ஆம் ஆண்டில் 8022 வரை ற்குக் கிட்டிய சிறு அளவிலான வீழ்ச்சியைக் காணலாம். 2018 ஆம் ஆண்டில் மீண்டும் இக் குற்றங்கள் 8047 ஆக சிறு அளவிலான அதிகரிப்பைக் காணலாம். ஒரு இலட்ச ரூபாவிற்குக் குறைந்த குற்றவியல் ரீதியிலான நம்பிக்கை மீறல் குற்றத்திற்கான தீர்வு வழங்கும் சதவீதத்தை எடுத்துக் கொண்டால், 2016 ஆம் ஆண்டில் 47% ஆகவும், 2017 ஆம் ஆண்டில் 49% ஆகவும் இருந்ததோடு, 2018 ஆம் ஆண்டில் தீர்வு வழங்கும் சதவீதம் 46% ஆகும்.

அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பொது மக்களின் துன்பங்கள் மற்றும் 66 ஆம் பிரிவின் கீழான குற்றங்களிலும் தெளிவானதொரு வீழ்ச்சியை 2018 ஆம் ஆண்டில் காண முடிவதோடு, தீர்வு சதவீதமும் உயர் மட்டத்தில் காணப்படுகிறது. அதற்கமைய பொது மக்களின் துன்பங்கள் குறித்து 360 முறைப்பாடுகள் 2016 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்டதோடு, 2017 ஆம் ஆண்டில் அது 171 வரை 53% ஆல் குறைவடைந்துள்ளது. 2018 ஆம் ஆண்டில் பொது மக்களின் துன்பங்கள் குறித்து 158 முறைப்பாடுகள் அறிக்கையிடப்பட்டதோடு, அது 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியில் 8% வீழ்ச்சியாகும். இம் முறைப்பாடுகளுக்கான தீர்வு சதவீதத்தை எடுத்துக் கொண்டால், 2016 ஆம் ஆண்டில் 84% ஆகவும், 20107 ஆம் ஆண்டில் 79% ஆகவும் இருந்ததோடு, 2018 ஆம் ஆண்டில் 70% ஆகவும் இனங் காணலாம்.

66 ஆம் பிரிவு அதாவது காணிப் பிணக்குகள் தொடர்பான சமாதானத்தை சீர்குலைத்தல் குறித்த முறைப்பாடுகளை எடுத்துக் கொண்டால், 2016 ஆம் ஆண்டில் 562 முறைப்பாடுகள் அறிக்கையிடப்பட்டுள்ளதோடு, அதற்கு ஒப்பீட்டு அளவில் 2017 ஆம் ஆண்டில் 670 முறைப்பாடுகள் வரை 19% ஆல் உயர்வடைந்துள்ளன. 2018 ஆம் ஆண்டில் இது தொடர்பிலான 437 முறைப்பாடுகள் அறிக்கையிடப்பட்டுள்ளதோடு, 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியில் 35% வீழ்ச்சியாக அதனைக் குறிப்பிடலாம். 66 ஆம் பிரிவின் கீழான முறைப்பாடுகளின் தீர்வு சதவீதமானது 2016 ஆம் ஆண்டில் 86% ஆக இருந்ததோடு, 2017 ஆம் ஆண்டில் 75% ஆகும். 2018 ஆம் ஆண்டில் அச் சதவீதமானது 85% வரை உயர்வடைந்துள்ளது.

ஆதனங்களுக்கு எதிரான ஒட்டுமொத்த குற்றங்களின் எண்ணிக்கையை எடுத்துக் கொண்டால், 2017 ஆம் ஆண்டை விட 2018 ஆம் ஆண்டில் 4% ஆல் குறைவடைந்துள்ளதோடு, தீர்வு சதவீதம் 50% இலிருந்து 45% வரையான வீழ்ச்சியையும் காணலாம்.

நிதி சார் குற்றங்கள் (அட்டவணையின் தொடரிலக்கம் 6, 7, 8) தொடர்பான தீர்வு சதவீதம் குறைந்த மட்டத்தில் காணப்படுகின்றமையே அட்டவணையில் உள்ளடங்கியுள்ள தரவுப் பகுப்பாய்வு மூலம் புலனாகும் விசேடமானதொரு விடயமாகும். இது தொடர்பில் உரிய அனைத்துத் துறைகளும் விசேட கவனம் செலத்தல் வேண்டும்.

## 04. பல்வேறு முறைப்பர்டுகள்

இலங்கை பொலிசிடம் அறிக்கையிடப்படும் முறைப்பாடுகளுள் பெரும்பாலானாவை இப் பல்வேறு முறைப்பாட்டு வகுதியைச் சாரும். இதன் கீழ் கிடைக்கப் பெறும் முறைப்பாடுகள் 16 துறைகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளதுடன், அட்டவணை இலக்கம் 07 மூலம் 2016, 2017 மற்றும் 2018 ஆகிய வருடங்களில் பல்வேறு முறைப்பாடுகள் குறித்த ஒப்பீட்டு ரீதியிலான விடயங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

அட்டவணை இலக்கம் 07 **2016 – 2018 வரையான பல்வேறு முறைப்பாடுகள் அட்டவணை**

| | அறிக்கையிடப்பட்ட முறைப்பாட்டின் தன்மை | 2016 | | | | 2017 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | அறிக்கையிடப்பட்டவை | விசாரிக்கப்பட்டு வருபவை | தீர்க்கப்பட்டவை | தீர்க்கப்படும் சதவீதம் | அறிக்கையிடப்பட்டவை | விசாரிக்கப்பட்டு வருபவை | தீர்க்கப்பட்டவை | தீர்க்கப்படும் சதவீதம் | அறிக்கையிடப்பட்டவை | விசாரிக்கப்பட்டு வருபவை | தீர்க்கப்பட்டவை | தீர்க்கப்படும் சதவீதம் |
| 1 | தாக்குதல் | 205407 | 43 | 205364 | 100% | 199622 | 10 | 199612 | 100% | 190802 | 8150 | 190802 | 100% |
| 2 | வாய்த் தர்க்கம் | 203331 | 36 | 203295 | 100% | 199649 | 10 | 199639 | 100% | 188865 | 5453 | 188865 | 100% |
| 3 | குடுமபச் சண்டைகள் | 114500 | 9 | 114491 | 100% | 111775 | 0 | 111775 | 100% | 103971 | 3640 | 103971 | 100% |
| 4 | கணவரின் / மனைவியின் துன்புறுத்தல் அல்லது கவனயீனம், வீட்டு வன்முறை | 25387 | 0 | 25387 | 100% | 22899 | 0 | 22899 | 100% | 22320 | 772 | 22320 | 100% |
| 5 | திருமணத்திற்கு அப்பாலான உறவுகளால் ஏற்படும் பிணக்குகள் | 11011 | 5 | 11006 | 100% | 10056 | 0 | 10056 | 100% | 9661 | 393 | 9661 | 100% |
| 6 | காணிப் பிணக்குகள் | 96217 | 43 | 96174 | 100% | 95046 | 0 | 95046 | 100% | 85817 | 2814 | 85817 | 100% |
| 7 | சமாதானத்தை சீர்குலைக்கும் சிக்கல்கள் | 2717 | 0 | 2717 | 100% | 1975 | 0 | 1975 | 100% | 2503 | 146 | 2503 | 100% |
| 8 | நம்பிக்கையை / வாக்குறுதியை மீறல் | 15043 | 1 | 15042 | 100% | 12268 | 4 | 12264 | 100% | 10580 | 929 | 10580 | 100% |
| 9 | பணம் மற்றும் பொருட்கள் தொடர்பான பிணக்குகள் | 111213 | 96 | 111117 | 100% | 116314 | 11 | 116303 | 100% | 115352 | 7633 | 115352 | 100% |
| 10 | பெற்றோரை கவனிக்காமை / துன்புறுத்தல் | 8410 | 2 | 8408 | 100% | 8243 | 0 | 8243 | 100% | 7414 | 225 | 7414 | 100% |
| 11 | வாடகைதாரருக்கும் வீட்டு உரிமையாளருக்கும் இடையிலான பிணக்குகள் | 8443 | 1 | 8442 | 100% | 7891 | 0 | 7891 | 100% | 7549 | 393 | 7549 | 100% |
| 12 | வேலையாளுக்கும் எஜமானுக்கும் இடையிலான பிணக்குகள் | 4108 | 0 | 4108 | 100% | 3415 | 0 | 3415 | 100% | 3540 | 195 | 3540 | 100% |
| 13 | சேதங்கள் ஏற்பட்டமை குறித்த சிக்கல்கள் | 19629 | 7 | 19622 | 100% | 18146 | 0 | 18146 | 100% | 16457 | 800 | 16457 | 100% |
| 14 | உளவியல் தாக்கங்களை ஏற்படுத்துகின்றமை குறித்த சிக்கல் | 7928 | 6 | 7922 | 100% | 7700 | 1 | 7699 | 100% | 7283 | 278 | 7283 | 100% |
| 15 | காணாமற் போனமை தொடர்பிலான முறைப்பாடுகள் | 6588 | 0 | 6588 | 100% | 5452 | 0 | 5452 | 100% | 3860 | 806 | 3860 | 100% |
| 16 | வேறு முறைப்பாடுகள் | 199418 | 159 | 199259 | 100% | 208636 | 4 | 208632 | 100% | 195643 | 9467 | 195643 | 100% |
| | **மொத்தம்** | **1039350** | **408** | **1038942** | **100%** | **1029087** | **40** | **1029047** | **100%** | **971617** | **42094** | **971617** | **100%** |

மூலம் - பொலிஸ் புள்ளிவிபரவியல் அலகு

### ❖ தரவுப் பகுப்பாய்வு

கடந்த 3 வருடங்களின் பல்வேறு முறைப்பாடுகள் தொடர்பிவ் நோக்குகையில், 2016 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரை பல்வேறு முறைப்பாடுகளில் வீழ்ச்சியைக் காட்டுகிறது. அதற்கமைய 2016 ஆம் அண்டில் 1039350 முறைப்பாடுகளும், 2017 ஆம் ஆண்டில் 1029087 முறைப்பாடுகளும் அறிக்கையிடப்பட்டதோடு, 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியில் 2018 ஆம் ஆண்டில் அவ் எண்ணிக்கையானது வீழ்ச்சியைக் காட்டுவதோடு, 1013661 முறைப்பாடுகள் அறிக்கையிடப்பட்டுள்ளன.

புலனாய்வு முன்னேற்றத்தை எடுத்துக் கொண்டால், 2016 மற்றும் 2017 ஆகிய ஆண்டுகளின் தீர்வு சதவீதம் 96% வரை வீழ்ச்சியடைந்துள்ளது.

பல்வேறு முறைப்பாடுகளுள் தாக்குதல் சம்பவங்களே பெருமளவில் அறிக்கையிடப்படுகின்றன. அட்டவணையின் பிரகாரம் கடந்த மூன்று வருடங்களில் குறித்த முறைப்பாடுகளில் வீழ்ச்சியைக் காணலாம். 2016 ஆம் ஆண்டில் தாக்குதல் தொடர்பில் 205407 முறைப்பாடுகள் அறிக்கையிடப்பட்டுள்ளதோடு, 2017 ஆம் ஆண்டில் அது 199622 வரை 3% ஆல் குறைவடைந்துள்ளது. 2018 ஆம் ஆண்டில் இக் குற்றங்களின் வீழ்ச்சியானது 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியில் 0.3% ஆகும். 2018 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்ட தாக்குதல் குறித்த 198902 முறைப்பாடுகளுள் 190802 முறைப்பாடுகள் அதாவது 96% ற்கு புலனாய்வுகள் பூர்த்தியாக்கப்பட்டு, தீர்வுகள் வழங்கப்பட்டுள்ளன.

கடந்த மூன்று வருடங்களில் மிரட்டல்கள் குறித்த குற்றங்களில் படிப்படியான வீழ்ச்சியைக் காணலாம். அட்டவணைக்கு அமைய 2016 ஆம் ஆண்டை விட 2017 ஆம் ஆண்டில் இம் முறைப்பாடுகள் 3682 ஆல் அதாவது 2% ஆல் குறைவடைந்துள்ளதுடன், 2018 ஆம் ஆண்டில் மிரட்டல் குறைத்த முறைப்பாடுகளானது 2017 ஆம் ஆண்டை விட 5331 ஆல் அதாவது 3% ஆல் குறைவடைந்துள்ளன. 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளுக்கான மிரட்டல் குற்றங்களுக்கான தீர்வு சதவீதத்தை எடுத்துக் கொண்டால், 99% ஐ விஞ்சியுள்ளதோடு, 2018 ஆம் ஆண்டில் 96% வரை வீழ்ச்சியடைந்திருப்பதைக் காணலாம்.

குடும்பச் சிக்கல்கள் குறித்த முறைப்பாடுகளும் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளுடன் ஒப்பீட்டளவில் 2018 ஆம் ஆண்டில் குறைவடைந்திருப்பதைக் காணலாம். (குடும்பச் சிக்கல்கள் குறித்த அடுத்த உப அத்தியாயத்தில் விடயங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.)

மிகத் தீவிரமாக சமூகமயமாகியுள்ள மற்றும் பெரும்பாலான பிணக்குகளுக்கு ஆணி வேராகக் கருதக் கூடிய காணிப் பிணக்குகள் குறித்து அவதானம் செலுத்துகையில், அது குறித்த முறைப்பாடுகளிலும் குறிப்பிட்ட அளவிலான வீழ்ச்சியைக் காணலாம். 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியில் 2017 ஆம் ஆண்டில் 96217 காணிப் பிணக்குகளிலிருந்து 95046 வரை 1171 ஆல் அதாவது ஆல் குறைவடைந்துள்ளதுடன், 2018 ஆம் ஆண்டில் இது தொடர்பான 6415 முறைப்பாடுகளுள் அதாவது 2017 ஆம் ஆண்டை விட 7% ஆல் குறைவடைந்துள்ளன. அதே போன்று காணி வழக்குகளின் தீர்வு முன்னேற்றத்தை எடுத்துக் கொண்டால், 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் முறையே 99.9%, 100மூ மற்றும் 97% என இனங் காணலாம்.

சமாதானத்தை சீர்குலைக்கும் குறித்த முறைப்பாடுகளும் அட்டவணைக்கு அமைய 2016 ஆம் ஆண்டில் 2717 அறிக்கையிடப்பட்டுள்ளதுடன், 2017 ஆம் ஆண்டில் 1975 முறைப்பாடுகள் வரை 27% ஆல் குறைவடைந்துள்ளது. 2018 ஆம் ஆண்டில் சமாதானத்தை சீர்குலைத்தல் தொடர்பான முறைப்பாடுகள் 34மூ ஆல் மீண்டும் உயர்வடைந்துள்ளன. 2017 ஆம் ஆண்டில் இம் முறைப்பாடுகளின் தீர்வு சதவீதம் 100% பெறுமதியைக் கொண்டிருப்பதோடு, 2018 ஆம் அண்டின் தீர்வு சதவீதம் 94% ஆகும்.

பல்வேறு முறைப்பாடுகளில் உள்ளடங்கியுள்ள நம்பிக்கை மற்றும் வாக்குறுதியை மீறல் குறித்த முன்னேற்றத்தை நோக்குகையில் கடந்த மூன்று வருடங்களில் குறிப்பிடத்தக்க அளவு வீழ்ச்சியைக் காணலாம். 2016 ஆம் ஆண்டில் வாக்குறுதி மீறல் தொடர்பான இம் முறைப்பாடுகள் 15043 அறிக்கையிடப்படடதோடு, 2017 ஆம் ஆண்டில் இம் முறைப்பாடுகள் 12268 வரை 18% ஆல் குறைவடைந்துள்ளன. 2018 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை 11509 ஆக இருப்பதோடு, அது 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியில் 6% வீழ்ச்சியாவதோடு, 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியில் 23% வீழ்ச்சியாகும்.

நம்பிக்கை மற்றும் வாக்குறுதியை மீறல் குறித்த முறைப்பாடுகள் தொடர்பான தீர்வு முன்னேற்றத்தை எடுத்துக் கொண்டால், 2016 மற்றும் 2017 ஆகிய வருடங்களில் 99% ஐ விஞ்சியுள்ளதோடு, 2018 ஆம் ஆண்டின் தீர்வு சதவீதம் 92% ஆகும்.

அட்டவணையின் தரவுகளின் படி பணம் மற்றம் பொருட்கள் குறித்த பிணக்குகளில் குறிப்பிடத்தக்க அளவு அதிகரிப்பை கடந்த மூன்று வருடங்களில் காணலாம். தாக்குதல், மிரட்டல் மற்றும்

குடும்பச் சிக்கல்கள் தொடர்பான முறைப்பாடுகளுக்கு அடுத்ததாக அதிகளவான முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ள பணம் மற்றும் பொருட்கள் குறித்த பிணக்குகள் தொடர்பான தரவுகளை நோக்குகையில், 2016 ஆம் ஆண்டில் இவ்வாறான 111213 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. 2017 ஆம் ஆண்டில் கிடைத்துள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை 116314 ஆகும். அதாவது, 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியில் இவ்வாறான முறைப்பாடுகள் 4% ஆல் அதிகரித்துள்ளன. 2018 ஆம் ஆண்டில் பணம் மற்றும் பொருட்கள் குறித்த இப் பிணக்குகளின் அதிகரிப்பானது 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியில் 6% அதிகரிப்பாகும்.

பணம் மற்றும் பொருட்கள் குறித்த இப் பிணக்குகளுக்கான தீர்வு சதவீதத்தை எடுத்துக் கொண்டால், 2016 மற்றும் 2017 ஆகிய ஆண்டகளில் 99.9% ஐ விஞ்சியுள்ளதோடு, 2018 ஆம் ஆண்டில் அச் சதவீதமானது 94% ஆகக் காட்டப்பட்டுள்ளது.

பெற்றோரை கவனிக்காமை அல்லது துன்புறுத்துதல் தொடர்பாகக் கிடைத்துள்ள முறைப்பாடுகளில் ஓரளவு வீழ்ச்சியைக் கடந்த மூன்று வருடங்களில் காண முடிதலானது விசேடமானதொரு விடயமாகக் கருதலாம். 2016 ஆம் ஆண்டில் இது தொடர்பான முறைப்பாடுகள் 8410 அறிக்கையிடப்பட்டுள்ளதோடு, 8243 வரை 2017 ஆம் ஆண்டில் 2% ஆல் குறைவடைந்துள்ளன. 2018 ஆம் ஆண்டில் இம் முறைப்பாடுகளின் வீழ்ச்சியானது 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியில் சதவீதமாக 7% ஆகும். இப் பிணக்குகள் குறித்த தீர்வு சதவீதம் 2016 மற்றும் 2017 ஆகிய ஆண்டகளில் 99% ஐ விஞ்சியுள்ளதோடு, 2018 ஆம் ஆண்டின் தீர்வு சதவீதம் 97% ஆகும்.

ஒட்டுமொத்தமாக பல்வேறு முறைப்பாடுகள் உள்ளடங்கிய பெரும்பாலான முறைப்பாடுகளில் குறித்த மூன்று ஆண்டுகளில் வீழ்ச்சியைக் காண முடிவதோடு, 2018 ஆம் ஆண்டின் பல்வேறு முறைப்பாடுகளுக்கான தீர்வுகள் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளுடன் ஒப்பீட்டு ரீதியில் வீழ்ச்சியடைந்திருப்பதைக் காணலாம் என்பதையும் குறிப்பிடல் வேண்டும்.

### 4.1. குடும்பப் பிணக்குகள்

பல்வேறு முறைப்பாடுகளுள் வேறாகத் தெரியும் பிணக்குகளாக குடும்பப் பிணக்குகளை இனங் காணலாம். இதன் கீழ் குடும்பப் பிணக்குகள், திருமணத்திற்கு அப்பாலான உறவுகள் மற்றும் வீட்டு வன்முறைகள் மூலம் ஏற்படும் பிணக்குகளும் உள்ளடங்கும். அட்டவணை இலக்கம் 08 இன் படி குடும்பப் பிணக்கு குறித்த முறைப்பாடுகள் 107611, வீட்டு வன்முறைகள் காரணமாக ஏற்படும் பிணக்குகள் 23092, திருமணத்திற்கு அப்பாலான உறவுகள் காரணமாக ஏற்படும் பிணக்குகள் 10054 என்றவாறு ஒட்டுமொத்த குடும்பப் பிணக்குகள் குறித்த முறைப்பாடுகள் 140757 அறிக்கையிடப்பட்டுள்ளன.

அட்டவணை இலக்கம் 08 **2016 – 2018 வரை குடும்பப் பிணக்குகள் அட்டவணை**

| அறிக்கையிடப்பட்ட முறைப்பாட்டின் தன்மை | | 2016 | | | | 2017 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | அறிக்கையிடப்பட்ட எண்ணிக்கை | விசாரிக்கப்பட்டு வருபவற்றின் எண்ணிக்கை | தீர்க்கப்பட்டவை | தீர்க்கப்படும் சதவீதம் | அறிக்கையிடப்பட்ட எண்ணிக்கை | விசாரிக்கப்பட்டு வருபவற்றின் | தீர்க்கப்பட்டவை | தீர்க்கப்படும் சதவீதம் | அறிக்கையிடப்பட்ட எண்ணிக்கை | விசாரிக்கப்பட்டு வருபவற்றின் | தீர்க்கப்பட்டவை | தீர்க்கப்படும் சதவீதம் |
| 1 | குடும்பப் பிணக்குகள் | 114500 | 9 | 114491 | 100% | 111775 | 0 | 111775 | 100% | 107611 | 3634 | 87070 | 81% |
| 2 | கணவரின்/ மனைவியின் துன்புறுத்தல் அல்லது கவனயீனம், வீட்டு வன்முறை | 25387 | 0 | 25387 | 100% | 22899 | 0 | 22899 | 100% | 23092 | 772 | 18270 | 79% |
| 3 | திருமணத்திற்கு அப்பாலான உறவுகளால் ஏற்படும் பிணக்குகள் | 11011 | 5 | 11006 | 100% | 10056 | 0 | 10056 | 100% | 10054 | 392 | 7804 | 78% |
| **மொத்தம்** | | **150898** | **14** | **150884** | **100%** | **144730** | **0** | **144730** | **100%** | **140757** | **4798** | **113144** | **80%** |

மூலம் - பொலிஸ் புள்ளிவிபரவியல் அலகு

❖ தரவுப் பகுப்பாய்வு

அட்டவணை இலக்கம் 08 படி 2018 ஆம் ஆண்டில் ஒட்டுமொத்த குடும்பப் பிணக்குகள் குறித்த முறைப்பாடுகள் 140757 ஆகும். அது 2018 ஆம் ஆண்டில் பொலிசிடம் அறிக்கையிடப்பட்ட ஒட்டுமொத்த பல்வேறு முறைப்பாடுகளின் 14% ஆகும். அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு பிணக்கு வகையையும் எடுத்துக் கொண்டால், ஒட்டுமொத்தமாக நோக்குகையில் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளுடன் ஒப்பீட்டு ரீதியில் 2018 ஆம் ஆண்டில் அம் முறைப்பாடுகளில் வீழ்ச்சியைக் காணலாம்.

அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு குடும்பப் பிணக்குகளின் கீழ் கிடைக்கப் பெற்றுள்ள முறைப்பாடுகளில் 2016 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆம் ஆண்டு வரை வீழ்ச்சியைக் காணலாம். அதாவது, 2016 ஆம் ஆண்டில் 114500 குடும்பப் பிணக்கு குறித்த முறைப்பாடுகள் அறிக்கையிடப்பட்டிருந்ததுடன், 2017 ஆம் ஆண்டில் 111775 வரை 2%ஆல் குறைவடைந்துள்ளன. 2018 ஆம் ஆண்டில் அப் பிணக்குகள் 107611 அறிக்கையிடப்பட்டிருந்ததுடன், அது சதவீதமாக 2017 ஆம் ஆண்டை விட 4% வீழ்ச்சியாகும். தீர்வு சதவீதத்தை எடுத்துக் கொண்டால், 2016 மற்றும் 2017 ஆகிய வருடங்களில் 100% உம், 2018 ஆம் ஆணண்டில் அச் சதவீதம் 8 வரை குறைவடைந்திருந்தமையும் இனங் காண முடியும்.

வீட்டு வன்முறை காரணமாக ஏற்படும் குடும்பப் பிணக்குகள் 2016 ஆம் ஆண்டை விட 2017 ஆம் ஆண்டில் வீழ்ச்சியடைந்திருப்பதைக் காட்டினாலும், 2018 ஆம் ஆண்டில் சிறு அதிகரிப்பைக் காணலாம். அதாவது வீட்டு வன்முறையின் கீழ் 2016 ஆம் ஆண்டில் 25387 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதுடன், 2017 ஆம் ஆண்டில் அது 22899 வரை 10% ஆல் குறைவடைந்துள்ளது. 2018 ஆம் ஆண்டில் அவ் எண்ணிக்கையானது 23092 வரை 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியில் 0.8% ஆல் சிறு அதிகரிப்பினைக் காட்டினாலும், 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியில் மேலும் 9% வீழ்ச்சியைக் காட்டுகிறது. இப் பிணக்குகளுக்கான தீர்வு முன்னேற்றத்தை எடுத்துக் கொண்டால், 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் 100% ஐக் கொண்டுள்ளதோடு, 2018 ஆம் ஆண்டில் தீர்வு சதவீதம் 79% ஆகும்.

திருமணத்திற்கு அப்பாலான உறவுகள் காரணமாக ஏற்படும் குடும்பப் பிணக்குகளிலும் 2016 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் வரை வீழ்ச்சியைக் காணலாம். அதற்கமைய திருமணத்திற்கு அப்பாலான உறவுகள் குறித்த 11011 முறைப்பாடுகள் 2016 ஆம் ஆணடில் அறிக்கையிடப்பட்டுள்ளதுடன், 2017 ஆம் ஆண்டில் அவ் எண்ணிக்கை 10056 வரை 9% ஆல் வீழ்ச்சியடைந்துள்ளன. 2018 ஆம் ஆண்டில் 10054 குடும்பப் பிணக்குகள் அறிக்கையிடப்பட்டதோடு, 2017 ஆம் ஆண்டை விட 02 முறைப்பாடுகள் குறைவடைந்துள்ளமையைக் காணலாம். எவ்வாறாயினும், 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியில் அது மேலும் குறைந்த பெறுமதியகைக் கொண்டுள்ளமை புலனாகிறது. திருமணத்திற்கு அப்பாலான உறவுகள் குறித்த குடும்பப் பிணக்குகளின் தீர்வானது 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் 100% ஆக இருந்ததோடு, 2018 ஆம் ஆண்டில் 78% தீர்வு சதவீதத்தைக் கொண்டுள்ளது.

ஒட்டுமொத்த குடும்பப் பிணக்கு முறைப்பாடுகளை எடுத்துக் கொண்டால், 2016 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரை தெளிவானதொரு வீழ்ச்சியைக் காணலாம். உதாரணமாக, 2016 ஆம் ஆண்டில் ஒட்டுமொத்த குடும்பப் பிணக்குகள் 150898 அறிக்கையிடப்பட்டுள்ளதுடன், 2017 ஆம் ஆண்டில் அது 144730 வரை 6168 ஆல் அதாவது, 4% ஆல் குறைவடைந்துள்ளது. 2018 ஆம் ஆண்டில் இம் முறைப்பாடுகள் 140757 அறிக்கையிடப்பட்டுள்ளதுடன், அது 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியில் 3973 ஆல் அதாவது 3மூ வீழ்ச்சியாகும்.

## 05. தற்கொலை செய்து கொள்ளல்.

உலகில் வருடாந்தம் நிகழும் மரணங்களுள் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையானவை தற்கொலையினால் நிகழ்பவை எனத் தெரிய வந்துள்ளது. உலகம் முழுவதும் 40 விநாடிகளுக்கு ஒருவர் தற்கொலை செய்து கொள்வதாக வெளிப்பட்டுள்ளது. ஆராய்ச்சியாளர்களுக்கு அமைய இள வயதினரிடையே தற்கொலைகள் அதிகரித்து வருகின்றன. இலங்கை தொடர்பில் எடுத்துக் கொண்டால், உலகில் அதிகளவான தற்கொலைகள் இடம்பெறும் நாடுகளுள் இலங்கையும் உள்ளடங்கியுள்ளது. நாளுக்கு நாள் அழிவடைந்து வரும் சமுதாயத் தொடர்புகள் மற்றும் குடும்ப உறுப்பினர்களிடையே ஏற்படும் இடைவெளி போன்றே அதிக மன அழுத்தம், சமூக மற்றும் பொருளாதாரச் சிக்கல்கள் போன்றவை இத் தற்கொலைகளுக்கு நேரடியாகத் தாக்கம் செலுத்துகின்றமை பல ஆய்வுகள் மூலம் வெளிப்பட்டுள்ளன.

இலங்கை பொலிசிடம் அறிக்கையிடப்படும் தற்கொலைகள் தொடர்பில் பகுப்பாய்வு செய்கையில், தற்கொலை செய்து கொள்வதற்கான காரணம், தற்கொலை செய்து கொள்ளும் முறை, அவ்வாறு மரணிக்கும் நபர்களின் தொழில்களின் தன்மை, பால் மற்றும் வயது போன்ற வகுதிகளின் கீழ் வகைப்படுத்தப்படுகின்றன. பின்வரும் அட்டவணை இலக்கம் 9, 10, 11 மற்றும் 12 மூலம் ஒவ்வொரு வகுதியின் கீழ் தரவுகள் முன்வைக்கப்படுகின்றன.

### 5.1 தற்கொலை செய்து கொண்ட முறைகள்

தற்கொலை தொடர்பில் ஆய்வு செய்கையில், அதன் பொருட்டு பயன்படுத்தப்படும் முறைகளை பல்வேறு வழிகளில் அறிந்து கொள்ளலாம். இலங்கை பொலிசிடம் அறிக்கையிடப்படும் வகையில் 15 தற்கொலை முறைகளின் கீழ் பின்வரும் அட்டவணை மூலம் விடயங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

அட்டவணை இலக்கம் 09 **2016 – 2018 தற்கொலை செய்து கொண்ட முறைகள் உள்ளடங்கிய அட்டவணை**

| | முறை | 2016 | | | 2017 | | | 2018 | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் |
| 1 | கிருமிநாசினி மற்றும் களைக்கொல்லி அருந்துதல் | 698 | 175 | 873 | 698 | 154 | 852 | 696 | 104 | **800** |
| 2 | கழுத்தை நெரித்துக் கொள்வதன் மூலம் | 1284 | 289 | 1573 | 1508 | 306 | 1814 | 1546 | 358 | **1904** |
| 3 | நீருடனான இடங்களில் குதித்தல் (கிணறு, ஆறு, கால்வாய், ஓடை, கடல் போன்றன) | 51 | 42 | 93 | 72 | 37 | 109 | 69 | 42 | **111** |
| 4 | துப்பாக்கிப் பாவனை மூலம் | 14 | 2 | 16 | 6 | 8 | 14 | 14 | 6 | **20** |
| 5 | கைக்குண்டு அல்லது வேறு வெடி பொருட் பாவனை மூலம் | 1 | 0 | 1 | 2 | 0 | 2 | 0 | 0 | **0** |
| 6 | கூர்மையான ஆயுதப் பாவனை மூலம் | 4 | 0 | 4 | 9 | 2 | 11 | 4 | 3 | **7** |
| 7 | தீ வைத்துக் கொள்வதன் மூலம் | 42 | 75 | 117 | 42 | 72 | 114 | 40 | 60 | **100** |
| 8 | புகையிரதம் அல்லது வாகனங்களுக்கு முன்னால் பாய்வதன் மூலம் | 106 | 30 | 136 | 137 | 26 | 163 | 122 | 27 | **149** |
| 9 | அமிலத் திராவகம் அருந்துவதன் மூலம் | 23 | 7 | 30 | 30 | 11 | 41 | 30 | 8 | **38** |
| 10 | எரிபொருள் அருந்துவதன் மூலம் (பெற்றோல், மண்ணெண்ணெய்) | 2 | 1 | 3 | 2 | 1 | 3 | 4 | 0 | **4** |
| 11 | மேற்கத்தைய மருந்துகளை குடிப்பதன் மூலம் (தூக்க மாத்திரை போன்றன) | 10 | 13 | 23 | 11 | 10 | 21 | 10 | 10 | **20** |
| 12 | இயற்கையான நஞ்சுகளை உட் கொள்வதன் மூலம் (அலரி விதை, கார்த்திகைக் கிழங்கு) | 43 | 35 | 78 | 36 | 32 | 68 | 34 | 30 | **64** |
| 13 | உயரமான இடங்களிலிருந்து குதித்தல் | 7 | 2 | 9 | 6 | 2 | 8 | 6 | 0 | **6** |
| 14 | போதைப் பொருள் உட்கொள்ளல் அல்லது போதை ஊசி ஏற்றிக் கொள்வதன் மூலம் | 2 | 0 | 2 | 0 | 0 | 0 | 1 | 0 | **1** |
| 15 | ஏனைய முறைகளினால் | 52 | 15 | 67 | 27 | 16 | 43 | 43 | 14 | **57** |
| | மொத்தம் | **2339** | **686** | **3025** | **2586** | **677** | **3263** | **2619** | **662** | **3281** |

மூலம் - பொலிஸ் புள்ளிவிபரவியல் அலகு

❖ தரவுப் பகுப்பாய்வு

அட்டவணை இலக்கம் 09 ற்கு அமைவாக கடந்த மூன்று வருடங்களின் தரவுகளை ஆய்வு செய்கையில், 2016 ஆம் ஆண்டில் 3025 ஆக இருந்த தற்கொலைகள் 2017 ஆம் ஆண்டில் 3263 வரை 8% ஆலும் 2018 ஆம் ஆண்டில் 3281 வரை 0.5% ஆலும் படிப்படியாக உயர்வடைவதைக் காணலாம். அட்டவணைக்கு அமைய கழுத்து நெரிபட்டதன் காரணமாக நிகழ்ந்த தற்கொலைகளே அதிகளவில் அறிக்கையிடப்பட்டுள்ளன. 2016 ஆம் ஆண்டில் 1573 ஆக இருந்த அம் மரணங்களின் எண்ணிக்கை 2017 ஆம் ஆண்டில் 1814 வரை 15% ஆலும் 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டளவில் 2018 ஆம் ஆண்டில் 1904 வரை 5மூ ஆலும் உயர்வடைந்துள்ளன. மரணித்த நபர்களுள் 8 ஆனவர்கள் ஆண்களாவதோடு, 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டளவில் கழுத்து நெரிபட்டதன் காரணமாக மரணித்த பெண்களின் எண்ணிக்கை 2018 ஆம் ஆண்டில் 17% ஆல் உயர்வடைந்துள்ளது.

கிருமிநாசினியை அருந்துவதால் ஏற்படும் மரணமே தற்கொலைகளுள் இரண்டாம் இடத்திலிருக்கின்றமை அட்டவணை மூலம் புலனாகிறது. 2016, 2017 மற்றும் 2018 ஆகிய ஆண்டுகளில் இம் முறைகள் மூலம் நிகழ்ந்துள்ள தற்கொலைகளில் வீழ்ச்சியைக் காணலாம். 2016 ஆம் ஆண்டில் இவ்வாறான தற்கொலைகள் 873 அறிக்கையிடப்பட்டதோடு, 2017 ஆம் ஆண்டில் அவ் எண்ணிக்கை 852 வரை 2% ஆல் குறைவடைந்துள்ளது. 2018 ஆம் ஆண்டில் கிருமிநாசினி உட்கொள்வதன் மூலம் தற்கொலை செய்து கொண்ட எண்ணிக்கை 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டளவில் 800 வரை 6% ஆல் சரிவடைந்துள்ளது. இங்கும் பெருமளவில் ஆண்களே தற்கொலை செய்து கொண்டுள்ளதுடன், அது 2016 ஆம் ஆண்டில் 80% ஆக இருந்ததுடன், 2017 ஆம் ஆண்டில் 82% ஆகும். 2018 ஆம் ஆண்டில் தற்கொலை செய்து கொண்டோருள் 87% ஆண்களாவர்.

வருடாந்த தற்கொலைகளுள் புகையிரதத்திற்கு முன்னால் பாய்ந்து தற்கொலை செய்து கொள்ளலே மூன்றாம் இடத்திலிருக்கின்றது. 2016 ஆம் ஆணுடில் இவ்வாறு தற்கொலை செய்து கொண்டவர்களின் எண்ணிக்கை 136 ஆகும். 2017 ஆம் ஆண்டில் இவ்வாறான தற்கொலைகள் 163 அறிக்கையிடப்பட்டதுடன், 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டளவில் அது 20% அதிகரிப்பாகும். 2018 ஆம் ஆண்டில் புகையிரதத்திற்கு முன்னால் பாய்ந்து தற்கொலை செய்து கொண்டவர்களின் எண்ணிக்கை 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டளவில் 149 வரை 8% ஆல் குறைவடைந்துள்ளது.

தீ வைத்துக் கொண்டு தற்கொலை செய்து கொள்ளலும் குறிப்பிடத்தக்க அளவு அறிக்கையிடப்பட்டுள்ளதுடன், அம் மரணங்களும் கடந்த மூன்று வருடங்களில் படிப்படியாகக் குறைவடைந்துள்ளமையைக் காணலாம். 2016, 2017 மற்றும் 2018 ஆகிய ஆண்டுகளில் முறையே 117, 114 மற்றும் 100 என்றவாறு இவ் வீழ்ச்சியைக் காணலாம். அதற்கமைய 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டளவில் 2017 ஆம் ஆண்டில் 2% ஆலும் 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டளவில் 2018 ஆம் ஆண்டில் 12% ஆலும் தீ வைத்து தற்கொலை செய்து கொள்ளும் எண்ணிக்கைக் குறைவடைந்துள்ளது. மரணித்தவர்களுள் பெரும்பாலானவர்கள் பெண்களாக இருப்பதே இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகும். அதற்கமைய 2016 ஆம் ஆண்டில் தீ வைத்துக் கொண்டு மரணித்தவர்களுள் 64% பெண்களாவதோடு, 2017 ஆம் ஆண்டில் அது 63% ஆகும். 2018 ஆம் ஆண்டில் தீ வைத்துக் கொண்டு மரணித்தவர்களுள் பெண்களின் சதவீதம் 60% ஆகும்.

## 5.2. தற்கொலைக்கான காரணங்கள்

தற்கொலை செய்து கொள்ளும் முறைகளுக்கு மேலதிகமாக தற்கொலைக்கான காரணங்களும் இலங்கை பொலிசிடம் அறிக்கையிடப்பட்டுள்ளவாறு பின்வரும் அட்டவணை இலக்கம் 10 மூலம் முன்வைக்கப்பட்டுள்ளன.

அட்டவணை இலக்கம் 10 **206 – 2018 வரை தற்கொலைக்கான காரணங்கள் உள்ளடங்கிய அட்டவணை**

| தொடரிலக்கம் | முறை | 2016 | | | 2017 | | | 2018 | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் |
| 1 | பொருளாதாரம் தொடர்பான சிக்கல்கள் (வறுமை, கடன் முதலானவை) | 124 | 27 | **151** | 166 | 29 | **195** | 200 | 38 | **238** |
| 2 | தொழில் தொடர்பான சிக்கல்கள் | 21 | 0 | **21** | 21 | 4 | **25** | 23 | 3 | **26** |
| 3 | பெரியவர்களுடன் ஏற்படும் சிக்கல்கள் (ஆசிரியர்கள் பெற்றோர் உட்பட) | 45 | 34 | **79** | 52 | 15 | **67** | 39 | 32 | **71** |
| 4 | கணவனால் அல்லது மனைவியால் ஏற்படும் இடையூறு மற்றும் குடும்பச் சிக்கல் | 445 | 158 | **603** | 477 | 148 | **625** | 432 | 159 | **591** |
| 5 | காதல் தொடர்புகளால் விரக்தியடைதல், எதிர்பார்ப்புக்கள் வீணாதல் | 152 | 120 | **272** | 169 | 96 | **265** | 197 | 91 | **288** |
| 6 | பாலியல் வன்முறைகளுக்கு உள்ளாதல் / கர்ப்பழிப்பு | 3 | 0 | **3** | 1 | 0 | **1** | 4 | 3 | **7** |
| 7 | போதைப் பொருட்களுக்கு அடிமையாதல் | 124 | 1 | **125** | 137 | 0 | **137** | 143 | 0 | **143** |
| 8 | பெற்றோர் உட்பட உறவினர்களின் மரணத்தால் மன வேதனைக்கு உள்ளாதல் | 34 | 9 | **43** | 35 | 20 | **55** | 37 | 7 | **44** |
| 9 | நடைமுறை அல்லது நிலையான சொத்துக்களை இழத்தல் | 3 | 4 | **7** | 4 | 1 | **5** | 2 | 1 | **3** |
| 10 | பரீட்சையில் சித்தியடையாமை | 3 | 6 | **9** | 6 | 3 | **9** | 2 | 3 | **5** |
| 11 | பிள்ளைகள் கவனிக்காமை | 10 | 4 | **14** | 14 | 6 | **20** | 14 | 0 | **14** |
| 12 | பாலியல் குறைபாடுகள் | 2 | 2 | **4** | 2 | 0 | **2** | 4 | 1 | **5** |
| 13 | உளவியல் குறைபாடுகள் | 178 | 66 | **244** | 246 | 84 | **330** | 258 | 79 | **337** |
| 14 | நாட்பட்ட நோய் மற்றும் உடல் அசௌகரியங்கள் | 318 | 63 | **381** | 321 | 58 | **379** | 359 | 60 | **419** |
| 15 | ஏனைய காரணங்கள் | 877 | 192 | **1069** | 935 | 213 | **1148** | 905 | 185 | **1090** |
| **மொத்தம்** | | **2339** | **686** | **3025** | **2586** | **677** | **3263** | **2619** | **662** | **3281** |

மூலம் - பொலிஸ் புள்ளிவிபரவியல் அலகு

## ❖ தரவுப் பகுப்பாய்வு

இலங்கையில் தற்கொலைகளை எடுத்துக் கொண்டால், அதற்குத் தாக்கம் செலுத்தும், சமுதாயத்தின் கவனத்திற்கு உள்ளாக வேண்டிய மிக விசேடமான பல காரணங்களை மேற்குறித்த அட்டவணை மூலம் இனங் காணலாம். அவற்றுள் பிரதானமான சில காரணங்கள் இங்கு பகுப்பாய்வு செய்யப்படுகின்றன.

அட்டவணைக்கு அமைய 2018 ஆம் ஆண்டில் அதிகளவான தற்கொலைகளுக்குக் காரணமாக குடும்பச் சிக்கல்களை இனங் காணலாம். குடும்பமொன்றினுள் இடம்பெறும் சண்டை சாதாரணமானதொரு நிகழ்வாக சமுதாயத்தினால் நோக்கப்படுகின்றமை தென்பட்டாலும், ஆரம்பத்தில் உரிய தீர்வு கிடைக்காத சிறிய குடும்பச் சிக்கலாக இருந்தாலும் துயரகரமான முடிவை நோக்கிச் செல்லக் கூடியதாக இருக்கும் என்பதற்கு சிறந்த உதாரணமாக, 2018 ஆம் ஆண்டில் 591 தற்கொலைகளைக் காட்டலாம். அட்டவணைக்கு அமைய மூன்று வருடங்களிலும் அதிகளவானவர்களின் தற்கொலைக்கான காரணமாக இக் குடும்பச் சிக்கல்களைக் காட்டலாம். 2016 ஆம் ஆண்டில் 603 பேர் குடும்பச் சிக்கல் காரணமாக தற்கொலை செய்து கொண்டுள்ளதுடன், 2017 ஆம் ஆண்டில் அது 625 வரை 4% ஆல் அதிகரித்துள்ளது. 2018 ஆம் ஆண்டில் குடும்பச் சிக்கல் காரணமாக தற்கொலை செய்து கொண்டவர்களின் எண்ணிக்கை 591 வரை 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியில் 5% ஆல் குறைவடைந்துள்ளது.

குடும்பச் சண்டை காரணமாக தற்கொலை செய்து கொள்வோருள் பெருமளவானவர்கள் ஆண்களாக இருக்கின்றமை தரவுகள் மூலம் புலனாகிறது. 2016 ஆம் ஆண்டில் தற்கொலை செய்து கொண்டவர்களுள் 74% ஆண்களாக இருப்பதோடு, 2017 ஆம் ஆண்டில் அவ் எண்ணிக்கை

76% ஆகும். 2018 ஆம் ஆண்டில் குடும்பச் சிக்கல் காரணமாக தற்கொலை செய்து கொண்டவர்களுள் 75% ஆண்களாக இருக்கின்றமையை அதற்கான உதாரணமாகக் காட்டலாம்.

அட்டவணைக்கு அமைய 2018 ஆம் ஆண்டில் பெருமளவானவர்களை தற்கொலை செய்து கொள்ளத் தூண்டிய இரண்டாவது மற்றும் மூன்றாவது காரணங்கள் மீது கவனம் செலுத்துகையில், உடல் ரீதியான காரணங்களைப் போன்றே உளவியல் ரீதியான காரணங்களினாலும் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையானோர் தற்கொலை செய்து கொள்கின்றமை புலனாகிறது. இங்கு மன நோய் காரணமாக 337 பேரும், உடல் ஊனம் மற்றும் நாட்பட்ட நோய் காரணமாக 419 பேரும் 2018 ஆம் ஆண்டில் தற்கொலை செய்து கொண்டுள்ளனர்.

சரீர நோய்கள் காரணமாக தற்கொலை செய்து கொள்வோரின் எண்ணிக்கையைக் கவனத்திற் கொள்கையில், 2016 ஆம் ஆண்டில் 381 தற்கொலைகள் பதிவாகியுள்ளதுடன், 83% ஆண்களாவர். 2017 ஆம் ஆண்டில் குறித்த காரணத்தினால் மரணித்தோர் எண்ணிக்கை 379 ஆவதோடு, 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியில் அம் மரணங்களில் சிறியதொரு வீழ்ச்சியைக் காட்டுகிறது. 2017 ஆம் ஆண்டில் மரணித்தோரின் எண்ணிக்கையில் 85% ஆண்களாவர். நாட்பட்ட நோய் மற்றும் சரீர நோய்கள் காரணமாக 2018 ஆம் ஆண்டில் தற்கொலை செய்து கொண்டோர் எண்ணிக்கை 419 ஆவதோடு, 86% ஆண்களாவர். 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியில் 2018 ஆம் ஆண்டில் இத்தகைய தற்கொலைகளில் 10% அதிகரிப்புக் காணப்படுகிறது.

உளவியல் நோய் காரணமாக தற்கொலை செய்து கொள்வோர் குறித்து கவனத்திற் கொள்கையில், 2016 ஆம் ஆண்டில் 244 தற்கொலைகள் பதிவாகியுள்ளதுடன், 73% ஆண்களாவர். 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியில் 2017 ஆம் ஆண்டில் உளவியல் நோய் காரணமாக தற்கொலை செய்து கொண்டோர் எண்ணிக்கை 330 ஆகும். அது 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியில் 35% அதிகரிப்பாகும். இம் மரணங்களுள் 74% ஆண்களாவர். 2018 ஆம் ஆண்டில் உளவியல் நோய் காரணமாக தற்கொலை செய்து கொண்டோர் எண்ணிக்கை 337 ஆவதோடு, 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியில் அது 2% அதிகரிப்பாகும். தற்கொலை செய்து கொண்டோரின் இவ் எண்ணிக்கையில் 76மூ ஆண்களாவர். 2018 ஆம் ஆண்டில் ஒட்டுமொத்த தற்கொலைகளில் 23% நபர்கள் உடல் மற்றும் உள நோய்கள் காரணமாக தற்கொலை செய்து கொண்டுள்ளமையை அட்டவணையின் தரவுகளுக்கு அமைய அறியலாம்.

காதல் தேல்விகளையும் தற்கொலைக்கான பிரதானமான காரணமாகக் கருத முடிவதோடு, 2017 ஆம் ஆண்டில் 272 பேர் இதன் காரணமாக தற்கொலை செய்து கொண்டுள்ளனர். அதில் 56% ஆண்களாவதோடு, 2017 ஆம் ஆண்டில் காதல் தொடர்புகள் காரணமாக தற்கொலை செய்து கொண்டோரின் எண்ணிக்கை 265 ஆக 2016 ஆம் வருடத்தை விட 2% வீழ்ச்சியைக் காட்டுகிறது. 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியில் 2018 ஆம் ஆண்டில் இவ்வாறான தற்கொலைகள் 288 வரை 9% ஆல் உயர்வடைந்துள்ளமையைக் காணலாம். தற்கொலை செய்து கொண்டோருள் பெரும்பாலானவர்கள் ஆண்களாக இருப்பதோடு, 2017 ஆம் ஆண்டில் 64% 2018 ஆம் ஆண்டில் 68% என்றவாறு காதல் தோல்வி காரணமாக ஆண்கள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர்.

வறுமை மற்றும் கடன் போன்ற பொருளாதாரச் சிக்கல்கள் காரணமாகவும் கடந்த சில வருடங்களில் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையானோர் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். 2016 ஆம் ஆண்டில் பொருளாதாரச் சிக்கல்கள் காரணமாக தற்கொலை செய்து கொண்டோரின் எண்ணிக்கை 151 ஆக இருந்ததோடு, அதில் 82% ஆண்களாவர். 2017 ஆம் ஆண்டில் பொருளாதாரச் சிக்கல்கள் காரணமாக தற்கொலை செய்து கொண்டோரில் 85% ஆண்களாவர். 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியில் 2018 ஆம் ஆண்டில் பொருளாதாரச் சிக்கல்கள் காரணமாக தற்கொலை செய்து கொண்டோரின் எண்ணிக்கை 22% ஆல் அதாவது, 238 வரை உயர்வடைந்துள்ளது. இங்கும் தற்கொலை செய்து கொண்டோருள் 84% ஆண்களாவர்.

நச்சு போதைப் பொருள் பாவனையும் தற்கொலைக்குத் தூண்டும் பிரதான காரணமாகியுள்ளமை அட்டவணையின் தரவுகள் படி வெளிப்படுகிறது. மதுபானத்திற்கு அடிமையாவதன் காரணமாக

2016 ஆம் ஆண்டில் 125 பேர் தற்கொலை செய்து கொண்டுள்ளதுடன், 2017 ஆம் ஆண்டில் 137 பேர் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியில் 2017 ஆம் ஆண்டில் போதைப் பொருளுக்கு அடிமையானதன் காரணமாக தற்கொலை செய்து கொள்கின்றமை 10மூ ஆல் உயர்வடைந்துள்ளதுடன், 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியில் 2018 ஆம் ஆண்டில் இத்தகைய தற்கொலைகள் 143 அறிக்கையிடப்பட்டதுடன், சதவீதமாக அது 6% அதிகரிப்பாகும். 2016 ஆம் ஆண்டில் பெண்ணொருவர் போதைப் பொருளுக்கு அடிமையானதன் காரணமாக தற்கொலை செய்து கொண்டுள்ளதுடன், அதைத் தவிர்த்து அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மூன்று வருடங்களிலும் இக் காரணத்தினால் தற்கொலை செய்து கொண்ட அனைவருமே ஆண்களாவர்.

### 5.3. தற்கொலை செய்து கொண்ட நபர்களின் தொழிலின் தன்மை

தற்கொலை செய்து கொண்ட நபர்களின் தொழிலின் தன்மையும் அவர்களை இதற்குத் தூண்டுவதற்கு ஓரளவு தாக்கம் செலுத்தக் கூடிய ஒரு காரணியாகக் கொள்ளப்படுகிறது. அதற்கமைய 15 வகுதிகளின் வகைப்பாட்டின் கீழ் பின்வரும் அட்டவணை இலக்கம் 11 மூலம் அது தொடர்பில் தரவுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

அட்டவணை இலக்கம் 11 **2016 – 2018 வரை தற்கொலை செய்து கொண்ட நபர்களின் தொழிலின் தன்மை உள்ளடங்கிய அட்டவணை**

| தொடரி லக்கம் | தொழிலின் தன்மை | 2016 | | | 2017 | | | 2018 | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் |
| 1 | தொழில்சார், தொழிநுட்ப மற்றும் உரிய துறைகளின் ஊழியர்கள் (மருத்துவர்கள், பொறியியலாளர்கள், ஆசிரியர்கள், புகைப்படக் கலைஞர்கள் போன்றோர்) | 42 | 5 | **47** | 65 | 5 | **70** | 54 | 5 | **59** |
| 2 | நிர்வாக, நிறைவேற்று முகாமைத்துவ துறையின் ஊழியர்கள் | 11 | 3 | **14** | 10 | 1 | **11** | 10 | 2 | **12** |
| 3 | எழுதுநர்கள் மற்றும் தொடர்புடைய வகுதிகளைச் சேர்ந்த ஊழியர்கள் (சுருக்கெழுத்தாளர்கள், தட்டெழுத்தாளர்கள், தபால் மற்றும் | 23 | 3 | **26** | 29 | 2 | **31** | 21 | 2 | **23** |
| 4 | வியாபார ஊழியர்கள் | 68 | 15 | **83** | 102 | 9 | **111** | 99 | 19 | **118** |
| 5 | சேவைத் துறைகளின் ஊழியர்கள் (சமையல்காரர், தையல்காரர், சிகை அலங்காரிகள் உட்பட) | 37 | 12 | **49** | 47 | 14 | **61** | 53 | 23 | **76** |
| 6 | விவசாய / கால்நடை பராமரிப்பு / வேட்டையாடுதல் மற்றும் வனப் பாதுகாப்புடன் தொடர்புடைய ஊழியர்கள்) | 391 | 25 | **416** | 478 | 31 | **509** | 484 | 27 | **511** |
| 7 | உற்பத்தித் தொழிற்பாடுகளுடன் தொடர்புடைய ஊழியர்கள், கைவினைஞர்கள் மற்றும் உரிய ஊழியர்கள் போக்குவரத்து இயந்திரங்கள் | 184 | 15 | **199** | 138 | 13 | **151** | 148 | 10 | **158** |
| 8 | முப்படையினர் | 33 | 0 | **33** | 31 | 1 | **32** | 24 | 0 | **24** |
| 9 | பொலிஸ் | 9 | 0 | **9** | 5 | 0 | **5** | 8 | 0 | **8** |
| 10 | பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் | 11 | 1 | **12** | 16 | 2 | **18** | 7 | 0 | **7** |
| 11 | ஓய்வு பெற்றோர் | 34 | 4 | **38** | 45 | 1 | **46** | 69 | 1 | **70** |
| 12 | மாணவர்கள் | 38 | 82 | **120** | 68 | 69 | **137** | 60 | 74 | **134** |
| 13 | அரசியல்வாதிகள் | 0 | 0 | **0** | 0 | 0 | **0** | 0 | 1 | **1** |
| 14 | தொழிலற்றோர் | 741 | 376 | **1117** | 797 | 419 | **1216** | 749 | 406 | **1155** |
| 15 | தொழிலுக்கு அமைய வகைப்படுத்தப்படாதோர் | 717 | 145 | **862** | 755 | 110 | **865** | 833 | 92 | **925** |
| | **மொத்தம்** | **2339** | **686** | **3025** | **2586** | **677** | **3263** | **2619** | **662** | **3281** |

மூலம் - பொலிஸ் புள்ளிவிபரவியல் அலகு

### ❖ தரவுப் பகுப்பாய்வு

கடந்த சில வருடங்களில் இலங்கையில் தற்கொலைகள் தொடர்பில் ஆய்வு செய்கையில், மரணித்தவர்களின் தொழிலின் தன்மையை அதற்கு ஓரளவு தாக்கம் செலுத்தக் கூடிய காரணியாகக் குறிப்பிடலாம். குறிப்பாக, தொழிலின்மையானது தற்கொலைக்குத் தூண்டக் கூடிய ஒரு காரணியாக கவனத்திற்கு உட்படுத்தப்பட வேண்டியமை அட்டவணையின் தரவுகளின் படி புலனாகிறது.

அட்டவணைக்கு அமைய கடந்த மூன்று வருடங்களை நோக்குகையில், தொழிலின்றி துன்புறுவோரின் தற்கொலைகள் உயர் மட்டத்தில் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. அதற்கமைய 2016 ஆம் ஆண்டில் 1117, 2017 ஆம் ஆண்டில் 1216, 2018 ஆம் ஆண்டில் 1155 ஆக அவ் எண்ணிக்கையைக் காட்டலாம். சதவீத ரீதியில் நோக்கினால், 2016 ஆம் ஆண்டை விட 2017 ஆம் ஆண்டில் தொழிலின்றி அவதியுறும் நபர்களின் தற்கொலைகள் 9% ஆல் உயர்வடைந்துள்ளதுடன், 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியில் 2018 ஆம் ஆண்டில் தொழிலின்றி அவதியுறும் நபர்களின் தற்கொலைகள் 5% ஆல் குறைவடைந்துள்ளன. 2018 ஆம் ஆண்டின் ஒட்டுமொத்த தற்கொலைகளுள் 35% தொழிலின்றி அவதியுறும் நபர்களின் தற்கொலைகள் என்பதை இனங் காணலாம். 2016 ஆம் ஒட்டுமொத்த தற்கொலைகளுள் 37% தொழிலின்றி அவதியுறும் நபர்களின் தற்கொலைகளாவதோடு, 2017 ஆம் ஆண்டில் அச் சதவீதம் 73% ஆகும்.

ஏனைய தொழில்களைச் சார்ந்தவர்களின் தற்கொலைகளுடன் ஒப்பிடுகையில், 35% தொழிலின்றி அவதியுறும் நபர்களின் தற்கொலைகளுள் பெண்கள் தற்கொலை செய்து கொள்ளும் எண்ணிக்கை உயர் பெறுமதியைக் கொண்டுள்ளமையை இனங் காணலாம்.

உதாரணமாக, 2018 ஆம் ஆண்டில் தொழிலற்ற ஆண்கள் 749 பேர் தற்கொலை செய்து கொண்டுள்ளதுடன், 406 பெண்கள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். 2016 ஆம் ஆண்டில் தொழிலற்ற ஆண்கள் 741 பேர் தற்கொலை செய்து கொள்கையில் 376 பெண்கள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். 2017 ஆம் ஆண்டில் அவ் எண்ணிக்கையானது 798 ஆண்களாகவும், 419 பெண்களாகவும் காணப்பட்டது.

2018 ஆம் ஆண்டில் தொழிலற்ற ஆண்கள் தற்கொலை செய்து கொள்வதை எடுத்துக் கொண்டால், 40% குறைந்த மட்டத்தில் தொழிலற்றவர்களின் தற்கொலைகள் காணப்படுகின்றமை புலனாகிறது. விவசாயம், கால் நடை வளர்ப்பு, மீன்பிடித் துறையுடன் தொடர்புடைய ஊழியர்கள், தொழிலாளர்கள், இயந்திரங்களை இயக்குவோர், வியாபார பிரதிநிதிகள் போன்ற துறைகளில் தொழில் புரிவோர் இதில் உள்ளடங்குவர்.

ஓய்வு பெற்றவர்களின் தற்கொலைகளை எடுத்துக் கொண்டால், கடந்த மூன்று வருடங்களில் அதிகரித்துள்ளமையைக் காணலாம். 2016 ஆம் ஆண்டில் 38 ஆக இருந்த ஓய்வு பெற்றவர்களின் தற்கொலை எண்ணிக்கையானது 2017 ஆம் ஆண்டில் 46 வரை 2 ஆலும், 2018 ஆம் ஆண்டில் அது 70 வரை 52% ஆலும் உயர்வடைந்துள்ளது. 2016 ஆம் ஆண்டில் தற்கொலை செய்து கொண்டவர்களுள் 89% ஆண்களாவதோடு, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் அச் சதவீதமானது 98% ஆகும்.

மாணவர்களின் தற்கொலைகளைப் பகுப்பாய்வு செய்கையில், ஏனைய அனைத்து தற்கொலைகளையும் விட மாறுபட்டதாக இங்கு தற்கொலை செய்து கொள்ளும் ஆண்களை விட தற்கொலை செய்து கொள்ளும் பெண்கள் அதிகமாகக் காணப்படுகின்றமையே மிக விசேடமான விடயமாகக் காண முடிகிறது. 2016 ஆம் ஆண்டில் மாணவர்களின் தற்கொலைகள் 38 அறிக்கையிடப்பட்டுள்ளதுடன், மாணவிகளின் தற்கொலை எண்ணிக்கை 82 ஆகும். அது சதவீதமாக 68% ஆகும். 2017 ஆம் ஆண்டில் 68 மாணவர்களும், 69 மாணவிகளும் தற்கொலை செய்து கொண்டுள்ளதுடன், 2018 ஆம் ஆண்டில் 60 மாணவர்களுக்கு 74 மாணவிகள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். சதவீதமாக அது 55% ஆகும். மேற்குறித்த மூன்று வருடங்களில் மாணவர்களின் தற்கொலைகளை நோக்குகையில், 2016 ஆம் ஆண்டில் 120 பேர் தற்கொலை செய்து கொண்டுள்ளதுடன், 2017 ஆம் ஆண்டில் அவ் எண்ணிக்கை 137 வரை 14% ஆல் உயர்வடைந்துள்ளது. 2018 ஆம் ஆண்டில் அவ் எண்ணிக்கையானது 134 வரை 2% ஆல் 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியில் குறைவடைந்துள்ளது.

அட்டவணையின் தொடரிலக்கம் 01 மற்றும் 02 இன் கீழான நிறைவேற்றுத் தர மற்றும் ஏனைய உயர் மட்ட (மருத்துவர், பொறியியலாளர் போன்ற) தொழில் புரிவோரின் தற்கொலைகளை

எடுத்துக் கொண்டால், 2016 ஆம் ஆண்டில் இவ் இரு வகுதியிலும் 61 தற்கொலைகள் அறிக்கையிடப்பட்டுள்ளதுடன், 2017 ஆம் ஆண்டில் அவ் எண்ணிக்கை 81 வரை 33% ஆல் உயர்வடைந்துள்ளது. 2018 ஆம் ஆண்டில் இத் துறைகளின் தற்கொலைகளின் எண்ணிக்கையானது 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியில் 71 வரை 12% ஆல் குறைவடைந்துள்ளது. இந் நிறைவேற்றுத் தர மற்றும் ஏனைய உயர் தொழில்களை வகிப்போரின் தற்கொலைகள் சதவீதமாக 2018 ஆம் ஆண்டில் ஒட்டுமொத்த தற்கொலைகளின் 2% ஆக் காணட்டலாம்.

### 5.4 வயது மற்றும் பால் வேறுபாட்டுக்கு அமைய தற்கொலைகள்

இலங்கை பொலிசிடம் அறிக்கையிடப்படும் தற்கொலைகளானது மரணித்தவர்களின் வயது மற்றும் பால் வேறுபாட்டுக்கு அமையவும் வகைப்படுத்தப்படுகின்றன. அதற்கமைய பால் ரீதியில் போன்றே 13 வகையான வயது தொகுதிகளின் கீழும் அட்டவணை இலக்கம் 12 மூலம் தரவுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

அட்டவணை இலக்கம் 12 **2016 – 2018 வரை வயது மற்றும் பால் வேறுபாட்டுக்கு அமைய தற்கொலைகள் அட்டவணை**

| தொடரி லக்கம் | வயது | 2016 | | | 2017 | | | 2018 | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் |
| 1 | 08 மற்றும் 16 வயதுக்கு இடைப்பட்டவர்கள் | 27 | 52 | **79** | 49 | 41 | **90** | 30 | 46 | **76** |
| 2 | 17 மற்றும் 20 வயதுக்கு இடைப்பட்டவர்கள் | 107 | 112 | **219** | 118 | 87 | **205** | 115 | 98 | **213** |
| 3 | 21 மற்றும் 25 வயதுக்கு இடைப்பட்டவர்கள் | 207 | 86 | **293** | 198 | 79 | **277** | 221 | 109 | **330** |
| 4 | 26 மற்றும் 30 வயதுக்கு இடைப்பட்டவர்கள் | 153 | 83 | **236** | 214 | 86 | **300** | 209 | 83 | **292** |
| 5 | 31 மற்றும் 35 வயதுக்கு இடைப்பட்டவர்கள் | 185 | 62 | **247** | 220 | 65 | **285** | 193 | 52 | **245** |
| 6 | 36 மற்றும் 40 வயதுக்கு இடைப்பட்டவர்கள் | 176 | 48 | **224** | 200 | 56 | **256** | 223 | 44 | **267** |
| 7 | 41 மற்றும் 45 வயதுக்கு இடைப்பட்டவர்கள் | 195 | 33 | **228** | 220 | 44 | **264** | 216 | 36 | **252** |
| 8 | 46 மற்றும் 50 வயதுக்கு இடைப்பட்டவர்கள் | 211 | 30 | **241** | 232 | 32 | **264** | 239 | 24 | **263** |
| 9 | 51 மற்றும் 55 வயதுக்கு இடைப்பட்டவர்கள் | 242 | 43 | **285** | 233 | 45 | **278** | 226 | 41 | **267** |
| 10 | 56 மற்றும் 60 வயதுக்கு இடைப்பட்டவர்கள் | 216 | 23 | **239** | 250 | 37 | **287** | 257 | 29 | **286** |
| 11 | 61 மற்றும் 65 வயதுக்கு இடைப்பட்டவர்கள் | 174 | 27 | **201** | 222 | 29 | **251** | 228 | 23 | **251** |
| 12 | 66 மற்றும் 70 வயதுக்கு இடைப்பட்டவர்கள் | 161 | 36 | **197** | 160 | 21 | **181** | 185 | 28 | **213** |
| 13 | 70 வயதுக்கு மேற்பட்டவர்கள் | 285 | 51 | **336** | 270 | 55 | **325** | 277 | 49 | **326** |
| **மொத்தம்** | | **2339** | **686** | **3025** | **2586** | **677** | **3263** | **2619** | **662** | **3281** |

மூலம் - பொலிஸ் புள்ளிவிபரவியல் அலகு

### ❖ தரவுப் பகுப்பாய்வு

அட்டவணையில் அடங்கியுள்ள தரவுகளுக்கு அமைய 2018 ஆம் ஆண்டில் தற்கொலை செய்து கொண்டவர்களுள் அதிகளவானோர் 21 – 25 வயதுக்கு உட்பட்டவர்களாவர். அவ் எண்ணிக்கையானது 330 ஆகும். சதவீதமாக 2018 ஆம் ஆண்டின் ஒட்டுமொத்த தற்கொலைகளுள்

இவ் வயதிற்கிடைப்பட்டோரின் தற்கொலைகள் 10% பெறுமதியைக் கொண்டுள்ளன. 2018 ஆம் ஆண்டில் தற்கொலைகளுள் இரண்டாவதாக அதிக எண்ணிக்கையிலான 326 தற்கொலைகள் 70 ற்கு மேற்பட்ட வயதைக் கொண்ட வகுதியினராவர். அது ஒட்டுமொத்த எண்ணிக்கையில் 10% பெறுமதியாகும். 2016 மற்றும் 2017 ஆகிய இரு வருடங்களையும் எடுத்துக் கொண்டால், 70 வயதுக்கு மேற்பட்ட வயதுடைய வகுதியினரே அதிகளவில் தற்கொலை செய்து கொண்ட வயதினராவர்.

மேற்குறித்த மூன்று வருடங்களில் தற்கொலைகளை அண்ணளவாக வாழ்வின் பல்வேறு கட்டங்களுக்கு வகைப்படுத்தி, இனங் காண முடிவதோடு, 2016 ஆம் ஆண்டில் சிறுவர் மற்றும் இளந் தலைமுறையைச் சேர்ந்த 08 – 16 வயதிற்கிடைப்பட்டோர் 79 பேர் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். 2017 ஆம் ஆண்டில் அவ் வயதைச் சேர்ந்தவர்களின் தற்கொலை செய்து கொள்ளும் எண்ணிக்கையானது 90 வரை 14% ஆல் அதிகரித்துள்ளது. 2018 ஆம் ஆண்டில் அவ் வயதினரின் 76 பேர் தற்கொலை செய்து கொண்டுள்ளதுடன், அது 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியில் 15% வீழ்ச்சியாகும். 2018 ஆம் ஆண்டின் ஒட்டுமொத்த தற்கொலைகளுள் 2% இவ் வயதிலானவர்களாவர்.

08 – 16 வயதிற்கிடைப்பட்டவர்களின் தற்கொலைகளுள் ஆண்களை விட பெண்கள் தற்கொலை செய்து கொள்ளும் எண்ணிக்கை அதிகமாக இருப்பதே விசேட அம்சமாகும். அட்டவணைக்கு அமைய 2016 – 2018 காலப் பகுதியை எடுத்துக் கொண்டால், தற்கொலை செய்து கொண்ட மேற்குறித்த வயதிலான ஆண்களின் எண்ணிக்கை 106 ஆக இருக்கையில் பெண்களின் எண்ணிக்கை 139 ஆகும். இவ் வகுதியில் மாணவர்களும் உள்ளடங்குவதோடு, மாணவர்களின் தற்கொலைகளுள் பெண்களின் அதாவது மாணவியரின் தற்கொலைகள் அதிக எண்ணிக்கையைக் கொண்டிருக்கும் முறை இதற்கு முன்னரும் தரவுகள் மூலம் தெளிவுபடுத்தப்பட்டது.

இள வயதைச் சார்ந்த 17 – 20 வயதிற்குட்பட்டோரின் தற்கொலைகளை எடுத்துக் கொண்டால், 2016 ஆம் ஆண்டில் 219 அறிக்கையிடப்பட்டதோடு, 2017 ஆம் ஆண்டில் அவ் எண்ணிக்கையானது 205 வரை 6% ஆல் 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியில் குறைவடைந்துள்ளது. 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியில் 2018 ஆம் ஆண்டில் இவ் வயதினரின் தற்கொலைகள் 213 வரை 4% ஆல் உயர்வடைந்துள்ளதுடன், மரணங்களின் எண்ணிக்கையில் அதிக சதவீதத்தினர் ஆண்களாகக் காணப்படுகின்றனர். பெரும்பாலும், கல்வியைப் பெறல், புதிய அனுபவங்களைப் பெற முயற்சித்தல், தொழிலின்மை, இள வயது காதல் தொடர்புகள் போன்றவற்றை இவ் வயதினரின் விசேட பண்புகளாகக் கவனத்திற் கொண்டால், இவ் அத்தியாயத்தின் ஒட்டுமொத்த விடயங்களையும் பகுப்பாய்வு செய்வதன் ஊடாக பெரும்பாலும் இத் தற்கொலைகளுக்கு அவ் விடயங்கள் பெரிதும் தாக்கம் செலுத்தியுள்ளன என்ற முடிவுக்கு வரலாம்.

21 – 35 வயதிற்கு இடைப்பட்ட இள வயதானவர்கள் 776 பேர் 2016 ஆம் ஆண்டில் தற்கொலை செய்து கொண்டுள்ளதுடன், 2017 ஆம் ஆண்டில் அவ் வயதினரின் தற்கொலைகள் 862 வரை 1 ஆல் உயர்வடைந்துள்ளன. 2018 ஆம் ஆண்டில் 867 வரை 0.5% என்ற சிறு அளவில் இத் தற்கொலைகள் 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியில் மேலும் உயர்ந்துள்ளன. நாட்டின் உழைக்கும் தொகுதியினரைப் போன்றே குடும்பப் பொருளாதாரத்திற்கும் அடிப்படைப் பங்களிப்பை வழங்குபவர்கள் என்ற வகையில் இவ் வயதிற்குட்பட்டோரின் தற்கொலைகளின் சமூக தாக்கத்தை விரிவாக ஆராய வேண்டியுள்ளது.

36 – 60 வயதிற்கு இடைப்பட்ட தற்கொலை செய்து கொண்டவர்களை எடுத்துக் கொண்டால், 2016 ஆம் ஆண்டில் 1217 பேர் தற்கொலை செய்து கொண்டுள்ளதுடன், 2017 ஆம் ஆண்டில் அவ் எண்ணிக்கையானது 1349 வரை 1 ஆல் உயர்வடைந்துள்ளது. 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியில் இவ் வயதினரின் 2018 ஆம் ஆண்டிலான தற்கொலைகள் 1335 வரை அளவில் குறைவடைந்துள்ளன. நாட்டின் உழைக்கும் பிரிவினரின் பெரும்பாலானவர்கள் இவ் வயதிற்கு உட்பட்டவர்களாவதோடு, அத்தகைய தற்கொலைகளினால் நாட்டினதும் குடும்த்தினதும் பொருளாதாரம் மீது ஏற்படுத்தும் தாக்கமும் குறைவானதல்ல என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

61 வயதுக்கு மேற்பட்டவர்களின் தற்கொலைகளைக் கவனத்திற் கொண்டால், 2016 ஆம் ஆண்டில் 734 அறிக்கையிடப்பட்டுள்ளதுடன், 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியில் அத் தற்கொலைகளின் எண்ணிக்கையானது 2017 ஆம் ஆண்டில் 757 வரை 3% ஆல் உயர்வடைந்துள்ளதோடு, 2018 ஆம் ஆண்டில் 790 வரை 4% ஆல் 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியில் மேலும் அதிகரித்துள்ளன. வாழ்வின் ஓய்வுக் காலத்தைக் கழிக்கும் அதிளவானவர்கள் இவ் வகுதியைச் சார்வர். ஓய்வு பெற்ற அல்லது பிள்ளைகளைத் தங்கி வாழும் வயதைக் கருத முடிவதோடு, அதனுடன் தொடர்புடைய சிக்கல்கள் நேரடியாக அல்லது மறைமுகமாக இவ்வாறான தற்கொலைகளுக்குக் காரணமாகியுள்ளன. அட்டவணைக்கு அமைய கடந்த மூன்று வருடங்களில் அதாவது 2016, 2017 மற்றும் 2018 ஆகிய மூன்று வருடங்களில் தற்கொலைகளைக் கவனத்திற் கொண்டால், 70 வயதுக்கு மேற்பட்டவர்கள் தற்கொலை செய்து கொள்ளும் எண்ணிக்கை அதிகமாக இருக்கின்றமை கவனத்திற் கொள்ள வேண்டிய ஒன்றாகும். 2016 ஆம் ஆண்டில் 336 பேர், 2017 ஆம் ஆண்டில் 325 பேர் மற்றும் 2018 ஆம் அண்டில் 326 பேர் என்றவாறு அத் தற்கொலைகள் இடம்பெற்றுள்ளன. சமுதாயத்தில் சிரேஷ்ட பிரசைகளாக இவர்களது தற்கொலைகளுக்குத் தாக்கம் செலுசுத்தும் காரணங்கள் குறித்த விரிவான ஆய்வின் தேவையை புறந்தள்ளி விட முடியாது.

பால் வேறுபாட்டுக்கு அமைய தற்கொலைகளை நோக்கினால், 2016, 2017 மற்றும் 2018 ஆகிய மூன்று வருடங்களிலும் ஒட்டுமொத்த தற்கொலைகளுள் ஆண்களின் பிரதிநிதித்துவமானது முறையே 77%, 79% மற்றும் 80% என்றவாறு வளர்ச்சியடைவதைக் காணலாம். ஒட்டுமொத்த தற்கொலைகளுள் பெண்களின் தற்கொலைகளை எடுத்துக் கொண்டால், 08 – 30 வயது வரையான 04 வகுதியினரின் தரவுகளை நோக்குகையில், ஏனைய வயதுகளுடன் ஒப்பீட்டு ரீதியில் பெண்களின் தற்கொலைகள் உயர்ந்த பெறுமதியைக் கொண்டிருப்பதைக் காணலாம். ஒட்டுமொத்தமாக 2016, 2017 மற்றும் 2018 ஆகிய மூன்று வருடங்களில் பெண்களின் தற்கொலைகள் 23%, 2 மற்றும் 20%என்றவாறு படிப்படியான குறைவைக் காணலாம்.

# 06. மது மற்றும் சுயநினைவிழத்தற் பொருட்கள் குறித்த குற்றங்கள்

இலங்கை பொலிசிடம் அறிக்யையிடப்பட்ட மது மற்றும் தூக்க மருந்துப் பொருட்கள் தொடர்பான குற்றங்கள் இவ் அத்தியாயத்தின் கீழ் தரப்பட்டுள்ளன. அடிப்படையில் இலங்கை பொலிசின் போதைப் பொருள் ஒழிப்புப் பணியகம் மற்றம் விசேட அதிரடிப் படை என்பன பாரிய அளவிலான சோதனையிடல்களை மேற்கொள்வதோடு, பொலிஸ் நிலைய மட்டங்களிலும் மது மற்றும் தூக்க மருந்துப் பொருள் சோதனைகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுகின்றன.

பின்வரும் அட்டவணை மூலம் 2016 மற்றும் 2017 ஆகிய வருடங்களில் மது மற்றும் தூக்க மருந்துப் பொருட்கள் தொடர்பான கைதுகள் மற்றும் வழக்குத் தொடரல்கள் குறித்த தகவல்கள் ஒப்பீட்டு ரீதியில் முன்வைக்கப்பட்டுள்ளன.

## 6.1 மது தொடர்பான குற்றங்கள்

12 துறைகளைச் சேர்ந்த மது தொடர்பான குற்றங்கள் கடந்த 03 வருடங்களுக்கு ஏற்ப பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

அட்டவணை இலக்கம் 13 **2016 – 2018 வரை மது தொடர்பான குற்றங்கள் அட்டவணை**

| தொடரிலக்கம் | குற்றங்கள் | 2016 | | | | 2017 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | அறிக்கையிடப்பட்ட எண்ணிக்கை | வழக்குத் தொடரப்பட்ட எண்ணிக்கை | குற்றவாளிகளின் எண்ணிக்கை | வழக்குத் தொடரப்பட்ட சதவீதம் | அறிக்கையிடப்பட்ட எண்ணிக்கை | வழக்குத் தொடரப்பட்ட எண்ணிக்கை | குற்றவாளிகளின் எண்ணிக்கை | வழக்குத் தொடரப்பட்ட சதவீதம் | அறிக்கையிடப்பட்ட எண்ணிக்கை | வழக்குத் தொடரப்பட்ட எண்ணிக்கை | குற்றவாளிகளின் எண்ணிக்கை | வழக்குத் தொடரப்பட்ட சதவீதம் |
| 1 | சட்ட விரோத மதுபான உற்பத்தி செய்தல் அல்லது வடித்தல் | 10198 | 8869 | 7486 | 87% | 10658 | 9705 | 8292 | 91% | 11316 | 10242 | 8259 | 91% |
| 2 | அனுமதிப் பத்திரம் இன்றி மொந்தைக் கள் உற்பத்தி செய்கல் | 72 | 70 | 65 | 97% | 166 | 159 | 142 | 96% | 57 | 52 | 47 | 91% |
| 3 | சட்ட விரோதமான முறையில் அரசாங்க சாராய உற்பத்தி | 19 | 19 | 19 | 100% | 56 | 46 | 43 | 82% | 133 | 106 | 87 | 80% |
| 4 | சட்ட விரோதமான முறையில் ஸ்பிரிட் வகைகள் உற்பத்தி செய்தல் அல்லது வடித்தல் | 414 | 259 | 243 | 63% | 285 | 270 | 231 | 95% | 2346 | 1745 | 1473 | 74% |
| 5 | சட்ட விரோதமான முறையில் மதுபானம் விற்றல் / தம்வசம் வைத்திருத்தல் | 91376 | 84718 | 75297 | 93% | 93870 | 88490 | 81495 | 94% | 100373 | 93526 | 82364 | 93% |
| 6 | சட்ட விரோதமான முறையில் மொந்தைக் கள் விற்பனை / தம்வசம் வைத்திருத்தல் | 6192 | 5890 | 5504 | 95% | 3725 | 3520 | 3376 | 94% | 3801 | 3410 | 2991 | 90% |
| 7 | அனுமதிப் பத்திரம் இன்றி அரசாங்க சாராய விற்பனை அல்லது 7.5 லீற்றருக்கு அதிகமாக தம்வசம் வைத்திருத்தல் | 7268 | 7012 | 6544 | 96% | 4967 | 4723 | 4321 | 95% | 4050 | 3759 | 3337 | 93% |
| 8 | அனுமதிப் பத்திரம் இன்றி பியர் வகைகள் மற்றும் ஏனைய மதுபான வகைகளை விற்றல் / விற்பனைக்காக தம்வசம் வைத்திருத்தல் | 584 | 561 | 537 | 96% | 985 | 967 | 924 | 98% | 614 | 544 | 473 | 89% |
| 9 | சட்ட விரோதமான முறையில் உற்பத்தி செய்யப்பட்ட ஸ்பிரிட் வகைகளை தம்வசம் வைத்திருத்தல் மற்றும் விற்றல் | 431 | 392 | 310 | 91% | 1345 | 1325 | 890 | 99% | 682 | 642 | 524 | 94% |
| 10 | சட்ட விரோத மதுபானம் அல்லது அனுமதிப் பத்திரம் இன்றி மொந்தைக் கள் / ஏனைய ஸ்பிரிட் வகைகள் / அரசாங்க சாராயத்தைக் கொண்டு செல்லல் | 276 | 254 | 225 | 92% | 280 | 269 | 196 | 96% | 378 | 349 | 247 | 92% |
| 11 | சட்ட விரோத மதுபானம் / ஸ்பிரிட் வகைகள் / மொந்தைக் கள் உற்பத்திக்குப் பயன்படுத்தும் உபகரணங்களை தம்வசம் வைத்திருத்தல் | 605 | 549 | 508 | 91% | 670 | 651 | 543 | 97% | 659 | 630 | 472 | 96% |
| 12 | மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழான ஏனைய குற்றங்கள் | 2670 | 2435 | 2282 | 91% | 3191 | 2912 | 2569 | 91% | 5404 | 4509 | 3774 | 83% |
| | **மொத்தம்** | **120105** | **111028** | **99020** | **92%** | **120198** | **113037** | **103022** | **94%** | **129813** | **119514** | **104048** | **92%** |

மூலம் - பொலிஸ் புள்ளிவிபரவியல் அலகு

❖ தரவுப் பகுப்பாய்வு

அட்டவணைக்கு அமைய மதுக் குற்றங்களில் இரண்டாவதாக அதிகளவில் அறிக்கையிடப்படும் குற்றமாக சட்ட விரோத மதுபான உற்பத்தி அல்லது வடிக்கும் குற்றத்தைக் காட்டலாம். 2016 ஆம் ஆண்டில் இக் குற்றங்கள் 10198 அறிக்கையிடப்பட்டுள்ளதுடன், அதில் 87% ற்கு எதிராக வழக்குத் தொடர்ப்பட்டுள்ளது. 2017 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்ட குற்றங்களின் எண்ணிக்கை 10658 ஆக இருந்ததுடன், அது 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியில் 4%அதிகரிப்பாகும். 2018 ஆம் ஆண்டில் சட்ட விரோத மதுபான உற்பத்திக் குற்றங்கள் 11316 அறிக்கையிடப்பட்டுள்ளதுடன், 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியில் அது 6% உயர்வாகும். 2018 ஆம் ஆண்டில் இக் குற்றங்களுக்கு வழக்குத் தொடரப்படும் சதவீதம் 90% ஆகும்.

அட்டவணைக்கு அமைய பொலிசிடம் அதிகமாக அறிக்கையிடப்படும் மது தொடர்பான குற்றமாக இருப்பது சட்ட விரோத மதுபான விற்பனை மற்றும் தம்வசம் வைத்திருத்தலாகும். 2016 ஆம் ஆண்டில் இக் குற்றங்கள் 91376 அறிக்கையிடப்பட்டுள்ளதுடன், அவற்றுள் 84718 ற்கு அதாவது 93% ற்கு வழக்குத் தொடரப்பட்டுள்ளது. 2017 ஆம் ஆண்டில் இக் குற்றங்கள் 93870 அறிக்கையிடப்பட்டுள்ளதுடன், 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியில் இக் குற்றங்கள் 3% ஆல் அதிகரித்துள்ளன எனக் கொள்ளலாம். 2017 ஆம் ஆண்டில் வழக்குத் தொடரப்படும் சதவீதம் 94% ஆகும். 2018 ஆம் ஆண்டில் இக் குற்றங்கள் 100373 வரை 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியில் மேலும் 7% ஆல் அதிகரித்துள்ளதுடன், வழக்குத் தொடரப்படும் சதவீதம் 93% ஆகும்.

சட்ட விரோத மொந்தைக் கள் விற்பனை மற்றும் தம்வசம் வைத்திருக்கும் குற்றத்தை எடுத்துக் கொண்டால், 2016 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்ட குற்றங்களின் எண்ணிக்கை 6192 ஆகும். அவற்றுள் 5890 அதாவது 95% ற்கு வழக்குத் தொடரப்பட்டுள்ளது. இத்தகைய 3725 குற்றங்கள் 2017 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்டுள்ளதுடன், 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியில் அது 40 %வீழ்ச்சியாகும். 2017 ஆம் ஆண்டில் வழக்குத் தொடரப்பட்ட குற்றங்களின் எண்ணிக்கை 3520 ஆவதோடு, சதவீதமாக 94% ஆகும். 2018 ஆம் ஆண்டில் சட்ட விரோத மொந்தைக் கள் விற்பனை மற்றும் தம்வசம் வைத்திருக்கும் குற்றங்கள் 3801 அறிக்கையிடப்பட்டுள்ளதுடன், 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியில் அது 2% அதிகரிப்பாகும். 2018 ஆம் ஆண்டில் வழக்குத் தொடரப்பட்ட சதவீதம் 90% ஆகும்.

அனுமதிப் பத்திரம் இன்றி அரசாங்க சாராய விற்பனை அல்லது தம்வசம் வைத்திருக்கும் குற்றத்தை எடுத்துக் கொண்டால், 2016 – 2018 காலப் பகுதியில் இக் குற்றங்களில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சியைக் காணலாம். இது தொடர்பான 7268 குற்றங்கள் 2016 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்டதோடு, அக் குற்றங்கள் 4967 வரை 2017 ஆம் ஆண்டில் 37%ஆல் குறைவடைந்துள்ளன. 2018 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்ட குற்றங்களின் எண்ணிக்கை 4050 ஆவதோடு, 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியில் 18%வீழ்ச்சியாகக் காட்டலாம். இக் குற்றங்களுக்கு வழக்குத் தொடரப்படும் சதவீதத்தை எடுத்துக் கொண்டால், 2016 ஆம் ஆண்டில் 96% ஆகவும், 2017 ஆம் ஆண்டில் 95%ஆகவும் காணப்பட்டதோடு, 2018 ஆம் ஆண்டில் வழக்குத் தொடரப்படும் சதவீதம் 93%ஆகும்.

அட்டவணைக்கு அமைவாக 2016 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரை மது தொடர்பான ஒட்டுமொத்த குற்றங்கள் அறிக்கையிடப்படலை நோக்குகையில், 2016 ஆம் ஆண்டில் மதுக் குற்றங்கள் 120105 அறிக்கையிடப்பட்டுள்ளதுடன், 2017 ஆம் ஆண்டில் அக் குற்றங்கள் 120198 வரையான உயர்வைக் காட்டுகிறது. 2018 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்ட ஒட்டுமொத்த மதுக் குற்றங்களின் எண்ணிக்கை 129813 ஆக இருந்ததோடு, 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியில் அது 8% அதிகரிப்பாகும்.

ஒட்டுமொத்த மதுக் குற்றங்களுக்கு வழக்குத் தொடரப்படும் எண்ணிக்கையை சதவீதமாக எடுத்துக் கொண்டால், 2016 ஆம் ஆண்டில் வழக்குத் தொடரப்படும் சதவீதம் 92%ஆகும். 2017 ஆம்

ஆண்டில் வழக்குத் தொடரப்படும் சதவீதம் 94% ஆக இருந்ததோடு, 2018 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்ட மதுக் குற்றங்களுக்கு வழக்குத் தொடரப்படும் சதவீதம் 92% ஆகும்.



2018.03.23 ஆம் திகதி பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்புப் பணியகத்தினால் கைப்பற்றப்பட்ட சட்ட விரோத மதுபானம் குறித்த புகைப்படம்

### 6.2. தூக்க மருந்துப் பொருட்கள் தொடர்பான குற்றங்கள்

தனிநபரின் மற்றும் சமூகத்தின் நன்மைக்கு பாரதூரமான பாதிப்பை ஏற்படுத்தும் குற்றங்களாக இந்த தூக்க மருந்துப் பொருட்கள் தொடர்பான குற்றங்களை இனங் காணலாம். அட்டவணை இலக்கம் 14 மூலம் 2016, 2017 மற்றும் 2018 ஆகிய வருடங்களில் இத் துறையிலான குற்றங்கள் ஒப்பீட்டு ரீதியில் தரப்பட்டுள்ளன. பாரிய குற்றங்களின் வகுதியைச் சார்ந்த குற்றமான இந்த தூக்க மருந்துப் பொருட்கள் தொடர்பான குற்றங்களின் விசேடமான பண்பாவது, தொடர்ந்தும் இக் குற்றங்கள் அதிகரித்துச் செல்லலாகும்.

அட்டவணை 14 **2016 – 2018 வரை தூக்க மருந்துப் பொருட்களை கைப்பற்றல் அட்டவணை**

| | குற்றங்கள் | 2016 | | | | | | | 2017 | | | | | | | 2018 | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | அறிக்கையிடப்பட்ட எண்ணிக்கை | வழக்குத் தொடரப்பட்ட எண்ணிக்கை | குற்றவாளிகளின் எண்ணிக்கை | வழக்குத் தொடரப்பட்ட சதவீதம் | கைது செய்யப் பட்ட எண்ணிக்கை (கி.கிராம்/ கிராம்/ மி.கிராம்) | | | அறிக்கையிடப்பட்ட எண்ணிக்கை | வழக்குத் தொடரப்பட்ட எண்ணிக்கை | குற்றவாளிகளின் எண்ணிக்கை | வழக்குத் தொடரப்பட்ட சதவீதம் | கைது செய்யப் பட்ட எண்ணிக்கை (கி.கிராம்/ கிராம்/ மி.கிராம்) | | | அறிக்கையிடப்பட்ட எண்ணிக்கை | வழக்குத் தொடரப்பட்ட எண்ணிக்கை | குற்றவாளிகளின் எண்ணிக்கை | வழக்குத் தொடரப்பட்ட சதவீதம் | கைது செய்யப் பட்ட எண்ணிக்கை (கி.கிராம்/ கிராம்/ மி.கிராம்) | | |
| | | | | | | கி.கிராம | கிராம் | மி.கிராம் | | | | | கி.கிராம | கிராம் | மி.கிராம் | | | | | கி.கிராம | கிராம் | மி.கிராம் |
| 1 | கஞ்சா | 54349 | 53426 | 51932 | 98% | 36818 | 698 | 506 | 67039 | 65534 | 61441 | 98% | 19720 | 216 | 987 | 71505 | 69886 | 63603 | 98% | 8884 | 457 | 162 |
| 2 | அபின் | 3 | 3 | 3 | 100% | 15 | 399 | 970 | 27 | 24 | 24 | 89% | 0 | 242 | 335 | 3 | 1 | 1 | 33% | 0 | 8 | 380 |
| 3 | ஹஷீஸ் | 39 | 37 | 35 | 95% | 27 | 443 | 650 | 79 | 74 | 71 | 94% | 39 | 42 | 554 | 199 | 189 | 161 | 95% | 82 | 291 | 597 |
| 4 | ஹெரோயின் | 28327 | 27306 | 25074 | 96% | 205 | 140 | 430 | 36989 | 35440 | 31911 | 96% | 124 | 829 | 51 | 47355 | 44346 | 36356 | 94% | 721 | 363 | 175 |
| 5 | மோப்பீன் | 4 | 4 | 1 | 100% | 0 | 74 | 730 | 1 | 1 | 1 | 100% | 0 | 0 | 250 | 254 | 187 | 165 | 74% | 0 | 194 | 784 |
| 6 | கொக்கேன் | 37 | 14 | 39 | 38% | 1302 | 735 | 42 | 48 | 46 | 46 | 96% | 224 | 181 | 75 | 74 | 62 | 45 | 84% | 9 | 859 | 780 |
| 7 | வேறு | 5593 | 5540 | 5250 | 99% | 506 | 523 | 334 | 3761 | 3473 | 3176 | 92% | 939 | 638 | 415 | 5550 | 5381 | 4770 | 97% | 556 | 389 | 26 |
| | **மொத்தம்** | **88352** | **86330** | **82334** | **98%** | **38876** | **15** | **662** | **107944** | **104592** | **96670** | **97%** | **21048** | **150** | **667** | **124940** | **120052** | **105101** | **96%** | **10254** | **563** | **904** |

மூலம் - பொலிஸ் புள்ளிவிபரவியல் அலகு

### ❖ தரவுப் பகுப்பாய்வு

அட்டவணைக்கு அமைய ஒவ்வொரு தூக்க மருந்துப் பொருள் குறித்த குற்றங்களையும் கடந்த மூன்று வருட தரவுகளின் ஊடாக பகுப்பாய்வு செய்கையில், அக் குற்றங்களின் அதிகரிப்பை 2016, 2017 மற்றும் 2018 ஆகிய வருடங்களில் காண முடிகின்றமையைக் குறிப்பிடலாம். உதாரணமாக,

2016 ஆம் ஆண்டில் கஞ்சா தொடர்பான குற்றங்கள் 54349 அறிக்கையிடப்பட்டதுடன், 2017 ஆம் ஆண்டில் அவ் எண்ணிக்கை 67056 வரை 23% ஆல் அதிகரித்துள்ளது. 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 2018 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்ட கஞ்சா தொடர்பான குற்றங்களின் எண்ணிக்கை 71505 ஆக காணப்பட்டதுடன், அது சதவீதமாக 7% அதிகரிப்பாகும். கஞ்சா தொடர்பான குற்றங்களுக்கு வழக்குத் தொடரலை சதவீதமாக எடுத்துக் கொண்டால், 2016, 2017 மற்றும் 2018 ஆகிய வருடங்களில் 98% ஆகக் காட்டப்பட்டுள்ளது.

ஹெரோயின் தொடர்பான குற்றங்களை நோக்குகையில், 2016 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்ட குற்றங்களின் எண்ணிக்கை 28327 ஆகும். அது 2017 ஆம் ஆண்டில் 36989 வரை 30% ஆல் அதிகரித்துள்ளது. 2018 ஆம் ஆண்டில் ஹெரோயின் தொடர்பான குற்றங்கள் 47355 அறிக்கையிடப்பட்டதுடன், 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 28% அதிகரிப்பாகும். ஹெரோயின் தொடர்பான குற்றங்களுக்கு வழக்குத் தொடரலை எடுத்துக் கொண்டால், 2016 மற்றும் 2017 ஆகிய வருடங்களில் வழக்குத் தொடரும் சதவீதம் 96% ஆகக் காணப்பட்டதுடன், 2018 ஆம் ஆண்டில் அது 94% வரை குறைவடைந்துள்ளது.

ஒப்பியம் தொடர்பான 03 குற்றங்கள் 2016 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்டதோடு, 2017 ஆம் ஆண்டில் 27 குற்றங்கள் வரை உயர்வடைந்துள்ளன. எவ்வாறாயினும், 2018 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்டுள்ள குற்றங்கள் 03 ஆகும். ஒப்பியம் தொர்பான குற்றங்களுக்கு வழக்குத் தொடரல்களை எடுத்துக் கொண்டால், 2016 ஆம் ஆண்டில் 100%வழக்குத் தொடரல் சதவீதத்தைக் காண முடிவதோடு, 2017 ஆம் ஆண்டில் வழக்குத் தொடரல் சதவீதம் 89% ஆகும். 2018 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்ட மூன்று குற்றங்களுள் ஒன்றிற்கு வழக்குத் தொடரப்பட்டுள்ளதுடன், அது 33%ஆகும்.

எமது நாட்டில் குறிப்பிட்ட ஒரு காலப்பகுதியில் மிகக் குறைவாக அறிக்கையிடப்பட்ட ஹஷீஸ், மோப்பீன் மற்றும் கொக்கேன் தொடர்பான குற்றங்கள் குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்துள்ளமையை அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மூன்று வருடங்களுக்கான தரவுகள் மூலம் அறிய முடிகிறது. உதாரணமாக, ஹஷீஸ் தொடர்பான 39 குற்றங்கள் 2016 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்டுள்ளதோடு, அது 2017 ஆம் ஆண்டில் 79 வரை 102% ஆல் உயர்வடைந்துள்ளது. 2018 ஆம் ஆண்டில் ஹஷீஸ் தொடர்பான 199 குற்றங்கள் அறிக்கையிடப்பட்டுள்ளதோடு, 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியில் அது 152% அதிகரிப்பாகும். ஹஷீஸ் தொடர்பான குற்றங்களுக்கு வழக்குத் தொடரலை எடுத்துக் கொண்டால், 2016 ஆம் ஆண்டில் வழக்குத் தொடரல் சதவீதம் 95% ஆக இருந்தது. 2017 ஆம் ஆண்டில் அச் சதவீதம் 94 ஆகியுடதுடன், 2018 ஆம் ஆண்டில் வழக்குத் தொடரல் சதவீதம் 95% ஆகும்.

மோப்பீன் தொடர்பான குற்றங்களை எடுத்துக் கொண்டால், அட்டவணைக்கு அமைய 2016 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்ட எண்ணிக்கை 04 ஆகும். 2017 ஆம் ஆண்டில் அக் குற்றங்கள் 01 வரை 75% ஆல் குறைவடைந்துள்ளதுடன், 2018 ஆம் ஆண்டில் மீண்டும் மோப்பீன் தொடர்பான குற்றங்கள் 254 வரை மிகப் பாரிய அளவில் உயர்வடைந்துள்ளன.

மோப்பீன் தொடர்பான குற்றங்களுக்கு வழக்குத் தொடரல் சதவீதம் 2016 மற்றும் 2017 ஆகிய வருடங்களில் 100% ஆக இருந்ததுடன், 2018 ஆம் ஆண்டில் 74%வரை வழக்குத் தொடரல்கள் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளுடன் ஒப்பீட்டு ரீதியில் குறைவடைந்துள்ளன.

கொக்கேன் தொடர்பான 37 குற்றங்கள் 2016 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்டுள்ளதோடு, அது 2017 ஆம் ஆண்டில் 48 வரை 30% ஆல் அதிகரித்துள்ளது. 2018 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்படட குற்றங்களின் எண்ணிக்கை 74 ஆவதோடு, அது , 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியில் 54% அதிகரிப்பாக அறியலாம். கொக்கேன் குற்றங்களுக்கு வழக்குத் தொடரலை எடுத்துக் கொண்டால், 2016 ஆம் ஆண்டில் 38% ஆகக் காணலாம். 2017 ஆம் ஆண்டில் அச்

சதவீதம் 96% ஆக இருந்ததோடு, 2018 ஆம் ஆண்டில் கொக்கேன் தொடர்பான குற்றங்களுக்கு வழக்குத் தொடரல் சதவீதம் 84%ஆகும்.

அட்டவணைக்கு அமைய கடந்த மூன்று வருடங்களின் ஒட்டுமொத்த தூக்க மருந்து குற்றங்கள் அறிக்கையிடப்படலை எடுத்துக் கொண்டால், ஒட்டுமொத்த குற்றங்களில் உயர்வைக் காணலாம். அதற்கமைய, 2016 ஆம் ஆண்டில் 88352 குற்றங்கள் அறிக்கையிடப்பட்டுள்ளதோடு, 2017 ஆம் ஆண்டில் 107944 குற்றங்கள் வரை 22% ஆல் உயர்வடைந்துள்ளன. 2018 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்ட தூக்க மருந்து தொடர்பான குற்றங்களின் எண்ணிக்கை 124940 ஆக இருந்ததோடு, சதவீதமாக அது 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியில் 16% அதிகரிப்பாகும்.

தூக்க மருந்து தொடர்பான குற்றங்களுக்காகக் கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கையும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மூன்று வருடங்களில் அதிகரித்துள்ளமையைக் காணலாம். அதற்கமைய 2016 ஆம் ஆண்டில் கைது கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 82334 ஆவதோடு, 2017 ஆம் ஆண்டில் கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 96670 வரை 17%ஆல் உயர்வடைந்துள்ளது. 2018 ஆம் ஆண்டில் 108581 சந்தேக நபர்கள் தூக்க மருந்து தொடர்பான குற்றங்களுக்காகக் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அது 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியில் 12% அதிகரிப்பாகும்.

ஒட்டுமொத்த தூக்க மருந்து தொடர்பான குற்றங்களுக்கு வழக்குத் தொடரப்படலை நோக்குகையில், 2016 ஆம் ஆண்டில் வழக்குத் தொடரல்கள் சதவீதமாக 98% ஆகும். 2017 ஆம் ஆண்டில் ஒட்டுமொத்த வழக்குத் தொடரல் சதவீதம் 97% ஆக இருந்ததோடு, 2018 ஆம் ஆண்டில் ஒட்டுமொத்த தூக்க மருந்து தொடர்பான குற்றங்களுக்கு வழக்குத் தொடரல் சதவீதம் 96%ஆகும்.



2018.03.23 ஆம் திகதி போதைப் பொருள் ஒழிப்புப் பணியகத்தினால் கைப்பற்றப்பட்ட போதைப் பொருட்களின் புகைப்படம்

### 6.3 விசேட அதிரடிப் படையினால் மேற்கொள்ளப்பட்ட மது மற்றும் தூக்க மருந்துப் பொருட்கள் சோதனை

மது மற்றும் தூக்க மருந்துப் பொருட்கள் சோதனை மற்றும் கைப்பற்றுகையில் பொலிஸ் விசேட அதிரடிப் படையும் விசேடமானதொரு பணியை ஆற்றியுள்ளது.

அதற்கமைய 2018 ஆம் ஆண்டில் விசேட அதிரடைப் படையினால் மேற்கொள்ளப்பட்ட சட்ட விரோத போதைப் பொருள் மற்றும் மது தொடர்பான சோதனைகள் மற்றும் கைப்பற்றல்கள் குறித்த தகவல்கள் பின்வரும் அட்டவணை இலக்கம் 15 மற்றும் 16 மூலம் முன்வைக்கப்பட்டுள்ளன.

அட்டவணை இலக்கம் 15 **2018 விசேட அதிரடிப் படையினால் மேற்கொள்ளப்பட்ட மது சோதனை அட்டவணை**

| குற்றங்கள் | சோதனைகளின் எண்ணிக்கை | சந்தேக நபர்களின் எண்ணிக்கை | கைப்பற்றப்பட்ட எண்ணிக்கை (லீ/மி.லீ) | பெறுமதி ரூ. |
|---|---|---|---|---|
| சட்ட விரோத மதுபானம் | 1238 | 1,238 | ச.வி.ம. 24,952 மி.லீ .40 | 11,652,602.68 |
| அனுமதிப் பத்திரமின்றி அரசாங்க சாராய | 69 | 74 | சாராய போத்தல்கள் 1,036<br>பியர் டின்கள் 1,463 | 1,322,280.00 |
| வெளிநாட்டு மதுபானங்கள் | 21 | 22 | லீற்றர் 5,449<br>பியர் டின்கள் 368 | 10,138,635.75 |
| **மொத்தம்** | **1328** | **1334** | - | **23,113,518.43** |

மூலம் - பொலிஸ் புள்ளிவிபரவியல் அலகு

அட்டவணை இலக்கம் 16 **2018 ஆம் ஆண்டில் விசேட அதிரடைப் படையினால் மேற்கொள்ளப்பட்ட தூக்க மருந்துப் பொருட்கள் சோதனை அட்டவணை**

| | குற்றங்கள் | சோதனைகளின் எண்ணிக்கை | சந்தேக நபர்களின் எண்ணிக்கை | கைப்பற்றப்பட்ட எண்ணிக்கை (கி.கிராம்/ கிராம்/ மி.கிராம்) | பெறுமதி ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | ஹெரோயின் | 926 | 951 | 275 கி.கி. 263 கிராம் ' 172 மி.கிராம் | 2,725,631,720.00 |
| 2 | கஞ்சா | 224 | 225 | 213 கி.கி. 244 கிராம் 956 மி. கிராம் | 29,496,394.42 |
| 3 | கேரளா கஞ்சா | 310 | 315 | 1056 கி.கி. 569 கிராம் 406 மி. கிராம் | 137,352,747.78 |
| 4 | கஞ்சா செய்கை | 353 | 71 | 1,613,104 செடிகள்<br>111 ½ ஏக்கர் | - |
| 5 | வெளிநாட்டு சிகரெட்டுகள் | 96 | 100 | 422,073 | 21,164,630.00 |
| 6 | மன நோய்க்காக வழங்கப்படும் மாத்திரைகள் (psychotropic) | 49 | 50 | 24,521 மாத்திரைகள்<br>06 கெப்சுல்கள் | 4,366,605.00 |
| 7 | கொக்கேன் | 5 | 5 | 5 கி.கி. 336 கிராம் 439 மி. கிராம் | - |
| 8 | குஷ் | 4 | 4 | 23 கிராம் 760 மி. கிராம் | - |
| 9 | ஐஸ் | 14 | 14 | 01 கி.கி. 014 கிராம் 578 மி. கிராம் | - |
| 10 | ஹஷீஸ் | 7 | 8 | 05 கி.கிராம் 827 கிராம் 630 மி.கிராம் | - |
| 11 | வேறு (மாவா, அளு, ஹேஸ், அபின்) | 42 | 43 | - | 0 |
| | **மொத்தம்** | **2,030** | **1,786** | - | **2,918,012,097** |

மூலம் - பொலிஸ் புள்ளிவிபரவியல் அலகு

# 07. ஊழல் மற்றும் நியதிச்சட்ட குற்றங்கள்

இவ் அத்தியாயத்தின் கீழான ஊழற் குற்றங்களுக்கு மேலதிகமாக வேறு பல குற்றங்களுக்கு இலங்கை பொலிசில் ஊழற் குற்றங்கள் எனும் பெயர் பயன்படுத்தப்படுகிறது. உதாரணமாக, மது மற்றும் தூக்க மருந்துப் பொருட்கள் தொடர்பான குற்றங்களும் இவ் ஊழல் குற்ற வகையில் சேர்க்கப்படுகின்றன. பொதுவாக வெவ்வேறு தலைப்புக்களின் கீழ் விரிவாகப் பகுப்பாய்வு செய்ய முடிகின்றமையானது சில ஊழற் குற்றங்களுக்கு அதற்குரிய பெயரிலேயே முன்வைக்கும் நோக்கமாகவுள்ளது. இதற்கு மேலதிகமாக விசேட நியதிச்சட்டங்கள் மூலம் காட்டப்பட்டுள்ள குற்றங்களும் இவ் அத்தியாயத்தின் கீழ் முன்வைக்கப்படுகின்றன.

## 7.1 ஊழற் குற்றங்கள்

சமூகம் ஒன்றில் எதிர்பார்க்கப்படும் அறநெறிகள் மற்றும் நலன் மீது தீங்கான பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் தாக்கம் செலுத்தும் குற்றங்களாக இவ் ஊழற் குற்றங்களைக் குறிப்பிடலாம். ஆறு விடயங்களின் கீழ் பொலிசிடம் இவ் ஊழற் குற்றங்கள் அறிக்கையிடப்பட்டுள்ளதுடன், பின்வரும் அட்டவணை இலக்கம் 17 மூலம் 2016 ஆம் ஆண்டிலிருந்து 2018 வரை ஒப்பீட்டு ரீதியில் இவ் ஊழற் குற்றங்கள் காட்டப்பட்டுள்ளன.

அட்டவணை 17

**2016 – 2018 வரை ஊழற் குற்ற சோதனை அடடவணை**

| தொடரிலக்கம் | குற்றங்கள் ☐ | 2016 | | | | | 2017 | | | | | 2018 | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | அறிக்கையிடப்பட்டவை | வழக்குத் தொடர்ப்பட்ட | வழக்குத் தொடரப்படும் சதவீதம் | தொடரப் பட்டவர்களின் எண்ணிக்கை | | அறிக்கையிடப்பட்டவை | வழக்குத் தொடர்ப்பட்ட | வழக்குத் தொடரப்படும் சதவீதம் | வழக்குத் தொடரப் பட்டவர்களின் | | அறிக்கையிடப்பட்டவை | வழக்குத் தொடரப்பட்ட எண்ணிக்கை | வழக்குத் தொடரப்படும் சதவீதம் | தொடரப் பட்டவர்களின் எண்ணிக்கை | |
| | | | | | ஆண் | பெண் | | | | ஆண் | பெண் | | | | ஆண் | பெண் |
| 1 | விபச்சாரத் தொழில் | 628 | 627 | 100% | 10 | 662 | 522 | 516 | 99% | 183 | 495 | 441 | 414 | 94% | 15 | 456 |
| 2 | விபச்சார விடுதி | 118 | 114 | 97% | 79 | 281 | 262 | 255 | 97% | 181 | 606 | 278 | 261 | 94% | 141 | 725 |
| 3 | தூண்டல்கள் (18 வயதுக்குக் குறைந்த ஒரு பிள்ளையை பாலியல் துர்பிரயோகத்துக்கு) | 14 | 9 | 64% | 3 | 6 | 0 | 0 | | 0 | 0 | 4 | 4 | 100% | 6 | 5 |
| 4 | ஓரினச் சேர்க்கை | 17 | 17 | 100% | 33 | 0 | 4 | 3 | 75% | 6 | 0 | 5 | 5 | 100% | 9 | 0 |
| 5 | நிர்வாணத்தைக் காட்டுதல், காமப் பார்வையுடன் எட்டிப் பார்த்தல் மற்றும் கன்னித் தன்மைக்கு பங்கம் விளைவித்தல் | 130 | 111 | 85% | 100 | 0 | 61 | 51 | 84% | 36 | 0 | 89 | 55 | 62% | 67 | 0 |
| 6 | ஆபாச அட்டை, புகைப்படங்கள் மற்றும் பிரசுரங்கள் விற்றல் | 348 | 339 | 97% | 333 | 3 | 206 | 200 | 97% | 205 | 0 | 137 | 129 | 94% | 118 | 7 |
| **மொத்தம்** | | **1255** | **1217** | **97%** | **558** | **952** | **1055** | **1025** | **97%** | **611** | **1101** | **954** | **868** | **91%** | **356** | **1193** |

மூலம் - பொலிஸ் புள்ளிவிபரவியல் அலகு

### ❖ தரவுப் பகுப்பாய்வு

அட்டவணைக்கு அமைய கடந்த 2016, 2017 மற்றும் 2018 ஆகிய வருடங்களில் ஒட்டுமொத்த ஊழற் குற்றங்களில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சியைக் காட்டுகிறது. அதற்மைய விபச்சாரத் தொழிலில் ஈடுபடும் குற்றங்கள் 2016 ஆம் ஆண்டில் 628 அறிக்கையிடப்பட்டுள்ளதுடன், 2017 ஆம் ஆண்டில் அது 522 வரை 17% ஆல் குறைவடைந்துள்ளன. 2018 ஆம் ஆண்டில் 441 குற்றங்கள் வரை 15% ஆல் மேலும் குறைவடைந்துள்ளமை தரவுகள் மூலம் காட்டப்பட்டுள்ளன. விபச்சாரக் குற்றத்திற்கு வழக்குத் தொடரப்படும் சதவீதம் 2016 ஆம் ஆண்டில் 100% ஆக இருந்ததோடு, 2017 ஆம் ஆண்டில் அது 99% ஆனது. 2018 ஆம் ஆண்டில் விபச்சாரத் தொழிலிற்கு வழக்குத் தொடரப்படும் சதவீதம் 94% வரை குறைவடைந்துள்ளது.

சிறுவர்களை பாலியல் துர்பிரயோகத்திற்காகத் தூண்டும் குற்றத்தை நோக்கினால், 2016 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்ட குற்றங்கள் 14 ஆகும். 2017 ஆம் ஆண்டில் எவ்விதக் குற்றமும் அறிக்கையிடப்படாததோடு, 2018 ஆம் ஆண்டில் இக் குற்றங்கள் 7 ஆல் குறைவடைந்துள்ளன.

சிறுவர்களை பாலியல் து்பிரயோகத்திற்காகத் தூண்டும் குற்றத்திற்கு 2016 ஆம் ஆண்டில் வழக்குத் தொடரப்படும் சதவீதமாக 64% காணப்பட்டது. 2018 ஆம் ஆண்டில் வழக்குத் தொடரப்படும் சதவீதம் 100% வரை உயர்வடைந்துள்ளது. ஆபாச அட்டை, புகைப்படங்கள் மற்றும் பிரசுரங்களை விற்கும் 348 குற்றற்ங்கள் 2016 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்டுள்ளதுடன், 2017 ஆம் ஆண்டில் 4 ஆல் குறைவடைந்துள்ளது. 2018 ஆம் ஆண்டில் அக் குற்றங்கள் 137 வரை 33% ஆல் மேலும் குறைவடைந்துள்ளன.

இக் குற்றங்களுக்கு வழக்குத் தொடரப்படும் சதவீதத்தை கருத்திற் கொண்டால், 2016 மற்றும் 2017 ஆகிய வருடங்களில் வழக்குத் தொடரல்கள் 97% ஆகக் காணப்பட்டதுடன், 2018 ஆம் ஆண்டில் அது 94% வரை வீழ்ச்சியைக் காட்டியது.

காமப் பார்வையுடன் எட்டிப் பார்த்தல், நிர்வாணத்தைக் காட்டுதல் மற்றும் கன்னித்தன்மைக்கு பங்கம் விளைவித்தல் தொடர்பான குற்றங்கள் 2016 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்ட எண்ணிக்கை 130 ஆவதோடு, 2017 ஆம் ஆண்டில் 61 வரை அக் குற்றங்கள் 53% ஆல் வீழ்ச்சியடைந்திருந்தன. 2018 ஆம் ஆண்டில் அக் குற்றங்கள் 89 ஆக அறிக்கையிடப்பட்டதுடன், 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியில் அது 46% அதிகரிப்பாகும். இது தொடாடபிலான வழக்குத் தொடரல்களை எடுத்துக் கொண்டால், 2016 ஆம் ஆண்டில் 85%ஆக இருந்ததோடு, 2017 ஆம் ஆண்டில் இக் குற்றங்களுக்கு வழக்குத் தொடரல் சதவீதம் 84% ஆகும். 2018 ஆம் ஆண்டில் வழக்குத் தொடரல் சதவீதமாக 62% வரை குறைவடைந்திருந்தது.

17 ஓரினச் சேர்க்கைக் குற்றங்கள் 2016 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்டுள்ளதுடன், 2017 ஆம் ஆண்டில் ஓரினச் சேர்க்கைக் குற்றங்கள் 04 வரை 76% ஆல் குறைவடைந்துள்ளன. 2018 ஆம் ஆண்டில் 05 குற்றங்கள் அறிக்கையிடப்பட்டுள்ளதுடன், 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியில் சதவீதமாக 25% அதிகரிப்பாகக் காட்டலாம். ஓரினச் சேர்க்கைக் குற்றங்களுக்கு வழக்குத் தொடரப்படுதலை எடுத்துக் கொண்டால், 2016 ஆம் ஆண்டில் 100% ஆகக் காணப்படுவதோடு, 2017 ஆம் ஆண்டில் 75% வரை அச் சதவீதம் குறைவடைந்துள்ளது. 2018 ஆம் ஆண்டில் வழக்குத் தொடரப்படும் சதவீதம் 100% வரை உயர்வடைந்துள்ளது.

விபச்சார விடுதிகளை நடாத்தல் தொடர்பான குற்றங்களில் அதிகரிப்பொன்றை கடந்த 03 வருடங்களில் காண முடிகிறது. அட்டவணைக்கு அமைய 2016 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்ட எண்ணிக்கை 118 ஆவதோடு, 2017 ஆம் ஆண்டில் 262 வரை 122% ஆல் அக் குற்றங்கள் உயர்வடைந்துள்ளன. அதே போன்று 2018 ஆம் ஆண்டில் விபச்சார விடுதிகளை நடாத்தும் குற்றங்கள் 278 அறிக்கையிடப்பட்டுள்ளதுடன், அது 2017 ஆம் ஆண்டை விட 6% உயர்வாகும். வழக்குத் தொடரல் தொடர்பான தரவுகளுக்கு அமைய 2016 ஆம் ஆண்டில் விபச்சார விடுதிகளை நடாத்தும் குற்றங்களில் 97% ற்கு வழக்குத் தொடரப்பட்டுள்ளதுடன், 2017 ஆம் ஆண்டிலும் 97% வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. 2018 ஆம் அண்டில் வழக்குத் தொடரப்படும் சதவீதமாக 94% ஐக் காட்டுகிறது.

அட்டவணையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஒட்டுமொத்த ஊழற் குற்றங்களின் அறிக்கையிடப்பட்ட எண்ணிக்கையானது 2016 ஆம் ஆண்டில் 1255 ஆக இருந்ததோடு, 2017 ஆம் ஆண்டில் 1055 வரை 16% ஆல் ஊழற் குற்றங்கள் குறைவடைந்துள்ளன. 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியில் 2018 ஆம் ஆண்டில் இக் குற்றங்கள் 954 வரை மேலும் 9% ஆல் குறைவடைந்துள்ளன.

ஊழற் குற்றம் தொடர்பில் சந்தேக நபர்களைக் கைது செய்தல் குறித்து நோக்குகையில், அட்டவணைக்கு அமைய 2016 ஆம் ஆண்டில் ஆண், பெண் இருபாலாரிலும் 1510 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன், 2017 ஆம் ஆண்டில் கைது செய்யப்பட்ட எண்ணிக்கை 1712 வரை 13% ஆல் உயர்வடைந்துள்ளன. 2018 ஆம் ஆண்டில் கைது செய்யப்பட்ட எண்ணிக்கை 1549 ஆவதோடு, அது 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியில் 9% வீழ்ச்சியாகும். கைது செய்யப்பட்ட

இந் நபர்களுள் பெரும்பாலானவர்கள் பெண்களாக இருப்பது விசேட அம்சமாகும். 2016 ஆம் ஆண்டில் கைது செய்யப்பட்ட 1510 பேருள் 952 பேர் அதாவது 63% பெண்களாவதோடு, 2017 ஆம் ஆண்டில் கைது செய்யப்பட்டவர்களுள் 64% பெண்கள் என்பதை அறியலாம். 2018 ஆம் ஆண்டில் ஊழற் குற்றங்களுக்காகக் கைது செய்யப்பட்டவர்களுள் 77% பெண்கள் என்பது அட்டவணைக்கு அமைய தெளிவாகிறது.

## 7.2. நியதிச்சட்டக் குற்றங்கள்

பல்வேறு சட்டங்கள் மூலம் காட்டப்பட்டுள்ள 31 குற்ற வகைகளின் கீழ் வகைப்படுத்தி, இவ் உப பந்தியின் கீழ் காட்டப்பட்டுள்ளன. 2018.12.31 ஆம் திகதி வரை இலங்கை பொலிசிடம் அறிக்கையிடப்பட்ட இந் நியதிச்சட்டக் குற்றங்கள் 2016 மற்றும் 2017 ஆகிய வருடங்களில் அறிக்கையிடப்பட்ட நியதிச்சட்டக் குற்றங்களுடன் ஒப்பீட்டு ரீதியில் அட்டவணை இலக்கம் 18 மூலம் முன்வைத்து, அவற்றுள் விசேடமான சில குற்றங்கள் குறித்த தரவுகள் பகுப்பாய்வு ரீதியில் காட்டப்பட்டுள்ளன.

அட்டவணை இலக்கம் 18 **2016 – 2018 வரை நியதிச் சட்டத்தின் கீழ் புரியப்படும் குற்றங்கள் அட்டவணை**

| தொடரிலக்கம் | குற்றங்கள் | 2016 | | | | 2017 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | அறிக்கையிடப்பட்டவை | விசாரிக்கப்பட்டு வருபவை | தீர்க்கப்பட்டவை | தீர்க்கப்படும் சதவீதம் | அறிக்கையிடப்பட்டவை | விசாரிக்கப்பட்டு வருபவை | தீர்க்கப்பட்டவை | தீர்க்கப்படும் சதவீதம் | அறிக்கையிடப்பட்டவை | விசாரிக்கப்பட்டு வருபவை | தீர்க்கப்பட்டவை | தீர்க்கப்படும் சதவீதம் |
| 1 | 1984 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க மின்சாரச் சட்டம் - திருட்டுத்தனமாக மின்சாரத்தைப் பெற்றுக் கொள்ளல் | 1504 | 46 | 1458 | 97% | 952 | 36 | 916 | 96% | 912 | 22 | 890 | 98% |
| 2 | நாடோடிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் புரியப்படும் குற்றங்கள் | 2575 | 5 | 2570 | 100% | 2711 | 143 | 2568 | 95% | 1140 | 117 | 1023 | 90% |
| 3 | மிருக வதைச் சட்டத்தின் கீழ் புரியப்படும் குற்றங்கள் | 986 | 45 | 941 | 95% | 934 | 52 | 882 | 94% | 772 | 38 | 734 | 95% |
| 4 | அனுமதிப் பத்திரமின்றி எரிபொருளைப் பெற்றுக் கொள்ளல் அல்லது விற்றல் | 236 | 12 | 224 | 95% | 173 | 4 | 169 | 98% | 227 | 21 | 206 | 91% |
| 5 | தொல்பொருட்களைத் திருடுதல் அல்லது அழித்தல் அல்லது தம்வசம் வைத்திருத்தல் | 175 | 29 | 146 | 83% | 208 | 41 | 167 | 80% | 252 | 47 | 205 | 81% |
| 6 | சூதாட்டக் கட்டளைச் சட்டத்தின் கீழ் புரியப்படும் குற்றங்கள் | 1711 | 40 | 1671 | 98% | 1685 | 43 | 1642 | 97% | 1587 | 83 | 1504 | 95% |
| 7 | சுங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழ் புரியப்படும் குற்றங்கள் | 86 | 3 | 83 | 97% | 150 | 4 | 146 | 97% | 35 | 2 | 33 | 94% |
| 8 | தேயிலை மற்றும் இறப்பர் கட்டளைச் சட்டத்தின் கீழ் புரியப்படும் குற்றங்கள் | 54 | 3 | 51 | 94% | 66 | 2 | 64 | 97% | 27 | 2 | 25 | 93% |
| 9 | 1981 ஆம் ஆண்டின் 87 ஆம் இலக்க மற்றும் 1988 ஆம் ஆண்டின் 64 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்ட கரையோரப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் புரியப்படும் குற்றங்கள் | 155 | 6 | 149 | 96% | 264 | 18 | 246 | 93% | 142 | 6 | 136 | 96% |
| 10 | போலியான சீ.டீ / வீ.சீ.டீ. / டீ.வீ.டீ. இறுவட்டுக்களை சட்ட விரோதமாகத் தயாரித்தல் | 145 | 7 | 138 | 95% | 137 | 5 | 132 | 96% | 80 | 2 | 78 | 98% |
| 11 | 1968 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க சுற்றாடல் சட்டத்தின் 23 (அ), 23 (ஏ), 123 (அ) 1, 23 (க) 1, 23 (ச) 1, 23 (அஅ), 23 (உஉ) பிரிவுகளின் கீழ் புரியப்பட்ட குற்றங்கள் | 4733 | 310 | 4423 | 93% | 5663 | 211 | 5452 | 96% | 3849 | 294 | 3555 | 92% |
| 12 | தடை செய்யப்பட்ட கத்தியை தம்வசம் வைத்திருத்தல் | 306 | 7 | 299 | 98% | 272 | 11 | 261 | 96% | 238 | 17 | 221 | 93% |
| 13 | அனுமதிப் பத்திரமின்றி வெடிபொருட்களை தம்வசம் வைத்திருத்தல் / கொண்டு செல்லல் / விற்றல் | 29 | 0 | 29 | 100% | 192 | 4 | 188 | 98% | 23 | 1 | 22 | 96% |
| 14 | அனுமதிப் பத்திரமின்றி வெடிபொருட்களை தம்வசம் வைத்திருத்தல் / கொண்டு செல்லல் / விற்றல் | 90 | 6 | 84 | 93% | 132 | 10 | 122 | 92% | 109 | 12 | 97 | 89% |
| 15 | அனுமதிப் பத்திரமின்றி ரவைகளை தம்வசம் வைத்திருத்தல் / கொண்டு செல்லல் / விற்றல் | 213 | 4 | 209 | 98% | 111 | 8 | 103 | 93% | 148 | 13 | 135 | 91% |
| 16 | குடிபோதையில் புரியப்படட குற்றங்கள் - 1979 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்கச் சட்டம் | 14776 | 410 | 14366 | 97% | 13481 | 495 | 12986 | 96% | 10248 | 590 | 9658 | 94% |
| 17 | அனுமதிப் பத்திரமின்றி துப்பாக்கிகளை தயாரித்தல் / தம்வசம் வைத்திருத்தல் / கொண்டு செல்லல் / விற்றல் | 916 | 53 | 863 | 94% | 1171 | 82 | 1089 | 93% | 1307 | 93 | 1214 | 93% |
| 18 | கடற்றொழில் கட்டளைச் சட்டத்தின் கீழ் புரியப்பட்ட குற்றங்கள் | 840 | 19 | 821 | 98% | 526 | 30 | 496 | 94% | 388 | 32 | 356 | 92% |

| | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 19 | டைனமைட் / வெடிப் பொருட்களைப் பயன்படுத்தி மீன் பிடித்தல் | 34 | 2 | 32 | 94% | 22 | 3 | 19 | 86% | 25 | 3 | 22 | 88% |
| 20 | லைட்கோஸ் முறையைப் பயன்படுத்தி மீன் பிடித்தல் | 2 | 0 | 2 | 100% | 5 | 1 | 4 | 80% | 5 | 0 | 5 | 100% |
| 21 | 1970 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்கத் திருத்தப்படும் கால்நடை மற்றும் மரப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழான குற்றங்கள் | 819 | 65 | 754 | 92% | 848 | 63 | 785 | 93% | 577 | 65 | 512 | 89% |
| 22 | பாதுகாக்கப்பட்ட மிருகங்களை வேட்டையாடல் | 117 | 1 | 116 | 99% | 73 | 3 | 70 | 96% | 78 | 7 | 71 | 91% |
| 23 | அனுமதிப் பத்திரமின்றி மிருகங்களின் உடற் பாகங்களை தம்வசம் வைத்திருத்தல் | 168 | 9 | 159 | 95% | 178 | 24 | 154 | 87% | 170 | 9 | 161 | 95% |
| 24 | வேட்டையாடப்பட்ட இறைச்சியை தம்வசம் வைத்திருததல் | 472 | 17 | 455 | 96% | 620 | 28 | 592 | 95% | 510 | 35 | 475 | 93% |
| 25 | 1966 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க கட்டளைச் சட்டத்தின் கீழான குற்றங்கள் | 1000 | 164 | 836 | 84% | 715 | 60 | 655 | 92% | 459 | 75 | 384 | 84% |
| 26 | பாதுகாக்கப்பட்ட காடுகளை அழித்தல், சேதப்படுத்தல் அல்லது மரங்களை வெட்டுதல் | 594 | 66 | 528 | 89% | 515 | 74 | 441 | 86% | 435 | 109 | 326 | 75% |
| 27 | சட்ட விரோத முறையில் மணல் / மண் எடுத்தல் அல்லது கொண்டு செல்லல் | 9947 | 291 | 9656 | 97% | 13906 | 350 | 13556 | 97% | 13693 | 434 | 13259 | 97% |
| 28 | சட்ட விரோத முறையில் மரக் குற்றிகளைக் கொண்டு செல்லல் | 1584 | 159 | 1425 | 90% | 1558 | 148 | 1410 | 91% | 1335 | 203 | 1132 | 85% |
| 29 | மாணிக்கம் மற்றும் தங்க ஆபரண கட்டளைச் சட்டத்தின் கீழ் புரியப்படும் குற்றங்கள் | 199 | 35 | 164 | 82% | 177 | 0 | 177 | 100% | 205 | 18 | 187 | 91% |
| 30 | சட்ட விரோத மாணிக்கக் கல் அகழ்வு | 935 | 99 | 836 | 89% | 710 | 111 | 599 | 84% | 597 | 48 | 549 | 92% |
| 31 | வேறு | 770 | 81 | 689 | 89% | 858 | 92 | 766 | 89% | 1034 | 107 | 927 | 90% |
| **மொத்தம்** | | **46171** | **1994** | **44177** | **96%** | **49013** | **2156** | **46857** | **96%** | **40607** | **2505** | **38102** | **94%** |

மூலம் - பொலிஸ் புள்ளிவிபரவியல் அலகு

## ❖ தரவுப் பகுப்பாய்வு

அட்டவணையின் தரவுகளைப் பகுப்பாய்வு ரீதியில் நோக்குகையில், கடந்த மூன்று வருடங்களில் நியதிச் சட்டக் குற்றங்கள் பல்வேறு ஏற்ற இறக்கங்களுடன் அறிக்கையிடப்பட்டுள்ளமை புலனாகிறது.

அட்டவணைக்கு அமைய மின்சார சட்டத்தின் மூலம் தடை செய்யப்பட்டுள்ள மின்சாரத்தை களவாகப் பெற்றுக் கொள்ளும் குற்றங்களை எடுத்துக் கொண்டால், 2016 ஆம் ஆண்டில் இக் குற்றங்கள் 1504 அறிக்கையிடப்பட்டுள்ளதுடன், 2017 ஆம் ஆண்டில் இக் குற்றங்கள் 652 வரை 37% ஆல் குறைவடைந்துள்ளன. அதே போன்று 2018 ஆம் ஆண்டில் மின்சாரத்தை களவாகப் பெற்றுக் கொண்ட குற்றங்கள் 912 அறிக்கையிடப்பட்டுள்ளதுடன், அது 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியில் 4% வீழ்ச்சியாகும். மின்சாரத்தை களவாகப் பெற்றுக் கொண்ட குற்றங்களுக்குத் தீர்வு வழங்கப்பட்டுள்ள எண்ணிக்கை 97மூ வரை உயர்வடைந்துள்ளது.

அட்டவணைக்கு அமைய நாடோடிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் புரியப்பட்ட குற்றங்களிலும் 2018 ஆம் ஆண்டில் வீழ்ச்சியைக் காட்டுகிறது. 2016 ஆம் ஆண்டில் இக் குற்றங்கள் 2575 அறிக்கையிடப்பட்டுள்ளதுடன், 2017 ஆம் ஆண்டில் அது 2711 வரை 5% ஆல் உயர்வடைந்துள்ளது. நாடோடிகள் கட்டளைச் சட்டத்தின் கீழான 1140 குற்றங்கள் 2018 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்டுள்ளதுடன், 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியில் அது 58% வீழ்ச்சியாகும்.

குறித்த நாடோடிகள் கட்டளைச் சட்டத்தின் குற்றங்களுக்கு வழக்குத் தொடரலின் மூலம் தீர்வு வழங்கப்பட்டுள்ள எண்ணிக்கையை சதவீதமாக நோக்கினால் 2016 ஆம் ஆண்டில் 99% ஆகவும், 2017 ஆம் ஆண்டில் 95% ஆகவும், 2018 ஆம் ஆண்டில் 90% ஆகவும் குறிப்பிடலாம்.

மிருக வதைச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றங்களைக் கவனத்திற் கொள்கையில், கடந்த மூன்று வருடங்களில் இக் குற்றங்களும் குறைவடைந்திருப்பதைக் காணலாம். அட்டவணைக்கு

அமைய 2016 ஆம் ஆண்டில் 986 குற்றங்களாக அறிக்கையிடப்பட்ட இக் குற்றங்கள் 2017 ஆம் ஆண்டில் 934 வரை 5% ஆல் குறைவடைந்துள்ளன. 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியில் 2018 ஆம் ஆண்டில் மேலும் 772 வரை இக் குற்றங்கள் 17% ஆல் குறைவடைந்துள்ளன. வழக்குத் தொடரப்படும் சதவீதத்தை எடுத்துக் கொண்டால், 2016 ஆம் ஆண்டில் 95% ஆக இருந்ததோடு, 2017 ஆம் ஆண்டில் 94% ஆகும். 2018 ஆம் ஆண்டில் மிருக வதை தொடர்பான குற்றங்களுக்கு வழக்குத் தொடரப்படலானது சதவீதமாக 95% ஆகும்.

தொல்பொருட்கள் குறித்த திருத்தப்பட்ட கட்டளைச் சட்டத்தின் கீழான குற்றங்களில் ஓரளவு அதிகரிப்பை அட்டவணையின் தரவுகள் மூலம் அறிந்து கொள்ளலாம். 2016 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்டுள்ள குற்றங்களின் எண்ணிக்கை 175 ஆக இருந்ததோடு, அது 208 வரை 2017ஆம் ஆண்டில் 19% ஆல் அதிகரித்துள்ளது. 2018 ஆம் ஆண்டில் தொல்பொாருட்கள் குறித்த இக் குற்றங்கள் 252 வரை 2 ஆல் மேலும் உயர்வடைந்துள்ளன. தொல்பொருட்கள் குற்றத்திற்கு வழக்குத் தொடரப்பட்ட முறையை எடுத்துக் கொண்டால், 2016 ஆம் ஆண்டில் 8 வழக்குத் தொடரப்பட்டுள்ளதுடன், 2017 ஆம் ஆண்டில் வழக்குத் தொடரப்பட்ட சதவீதம் 80% ஆகும். 2018 ஆம் ஆண்டிலும் வழக்குத் தொடரப்பட்ட சதவீதம் 8 ஆகும்.

அட்டவணைக்கு அமைய சூதாட்ட கட்டளைச் சட்டத்தின் கீழான குற்றங்களிலும் 2016 – 2018 காலப் பகுதியில் வீழ்ச்சியைக் காணலாம். 2016 ஆம் ஆண்டில் இக் குற்றங்கள் 1711 அறிக்கையிடப்பட்டுள்ளதுடன், 2017 ஆம் ஆண்டில் அக் குற்றங்கள் 1685 வரை ஆல் குறைவடைந்துள்ளன. 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியில் 2018 ஆம் ஆண்டில் அமைய சூதாட்ட கட்டளைச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றங்கள் 1587 வரை 6% ஆல் குறைவடைந்துள்ளன. சூதாட்ட கட்டளைச் சட்டத்தின் கீழான குற்றங்களுக்குத் தீர்வு வழங்கலானது 2016 ஆம் ஆண்டில் 98% ஆக இருந்ததுடன், 2017 ஆம் ஆண்டில் 97% ஆகும். 2018 ஆம் ஆண்டில் வழக்குத் தொடரப்பட்ட சதவீதம் 95% வரை குறைவடைந்திருப்பதைக் காணலாம்.

அட்டவணைக்கு அமைய சுங்க கட்டளைச் சட்டத்தின் கீழான குற்றங்களிலும் குறிப்பிடத்தக்கதொரு வீழ்ச்சியை கடந்த மூன்று வருடங்களில் காணலாம். அதற்கமைய 2016 ஆம் ஆண்டில் சுங்க கட்டளைச் சட்டத்தின் கீழான குற்றங்கள் 86 அறிக்கையிடப்பட்டுள்ளதுடன், 2017 ஆம் ஆண்டில் அக் குற்றங்கள் 150 வரை 74% ஆல் அதிகரித்துள்ளன. 2018 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்ட சுங்கக் குற்றங்களின் எண்ணிக்கை 35 ஆகும். அது 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியில் 77% வீழ்ச்சியாக இனங் காணலாம். வழக்குத் தொடரப்படல் மூலம் சுங்கக் குற்றங்களுக்கு தீர்வு வழங்கும் சதவீதம் 2016 ஆம் ஆண்டில் 96% ஆக இருந்ததோடு, 2017 ஆம் ஆண்டில் 97% வரை வழக்குத் தொடரல்கள் அதிகரித்துள்ளன. 2018 ஆம் ஆணுடில் சுங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழான குற்றங்களுக்கான தீர்வு சதவீதம் 94% ஆகும்.

கரையோரத்தை அண்டிய மனித செயற்பாடுகளினால் உருவாகும் கரையோர சுற்றாடல் அழிவை பாரிய சுற்றாடல் நெருக்கடியாக இனங் காணலாம்.

கரையோரப் பாதுகாப்பு சட்டத்தின் மூலம் இச் செயற்பாடுகள் தடை செய்யப்பட்டிருந்தாலும் கடந்த காலப் பகுதியில் பெருமளவில் சட்டம் மீறப்பட்டுள்ளதோடு, 2016 ஆம் ஆண்டில் இவ்வாறான குற்றங்கள் 155 அறிக்கையிடப்பட்டன. 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியில் 2017 ஆம் ஆண்டில் இக் குற்றங்கள் 264 வரை 70% அதிகரித்துள்ளன. இருப்பினும் 2018 ஆம் ஆண்டில் இக் குற்றங்களில் பாரிய வீழ்ச்சியை அட்டவணைக்கு அமைய இனங் காண முடிவதோடு, அறிக்கையிடப்பட்ட குற்றங்களின் எண்ணிக்கை 142 ஆகும். அதற்கமைய 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியில் 2018 ஆம் ஆண்டில் கரையோரப் பாதுகாப்பு சட்ட மீறல்கள் 46% ஆல் குறைவடைந்துள்ளமையை அட்டவணைக்கு அமைவாக அறியலாம். கரையோரப் பாதுகாப்பு சட்ட மீறலுக்கு வழக்குத் தொடரல் மூலம் தீர்வு வழங்கப்பட்டுள்ள முறையை ஆய்வு செய்கையில், உயர்ந்த சதவீதத்தில் காணப்படுகிறது. அதற்கமைய 2016 ஆம் ஆண்டில் 96% ஆகவும், 2017

ஆம் ஆண்டில் 93% ஆகவும் காணப்பட்ட வழக்குத் தொடரப்பட்ட சதவீதம் 2018 ஆம் ஆண்டில் மீண்டும் 96% வரை அதிகரித்துள்ளது.

பெருமளவில் அறிக்கையிடப்படும் சுற்றாடல் கட்டளைச் சட்ட மீறல்களும் குறிப்பிடத்தக்க அளவு குறைவடைந்திருப்பதை 2018 ஆம் ஆண்டில் காணலாம். அட்டவணைக்கு அமைய 4733 சுற்றாடல் குற்றங்கள் 2016 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்டதோடு, அவ் எண்ணிக்கையானது 5663 வரை 20% ஆல் 2017 ஆம் ஆண்டில் உயர்வடைந்துள்ளது. 2018 ஆம் ஆண்டில் இக் குற்றங்கள் 3849 வரை 32% ஆல் குறிப்பிடத்தக்க அளவு வீழ்ச்சியை 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியில் காட்டுகிறது. குறிப்பிட்ட காலப் பகுதியில் சுற்றாடற் குற்றங்களுக்கு வழக்குத் தொடரப்படும் சதவீதமாக எடுத்துக் கொண்டால், 2016 ஆம் ஆண்டில் 93% ஆகவும், 2017 ஆம் ஆண்டில் 96% ஆகவும் காணப்பட்டதோடு, 2018 ஆம் ஆண்டில் வழக்குத் தொடரப்படும் சதவீதம் 92% ஆகும்.

அட்டவணையின் தரவுகளுக்கு அமைய குடிபோதையில் புரியும் குற்றங்களிலும் தெளிவானதொரு வீழ்ச்சி 2018 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்டுள்ளது. குடிபோதையில் புரியும் குற்றங்களினால் பொது மக்கள் துன்புறுத்தப்படல், சொத்துக்களுக்கு சேதம் மற்றும் பொதுவில் சமாதானம் மீறப்படல் இடம்பெறுவதோடு, 2016 ஆம் ஆண்டில் அத்தகைய குற்றங்கள் 14776 எனும் பெரும் எண்ணிக்கை அறிக்கையிடப்பட்டது. 2017 ஆம் ஆண்டில் அக் குற்றங்கள் 13481 வரை 9% வீச்சியைக் காட்டியதோடு, 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியில் 2018 ஆம் ஆண்டில் இக் குற்றங்கள் 10248 வரை 24% வீழ்ச்சியைக் காணலாம். குடிபோதையில் புரியும் குற்றங்களின் தீர்வு சதவீதத்தை எடுத்துக் கொண்டால், 2016 ஆம் ஆண்டில் 97% ற்கு வழக்குத் தொடரப்பட்டுள்ளதுடன், 2017 ஆம் ஆண்டில் அச் சதவீதம் 96% ஆகும். 2018 ஆம் ஆண்டில் வழக்குத் தொடரப்படும் சதவீதம் 94% ஆகக் காட்டப்பட்டுள்ளது.

சமுதாயத்தில் இம்பெறும் கொடூரமான குற்றங்களைக் கவனத்திற் கொள்கையில், அவ்வாறான பல குற்றங்களக்கு துப்பாக்கிகள் பயன்படுத்தப்படுகின்றமையானது பெருமளவில் காணக் கிடைக்கிறது. அட்டவணையின் தரவுகளுக்கு அமைய அனுமதிப் பத்திரமின்றி துப்பாக்கிகள் தயாரித்தல், தம்வசம் வைத்திருத்தல் மற்றும் கொண்டு செல்லல் போன்ற குற்றங்களில் அதிகரிப்பை கடந்த காலப் பகுதியில் காணலாம். உதாரணமாக, 2016 ஆம் ஆண்டில் இவ்வாறான குற்றங்கள் 916 அறிக்யிடப்பட்டுள்ளதுடன், 2017 ஆம் ஆண்டில் அக் குற்றங்கள் 1171 வரை 28% ஆல் அதிகரித்துள்ளன. 2018 ஆம் ஆண்டில் மேலும் இக் குற்றங்கள் 1307 வரை 12% வளர்ச்சியை 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியில் காட்டுகிறது.

இவ்வாறான அனுமதிப் பத்திரமற்ற துப்பாக்கிகளைக் கைப்பற்றல் மற்றம் சந்தேக நபர்களைக் கைது செய்தல் மற்றும் வழக்குத் தொடரல் குறித்து அவதானம் செலுத்துகையில், அட்டவணைக்கு அமைய 2016 ஆம் ஆண்டில் வழக்குத் தொடரப்படும் சதவீதம் 94% ஆகும். 2017 மற்றும் 2018 ஆகிய வருடங்களில் அச் சதவீதம் 93% மட்டத்தில் காணப்படுகிறது.

அட்டவணைக்கு அமைய கடற்றொழில் கட்டளைச் சட்டத்தின் கீழான குற்றங்களிலும் வீழ்ச்சியை கடந்த சில வருடங்களில் காணலாம். 2016 ஆம் ஆண்டில் கடற்றொழில் கட்டளைச் சட்டத்தின் கீழான குற்றங்கள் 840 அறிக்யிடப்பட்டுள்ளதுடன், 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியில் அக் குற்றங்கள் 526 வரை 37% ஆல் குறைவடைந்துள்ளன. 2018 ஆம் ஆண்டில் கட்டளைச் சட்டத்தின் கீழான குற்றங்கள் 388 வரை 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியில் வீழ்ச்சியைக் காண முடிகிறது. 2016 ஆம் ஆண்டில் இக் குற்றங்களுக்கான வழக்குத் தொடரல் சதவீதம் 98% ஆக இருந்ததுடன், 2017 ஆம் ஆண்டில் 94% ஆகவும், 2018 ஆம் ஆண்டில் 92% ஆகவும் காணப்பட்டது.

வனவிலங்குகள் மற்றும் மரங்கள் கட்டளைச் சட்டத்தின் காட்டப்பட்டுள்ள குற்றங்கள் தொடர்பில் அட்டவணையின் தரவுகளை நோக்குகையில், அக் குற்றங்களிலும் குறிப்பிடத்தக்க வீழ்ச்சியை 2018 ஆம் ஆண்டில் காட்டுகிறது. 2016 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்ட குற்றங்கள் 819 ற்கு

ஒப்பீட்டு ரீதியில் 2017 ஆம் ஆண்டில் 848 குற்றங்கள் அறிக்கையிடப்பட்டுள்ளதுடன், 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியில் 3% அதிகரிப்பாகும். 2018 ஆம் ஆண்டில் இக் கட்டளைச் சட்டத்தின் கீழான குற்றங்கள் 577 அறிக்யையிடப்பட்டுள்ளதுடன், 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியில் 32% வீழ்ச்சியாகும். அட்டவணைக்கு அமைய வனவிலங்குகள் மற்றும் மரங்கள் கட்டளைச் சட்டத்தில் காட்டப்பட்டுள்ள குற்றங்களுக்குக் கடந்த மூன்று வருடங்களில் வழக்குத் தொடரப்படலை நோக்குகையில், 2016 மற்றும் 2017 ஆகிய வருடங்களில் வழக்குத் தொடரலானது சதவீதமாக 92% ஆகும். 2018 ஆம் ஆண்டில் வழக்குத் தொடரல்கள் 89% வரை குறைவடைந்துள்ளன.

அட்டவணையின் தரவுகளுக்கு அமைய பாதுகாக்கப்பட்ட விலங்குகளை வேட்டையாடும் குற்றங்கள் 2016 ஆம் ஆண்டில் 117 அறிக்கையிடப்பட்டுள்ளதுடன், 2017 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்ட குற்றங்களின் எண்ணிக்கை 73 ஆகும். அது 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியில் 38% வீழ்ச்சியாகும். 2018 ஆம் ஆண்டில் இக் குற்றங்கள் 78 அறிக்கையிடப்பட்டுள்ளதுடன், 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியில் 7% அதிகரிப்பாகக் காட்டலாம். பாதுகாக்கப்பட்ட விலங்குகளை வேட்டையாடும் குற்றங்கள் தொடர்பில் வழக்குத் தொடரப்படல் 2016 ஆம் ஆண்டில் 99% ஐ விஞ்சியுள்ளதுடன், 2017 ஆம் ஆண்டில் வழக்குத் தொடரப்படும் சதவீதம் 96% ஆகும். 2018 ஆம் ஆண்டில் அச் சதவீதம் 9 வரை வீழ்ச்சியடைந்திருப்பதைக் காணலாம்.

காடுகள் கட்டளைச் சட்டத்தின் கீழான குற்றங்களிலும் வீழ்ச்சியை 2018 ஆம் ஆண்டில் காணலாம். அட்டவணைக்கு அமைய 2016 ஆம் ஆண்டில் இக் குற்றங்கள் 1000 அறிக்கையிடப்பட்டுள்ளதுடன், அதனுடன் ஒப்பீட்டு ரீதியில் 2017 ஆம் ஆண்டில் 715 குற்றங்கள் வரை 28% ஆலும், 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியில் 2018 ஆம் ஆண்டில் இக் குற்றங்கள் 459 வரை 36% ஆலும் குறைவடைந்துள்ளமையை அட்டவணையின் மூலம் இனங் காணலாம். இக் குற்றங்களுக்கான தீர்வு சதவீதத்தை எடுத்துக் கொண்டால், 2016 ஆம் ஆண்டில் வழக்குத் தொடரப்படும் எண்ணிக்கை 84% ஆக இருந்ததுடன், 2017 ஆம் ஆண்டில் 92% வரை உயர்வடைந்துள்ளது. 2018 ஆம் ஆண்டில் வழக்குத் தொடரல் சதவீதம் 84% வரை மீண்டும் வீழ்ச்சியடைந்துள்ளது.

பாதுகாக்கப்பட்ட காடுகளை அழித்தல் அல்லது சேதப்படுத்தல் குறித்த குற்றங்களை எடுத்துக் கொண்டால், 2016 ஆம் ஆண்டில் அவ்வாறான குற்றங்கள் 594 அறிக்கையிடப்பட்டுள்ளதுடன், அதனுடன் ஒப்பீட்டு ரீதியில் 2017 ஆம் ஆண்டில் அக் குற்றங்கள் 515 வரை 13% ஆல் குறைவடைந்துள்ளன. 2018 ஆம் ஆண்டில் இக் குற்றங்கள் மேலும் 435 வரை 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியில் 15% ஆல் குறைவடைந்துள்ளன. பாதுகாக்கப்பட்ட காடுகளை அழித்தல் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட வழக்குத் தொடரல்களை நோக்குகையில், 2016 ஆம் ஆண்டில் அச் சதவீதம் 89% ஆகும். 2017 ஆம் ஆண்டில் வழக்குத் தொடரல் சதவீதம் 86% ஆக இருந்ததுடன், 2018 ஆம் ஆண்டில் அச் தசவீதம் 75% வரை குறைவடைந்துள்ளது.

பாரிய சுற்றாடல் சிக்கல்களை ஏற்படுத்தும் குற்றங்களாகக் கருதப்படும் அனுமதியற்ற மணல் அகழ்வு மற்றும் கொண்டு செல்லல் தொடர்பில் அட்டவணையில் உள்ளடக்கப்பட்டுள்ள தரவுகளுக்கு அமைய 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியில் 2017 மற்றும் 2018 ஆகிய வருடங்களில் இது தொடர்பான குற்றங்களில் குறிப்பிடத்தக்க அளவு குறைவைக் காண முடியாமை புலனாகிறது. 2016 ஆம் ஆண்டில் அனுமதியற்ற மணல் அகழ்வு மற்றும் கொண்டு செல்லல் தொடர்பான குற்றங்கள் 9947 அறிக்கையிடப்பட்டுள்ளதுடன், அதனுடன் ஒப்பீட்டு ரீதியில் 2017 ஆம் ஆண்டில் அவ் எண்ணிக்கை 13906 வரை 40% உயர்வடைந்திருந்தன. 2018 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்ட அனுமதியற்ற மணல் அகழ்வு குற்றங்களின் எண்ணிக்கை 13693 ஆகும். அதன் போது அளவிலான வீழ்ச்சியை 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியில் காண முடிந்தாலும், 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியில் 2018 ஆம் ஆண்டில் இக் குற்றங்களில் அதிகரிப்பானது சதவீதமாக 38% ஆகும். இக் குற்றங்களுக்கான வழக்குத் தொடரல் சதவீதம் மேற்குறித்த மூன்று வருடங்களிலும் 97% மட்டத்தில் காணப்படுகிறது.

அனுமதியற்ற மரக்குற்றிகள் கொண்டு செல்லல் தொடர்பான குற்றங்களிலும் கடந்த சில வருடங்களில் வீழ்ச்சி காணப்படுகிறது. அட்டவணைக்கு அமைய 2016 ஆம் ஆண்டில் இத்தகைய குற்றங்கள் 1584 அறிக்கையிடப்பட்டுள்ளதுடன், 2017 ஆம் ஆண்டில் 1558 வரை இக் குற்றங்களில் 2% வீழ்ச்சி வெளிப்படுகிறது. 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியில் 2018 ஆம் ஆண்டில் அனுமதியற்ற மரக்குற்றிகள் கொண்டு செல்லும் குற்றங்கள் 1335 வரை 14% வீழ்ச்சியைக் காணலாம். இக் குற்றங்களுக்கான வழக்கத் தொடரல் சதவீதம் 2016 ஆம் ஆண்டில் 90% ஆக இருந்ததுடன், 2017 ஆம் ஆண்டில் 9 ஆகும். 2018 ஆம் ஆண்டில் வழக்குத் தொடரலானது சதவீதமாக 85% ஆகும்.

2016 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்ட அனுமதியற்ற மாணிக்கக் கல் அகழ்வு எண்ணிக்கையானது 935 ஆவதுடன், அதனுடன் ஒப்பீட்டு ரீதியில் 2017 ஆம் ஆண்டில் இவ்வாறான குற்றங்கள் 710 அறிக்கையிடப்பட்டன. அது 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியில் 24% வீழ்ச்சியாகும். 2018 ஆம் ஆண்டில் அனுமதியற்ற மாணிக்கக் கல் அகழ்வுகள் 597 அறிக்கையிடப்பட்டுள்ளதுடன், அது 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியில் 16% வீழ்சியாகக் காட்டலாம். இக் குற்றத்திற்காக வழக்குத் தொடரல் சதவீதம் 2016 ஆம் ஆண்டில் 89% ஆக இருந்ததுடன், 2017 ஆம் ஆண்டில் 84% ஆகும். 2018 ஆம் ஆண்டில் வழக்குத் தொடரல்கள் 92% வரை உயர்வடைந்துள்ளது.

பொதுவில் எடுத்துக் கொண்டால், 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியில் ஒட்டுமொத்த நியதிச்சட்ட குற்றங்களில் 17% அளவிலான வீழ்ச்சியை 2018 ஆம் ஆண்டில் காணலாம். இதற்கு மேலதிகமாக சுற்றாடல் அழிவுக்குரிய சட்டம் மூலம் காட்டப்பட்டுள்ள குற்றங்களில் தெளிவானதொரு வீழ்ச்சியை 2018 ஆம் ஆண்டில் காணலாம்.

ஒட்டுமொத்த நியதிச்சட்ட குற்றங்களுக்கு வழக்குத் தொடரல்கள் மூலம் தீர்வு வழங்கப்பட்ட எண்ணிக்கையை சதவீதமாக எடுத்துக் கொண்டால், 2016 மற்றும் 2017 ஆகிய வருடங்களில் 96% ஆகக் காணப்படுவதுடன், 2018 ஆம் ஆண்டில் வழக்குத் தொடரல் சதவீதம் 94% ஆகும்.

## 08. வாகன விபத்துக்கள்

வாகன விபத்துக்களைக் குறைத்து பொது மக்களின் உயிர் மற்றும் சொத்துக்களைப் பாதுகாப்பது தொடர்பில் இலங்கை பொலிஸ் பாரிய பணியை ஆற்றுகிறது. நாளாந்தம் போக்குவரத்துக் கடமைக்கு அதிகளவான உத்தியோகத்தர்களை ஈடுபடுத்தி, போக்குவரத்துக் கட்டுப்பாடு மூலம் வாகன விபத்துக்களைக் குறைத்தலானது பொலிசின் பிரதான பணியாகியுள்ளது.

வீதி முறைமைகளின் தரம், காணப்படும் அதிகளவான வாகன எண்ணிக்கை மற்றும் அவ் வாகனங்கள் வீதி முறைமைகளுக்கு இசைவாகும் திறன், போக்குவரத்து ஒழுங்குவிதிகள் நடைமுறைப்படுத்தப்படும் தன்மை போன்றே சாரதிகள் மற்றும் பாதசாரிகள் வீதிப் பாவனை தொடர்பில் வெளிப்படுத்தும் கவனம் போன்ற காரணிகள் ஓரளவிற்கு நாளாந்தம் இடம்பெறும் வாகன விபத்துக்களுக்குத் தாக்கம் செலுத்த முடியும். எவ்வகையான காரணங்கள் தாக்கம் செலுத்தினாலும் போக்குவரத்தைக் கையாளுவதன் மூலம் வாகன விபத்துக்களைக் குறைத்தலானது முற்றாக பொலிசுக்கு உரித்தான பணியாக தற்போது சமுதாயத்தில் மாறியுள்ளது.

எவ்வாறாயினும், ஒவ்வொரு வருடமும் அதிகளவான வாகன விபத்துக்கள் இலங்கை பொலிசில் அறிக்கையிடப்படுவதுடன், 2018 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்ட வாகன விபத்துக்கள் குறித்த தரவுகள் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளுடன் ஒப்பீட்டு ரீதியில் பின்வரும் அட்டவணை மூலம் முன்வைக்கப்பட்டுள்ளன.

அட்டவணை இலக்கம் 19 **2016 – 2018 வாகன விபத்துக்கள் அட்டவணை**

| வருடம் | ஆபத்தான விபத்துக்கள் | பாரிய விபத்துக்கள் | சிறு விபத்துக்கள் | இழப்பு விபத்துக்கள் | மொத்த விபத்துக்கள் | வாகனங்களின் எண்ணிக்கை | 1000 வாகனங்களுக்கு விபத்துக்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|
| 2016 | 2837 | 8932 | 14050 | 13380 | 39199 | 6795469 | 5.8 |
| 2017 | 2962 | 8666 | 13102 | 12866 | 37596 | 7247122 | 5.2 |
| 2018 | 2953 | 8475 | 12264 | 12064 | 35756 | 7727921 | 4.7 |

மூலம் - பொலிஸ் புள்ளிவிபரவியல் அலகு

### ❖ தரவுப் பகுப்பாய்வு

மேற்குறித்த அட்டவணை இலக்கம் 19 ற்கு அமைய 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், (2017 ஆம் ஆண்டில் ஆபத்தான விபத்துக்களைத் தவிர்த்து) 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் ஒவ்வொரு வகையிலுமான வாகன விபத்தக்களில் வீழ்ச்சியைக் காணலாம். 2016 ஆம் ஆம் ஆண்டில் ஆபத்தான விபத்துக்கள் 2837 அறிக்கையிடப்பட்டதுடன், 2017 ஆம் ஆண்டில் அது 2962 வரை 4% ஆல் அதிகரித்துள்ளது. 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியில் 2018 ஆம் ஆண்டில் ஆபத்தான வாகன விபத்துக்கள் 2953 வரை 9 வாகன விபத்துக்களால் குறைந்துள்ளமையை இனங் காணலாம்.

படுகாயம் ஏற்படுத்தும் வாகன விபத்துக்களுடன் ஒப்பீட்டு ரீதியில் நோக்குகையில், 2016 ஆம் ஆண்டில் அத்தகைய வாகன விபத்துக்கள் 8932 அறிக்கையிடப்பட்டுள்ளன. அதனுடன் ஒப்பீட்டு ரீதியில் 2017 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்ட படுகாயம் ஏற்படுத்தும் வாகன விபத்துக்களின் எண்ணிக்கை 8666 ஆக இருந்ததுடன், சதவீதமாக 2016 ஆம் ஆண்டை விட 3% வீழ்ச்சியாகும். 2018 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்ட படுகாயம் ஏற்படுத்தும் வாகன விபத்துக்களின் எண்ணிக்கை 8475 ஆக இருந்ததுடன், சதவீதமாக அது 2016 ஆம் ஆண்டை விட 2% வீழ்ச்சியாகக் கொள்ளலாம். சிறு காயங்களை ஏற்படுத்தும் வாகன விபத்துக்கள் இடம்பெற்றுள்ள முறையை ஒப்பிடுகையில், 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியில் 2017 மற்றும் 2018 ஆகிய வருடங்களில் வீழ்ச்சியைக் காட்டுகிறது. 2018 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்ட சிறு

காயங்களை ஏற்படுத்தும் வாகன விபத்துக்களின் எண்ணிக்கை 14050 ஆக இருந்ததுடன், அதனுடன் ஒப்பிடுகையில், 2017 ஆம் ஆண்டில் 13102 வாகன விபத்துக்கள் வரை 7% ஆல் குறைவடைந்துள்ளது. 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 2018 ஆம் சிறு காயமேற்படுத்தும் வாகன விபத்துக்கள் 12264 அறிக்கையிடப்பட்டுள்ளதுடன், அது 6% வீழ்ச்சியாகும்.

ஒட்டுமொத்த வாகன விபத்துக்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சியையும் 2017 மற்றும் 2018 ஆகிய வருடங்களில் இனங் காணலாம். அதாவது, 2016 ஆம் ஆண்டில் 39199 ஆக இருந்த ஒட்டுமொத்த வாகன விபத்துக்களின் எண்ணிக்கை அதனுடன் ஒப்பீட்டு ரீதியில் 2017 ஆம் ஆண்டில் 37596 வரை 4% ஆல் குறைவடைந்துள்ளது.

2018 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்ட வாகன விபத்தக்களின் எண்ணிக்கை 35756 ஆக இருந்ததுடன், 2017 ஆம் அண்டுடன் ஒப்பீட்டு ரீதியில் அது 5% வீழ்ச்சியாகும்.

2016 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியில் வாகன விபத்துக்களில் ஓரளவு வீழ்ச்சியை கடந்த 2017 மற்றும் 2018 ஆகிய இரு வருடங்களில் காணக் கூடியதாக இருந்தாலும், இந் நாட்டில் வாகனங்கள் எண்ணிக்கை ரீதியில் உயர்வடைதலானது 2018 ஆம் ஆண்டிலும் வழமையானவாறு இடம்பெற்றுள்ள முறையை அட்டவணை மூலம் இனங் காணலாம். 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியில் 2018 ஆம் ஆண்டில் வாகனங்களின் எண்ணிக்கை 7% ஆல் அதிகரித்துள்ளதுடன், அதற்கமைய 1000 வாகனங்களுக்கு வாகன விபத்துக்களின் எண்ணிக்கை 2017 ஆம் ஆண்டில் காணப்பட்ட 5.2 இலிருந்து 2018 ஆம் அண்டில் 4.7 வரை வீழ்ச்சியடைந்துள்ளது.

### 8.1 வயது தொகுதிக்கு அமைய வாகன விபத்து மரணங்கள்

வாகன விபத்துக்களினால் இடம்பெறும் மரணங்கள் குறித்து நோக்குகையில், அவ்வாறு மரணித்த நபரின் அல்லது நபர்களின் வயது மட்டங்கள் குறித்து ஆராய்தல் முக்கியமாகும் ஏனெனில், வயது மட்டங்கள் குறித்த ஆய்வு மூலம் அந் நபரின் மரணமானது குடும்பத்தைப் போன்றே நாட்டையும் பாதிக்கும் முறையை இனங் காண முடிவதாகும். அட்டவணை இலக்கம் 20 மூலம் 2017 மற்றும் 2017 ஆகிய வருடங்களின் வாகன விபத்து மரணங்கள் வயது தொகுதிக்கு அமைய தரப்பட்டுள்ளன.

அட்டவணை இலக்கம் 20

**2017 – 2018 மரணித்த நபர்களின் வயதுக்கு அமைய காட்டப்படும் அட்டவணை**

| வயதுத் தொகுதி (வருடங்கள்) | 2017 | 2018 |
|---|---|---|
| 5 ற்குக் குறைந்த | 37 | 43 |
| 6- 10 ற்கு இடைப்பட்ட | 35 | 25 |
| 11 - 15 ற்கு இடைப்பட்ட | 29 | 41 |
| 16 - 20 ற்கு இடைப்பட்ட | 212 | 186 |
| 21 - 25 ற்கு இடைப்பட்ட | 315 | 290 |
| 26 - 30 ற்கு இடைப்பட்ட | 286 | 244 |
| 31 - 35 ற்கு இடைப்பட்ட | 258 | 215 |
| 36 - 40 ற்கு இடைப்பட்ட | 198 | 222 |
| 41 - 45 ற்கு இடைப்பட்ட | 244 | 192 |
| 46 - 50 ற்கு இடைப்பட்ட | 222 | 221 |
| 51 - 55 ற்கு இடைப்பட்ட | 260 | 254 |
| 56 - 60 ற்கு இடைப்பட்ட | 248 | 256 |
| 61 - 65 ற்கு இடைப்பட்ட | 223 | 288 |
| 66 - 70 ற்கு இடைப்பட்ட | 189 | 236 |
| 71 ற்கு மேற்பட்ட | 355 | 368 |
| **மொத்தம்** | **3111** | **3081** |

மூலம் - பொலிஸ் புள்ளிவிபரவியல் அலகு

❖ **தரவுப் பகுப்பாய்வு**

அட்டவணை இலக்கம் 20 ற்கு அமைய வாகன விபத்துக்கள் காரணமாக மரணிக்கும் நபர்களின் எண்ணிக்கையானது 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 2018 ஆம் ஆண்டில் குறைவடைந்துள்ளமையைக் காணலாம். 2017 ஆம் ஆண்டில் 3111 ஆக இருந்த வாகன விபத்து மரண எண்ணிக்கையானது 2018 ஆம் ஆண்டில் 3081 வரை 0 ஆல் வீழ்ச்சியடைந்துள்ளது.

அட்டவணை இலக்கம் 20 மூலம் முன்வைக்கப்பட்டுள்ள தரவுகளுக்கு அமைய மரணித்தவர்களின் வயது தொகுதி குறித்து அவதானம் செலுத்துகையில், பெரும்பாலான வயது தொகுதிகளின் வாகன விபத்து காரணமாக ஏற்பட்டுள்ள மரணங்கள் 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியில் 2018 ஆம் ஆண்டில் குறைவடைந்துள்ளமையே புலனாகிறது. குறிப்பாக நாட்டின் உழைப்போர் வயது தொகுதி குறித்து அவதானம் செலுத்துகையில், அவ் வீழ்ச்சியை முக்கியமான ஒரு விடயமாகக் குறிப்பிடலாம்.

அதற்கமைய 2017 ஆம் ஆண்டில் 21 – 25 வயதிற்கு இடைப்பட்டவர்களின் வாகன விபத்து மரணங்கள் 315 இடம்பெற்றுள்ளதுடன், 2018 ஆம் ஆண்டில் 290 வரை 8% ஆலும், 26 – 30 வயதிற்கு இடைப்பட்டவர்கள் மரணிக்கும் எண்ணிக்கை 2017 ஆம் ஆண்டில் 286 இலிருந்து 2018 ஆம் ஆண்டில் 244 வரை 15% ஆலும், 31 – 35 வயதிற்கு இடைப்பட்டவர்கள் மரணிக்கும் எண்ணிக்கை 17% ஆலும், 41 – 45 வயதிற்கு இடைப்பட்டவர்கள் மரணிக்கும் எண்ணிக்கை 2 ஆலும், 51 – 55 வயதிற்கு இடைப்பட்டவர்கள் மரணிக்கும் எண்ணிக்கை 2% ஆலும் 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியில் 2018 ஆம் ஆண்டில் குறைவடைந்துள்ளன.

அட்டவணையின் தரவுகளுக்கு அமைய 55 வயதிற்கு மேற்பட்டவர்களின் வாகன விபத்து மரணங்கள் அதிகரித்துள்ளமையை 2018 ஆம் ஆண்டில் இனங் காண முடிகின்றமையே மற்றுமொரு விசேட அம்சமாகும். அதற்கமைய 56 – 60 வயதிற்கிடைப்பட்டவர்களின் வாகன விபத்து மரணங்கள் 2017 ஆம் ஆண்டில் 248 இலிருந்து 2018 ஆம் ஆண்டில் 256 வரை 3% ஆலும், 61 – 65 வயதிற்கிடைப்பட்டவர்களின் வாகன விபத்து மரணங்கள் 29% ஆலும், 66 – 70 வயதிற்கிடைப்பட்டவர்களின் வாகன விபத்து மரணங்கள் 25% ஆலும், 70 வயதிற்கு மேற்பட்டவர்களின் வாகன விபத்து மரணங்கள் 4% ஆலும் 2017 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியில் 2018 ஆம் ஆண்டில் அதிகரித்துள்ளன.

## 8.2. வயது தொகுதிக்கு அமைய வாகன விபத்துக் காயங்கள்

வாகன விபத்து ஒன்றின் போது காயமடையும் நபர்களை வயது தொகுதிக்கு அமைய வகைப்படுத்துவதன் மூலம் வாகன விபத்தினால் குறித்த நபருக்கும் குடும்பத்திற்கும் மற்றும் சமுதாயத்திற்கும் ஏற்படுத்தப்படும் பாதிப்பை அறிந்து கொள்ளலாம். கடந்த 2017 மற்றும் 2018 ஆகிய வருடங்களில் அறிக்கையிடப்பட்ட வாகன விபத்துக்கள் காரணமாக காயமடைந்தவர்கள் குறித்த தரவுகள் வயது தொகுதிக்கு அமைய பின்வரும் அட்டவணை இலக்கம் 21 மூலம் தரப்பட்டுள்ளன.

அட்டவணை இலக்கம் 21 **2017 – 2018 காயமடைந்தவர்களின் வயது தொகுதிக்கு அமைய காட்டும் அட்டவணை**

| வயதுத் தொகுதி (வருடங்கள்) | 2017 | 2018 |
|---|---|---|
| 5 ற்குக் குறைந்த | 37 | 43 |
| 6- 10 ற்கு இடைப்பட்ட | 35 | 25 |
| 11 - 15 ற்கு இடைப்பட்ட | 29 | 41 |
| 16 - 20 ற்கு இடைப்பட்ட | 212 | 186 |
| 21 - 25 ற்கு இடைப்பட்ட | 315 | 290 |
| 26 - 30 ற்கு இடைப்பட்ட | 286 | 244 |

| | | |
|---|---|---|
| 31 - 35 ற்கு இடைப்பட்ட | 258 | 215 |
| 36 - 40 ற்கு இடைப்பட்ட | 198 | 222 |
| 41 - 45 ற்கு இடைப்பட்ட | 244 | 192 |
| 46 - 50 ற்கு இடைப்பட்ட | 222 | 221 |
| 51 - 55 ற்கு இடைப்பட்ட | 260 | 254 |
| 56 - 60 ற்கு இடைப்பட்ட | 248 | 256 |
| 61 - 65 ற்கு இடைப்பட்ட | 223 | 288 |
| 66 - 70 ற்கு இடைப்பட்ட | 189 | 236 |
| 71 ற்கு மேற்பட்ட | 355 | 368 |
| **மொத்தம்** | **3111** | **3081** |

மூலம் - பொலிஸ் புள்ளிவிபரவியல் அலகு

❖ **தரவுப் பகுப்பாய்வு**

வாகன விபத்து காரணமாக காயமடைந்தவர்களின் எண்ணிக்கை 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியில் 2018 ஆம் ஆண்டில் 5% ஆல் குறைவடைந்துள்ளமை அட்டவணை இலக்கம் 21 மூலம் புலனாகிறது. 2017 ஆம் ஆண்டில் வாகன விபத்துக்கள் காரணமாக 30924 பேர் காயமடைந்துள்ளதுடன், 2018 ஆம் ஆண்டில் அவ் எண்ணிக்கை 29384 ஆக 5% வீழ்ச்சியைக் காட்டுகிறது.

வாகன விபத்தினால் காயமடைந்தமை குறித்து நோக்குகையில், சில வயது தொகுதிகளில் வாகன விபத்தினால் காயமடையும் எண்ணிக்கையில் வீழ்ச்சியை 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியில் காணலாம். அதற்கமைய 21 – 25 வயதிற்கிடைப்பட்டவர்களின் வாகன விபத்தினால் காயமடையும் எண்ணிக்கை 2017 ஆம் ஆண்டில் 4045 இலிருந்து 2018 ஆம் ஆண்டில் 3865 வரை 4% ஆலும், 26 – 30 வயதிற்கிடைப்பட்டவர்களின் வாகன விபத்தினால் காயமடையும் எண்ணிக்கை 13% ஆலும், 31 – 35 வயதிற்கிடைப்பட்டவர்களின் வாகன விபத்தினால் காயமடையும் எண்ணிக்கை 5% ஆலும் குறைவடைந்துள்ளதோடு, 36 – 40 வயதிற்கிடைப்பட்டவர்களின் வாகன விபத்தினால் காயமடையும் எண்ணிக்கை 8% ஆலும், 41 – 45 வயதிற்கிடைப்பட்டவர்களின் வாகன விபத்தினால் காயமடையும் எண்ணிக்கை 6% ஆலும், 46 – 50 வயதிற்கிடைப்பட்டவர்களின் வாகன விபத்தினால் காயமடையும் எண்ணிக்கை 6% ஆலும், 51 – 55 வயதிற்கிடைப்பட்டவர்களின் வாகன விபத்தினால் காயமடையும் எண்ணிக்கை 2% ஆலும் 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியில் 2018 ஆம் ஆண்டில் வீழ்ச்சியடைந்துள்ளமையைக் காணலாம்.

அட்டவணைக்கு அமைய 55 வயதிற்கு மேற்பட்ட தொகுதிகளைச் சார்ந்தவர்கள் வாகன விபத்துக்களால் காயமடையும் எண்ணிக்கை 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியில் 2018 ஆம் ஆண்டில் அதிகரித்துள்ளமையைக் காணலாம். அதற்கமைய 56 – 60 இடைப்பட்ட மற்றும் 61 – 65 வயதிற்கு இடைப்பட்டவர்கள் வாகன விபத்துக்கள் காரணமாக காயமடையும் எண்ணிக்கை 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியில் 2% ஆல் 2018 ஆம் ஆண்டில் அதிகரித்துள்ளதோடு, 66 – 70 ற்கு இடைப்பட்ட வயது தொகுதியிலான வாகன விபத்தினால் காயமடையும் எண்ணிக்கை 7% ஆல் மற்றும் 70 வயதிற்கு மேற்பட்டவர்கள் வாகன விபத்தினால் காயமடையும் எண்ணிக்கை 2% ஆல் 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியில் 2% ஆல் 2018 ஆம் ஆண்டில் அதிகரித்துள்ளது.

## 8.3. அதிவேக வீதிகளுக்கு அண்மையில் இடம்பெறும் வாகன விபத்துக்கள்

அதிவேக வீதிகளுக்கு அண்மையிலும் வருடாந்தம் குறிப்பிடத்தக்க அளவு வாகன விபத்துக்கள் இடம்பெறுகின்றமை அறிக்கைகள் மூலம் தெளிவாகிறது. கடந்த 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற அதிவேக வீதிகளுக்கு அண்மையிலான வாகன விபத்துக்கள் குறித்த புள்ளிவிபரத் தரவுகள் அட்டவணை இலக்கம் 22 மூலம் ஒப்பீட்டு ரீதியில் தரப்பட்டுள்ளன.

அட்டவணை இலக்கம் 22 **2017 – 2018 அதிவேக வீதிகளுக்கு அண்மையில் இடம்பெறும் வாகன விபத்துக்கள் அட்டவணை**

| தொடரிலக்கம் | விபத்தின் வகை | வருடம் | |
|---|---|---|---|
| | | **2017** | **2018** |
| 1 | அபாயகரமான விபத்துக்கள் | 6 | 8 |
| 2 | படுகாயமேற்படுத்தும் விபத்துக்கள் | 7 | 8 |
| 3 | சிறுகாயமேற்படுத்தும் விபத்துக்கள் | 79 | 93 |
| 4 | சொத்துக்களுக்கு நட்டமேற்படுத்தும் விபத்துக்கள் | 459 | 488 |
| **மொத்தம்** | | **551** | **597** |

மூலம் - பொலிஸ் புள்ளிவிபரவியல் அலகு

❖ **தரவுப் பகுப்பாய்வு**

அட்டவணை இலக்கம் 22 மூலம் முன்வைக்கப்பட்டுள்ள அதிவேக வீதிகளுக்கு அண்மையில் இடம்பெறும் வாகன விபத்துக்கள் குறித்த தரவுகளுக்கு அமைய 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியில் 2018 ஆம் ஆண்டில் அதிவேக வீதியில் வாகன விபத்துக்களில் அதிகரிப்பைக் காணலாம்.

அதற்கமைய 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியில் 2018 ஆம் ஆண்டில் அதிவேக வீதிகளுக்கு அண்மையிலான அபாயகரமான வாகன விபத்துக்கள் 33% ஆலும், படுகாயமேற்படுத்தும் வாகன விபத்துக்கள் 14% ஆலும், சிறு காயங்களை ஏற்படுத்தும் வாகன விபத்துக்கள் 18% ஆலும், நட்டத்தை ஏற்படுத்தும் வாகன விபத்துக்கள் 6% ஆலும் அதிகரித்துள்ளன. 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியில் 2018 ஆம் ஆண்டில் ஒட்டுமொத்த அதிவேக வீதிகளுக்கு அண்மையில் இடம்பெறும் வாகன விபத்துக்களில் 8% அதிகரிப்பு காணப்படுகின்றமையை மேற்குறித்த அட்டவணை மூலம் அறியலாம்.

## 8.4. வாகன விபத்துக்களைக் குறைப்பதற்கான இலங்கை பொலிசின் செயற்பாடுகள்

வாகன விபத்துக்களைத் தடுப்பதற்கு குற்றவாளிகளை கைது செய்தல் மற்றும் அவர்களுக்கு வழக்குத் தொடரல் மூலம் தண்டனை பெற்றுக் கொடுத்தலை இலங்கை பொலிஸ் தொடர்ந்தும் மேற்கொண்டாலும், பல்வேறு காரணங்களினால் வாகன விபத்துக்களை இன்று சமூக நெருக்கடியாகக் காண நேரிட்டுள்ளது.

அதற்கமைய மேற்குறித்தவாறு சட்டத்தை நடைமுறைப்படுத்தப்படுவதற்கு மேலதிகமாக இலங்கை பொலிசினால் பல்வேறு சமூகக் குழுக்களை அறிவுறுத்துவதன் பொருட்டு விரிவுரைகள் மற்றும் செயலமர்வுகள் நடாத்தப்படுகின்றன. 2018 ஆம் ஆண்டில் நாடு முழுவதும் அவ்வாறான நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டதுடன், அந் நிகழ்ச்சித் திட்டங்கள் குறித்து பின்வரும் அட்டவணை இலக்கம் 23 மூலம் விடயங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

அட்டவணை இலக்கம் 23

**2018 ஆம் ஆண்டிற்கான பாடநெறிகள் மற்றும் விழிப்புணர்வூட்டல் தொடர்பா அட்டவணை**

| தொடரில க்கம் | செயற்பாடு | நடாத்தப்பட்ட எண்ணிக்கை | பங்குபற்றியோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | பாடசாலை விரிவுரைகள் | 18093 | 2091036 |
| 2 | சாரதிகளுக்கான விரிவுரைகள் | 122462 | 761948 |
| 3 | பாதசாரிகளுக்கு விழிப்புணர்வூட்டல் | 13740 | 199120 |
| 4 | வேறு விரிவுரைகள் (அரச உத்தியோகத்தர்கள் / முப்படை / பொலிஸ் உத்தியோகத்தர்கள் / தனியார் துறையின் ஊழியர்களுக்கு) | 541 | 13972 |
| 5 | போக்குவரத்துக் கண்காட்சிகள் மற்றும் காட்சிக் கூடங்கள்) | 63 | 135500 |
| 6 | பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான பாடநெறிகள் | 8 | 445 |
| **மொத்தம்** | | **154907** | **3202021** |

மூலம் - பொலிஸ் புள்ளிவிபரவியல் அலகு

### ❖ விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சிகளின் விளைத்திறன்

போக்குவரத்துக் கட்டுப்பாடு மற்றும் வீதிப் பாதுகாப்பிற்கு இலங்கை பொலிஸ் பெருமுயற்சி எடுத்து வருவதோடு, அதற்கு இணையாக நாடு முழுவதும் மிகப் பரந்த முறையில் வாகன விபத்துக்களைத் தடுப்பது குறித்து சமூகத்தின் அனைத்துத் தரப்பினரும் உள்ளடங்கும் வகையில் விழிப்புணர்வூட்டுவதற்கு பல்வேறு செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. இச் செயற்பாடுகளுள் விரிவுரைகள், கண்காட்சிகள் மற்றும் செயலமர்வுகள் உள்ளடங்கும். இதன் பொருட்டு அர்ப்பணிக்கப்படும் மனித உழைப்பு மணித்தியாலம் மற்றும் ஏனைய வளங்களின் பயன்பாட்டை எடுத்துக் கொண்டால், அதன் மூலம் வெற்றிகரமான முடிவுகள் கிடைக்கப் பெற்றுள்ளனவா என்பது குறித்து ஆராய்வது முக்கியமாகும்.

அட்டவணை இலக்கம் 23 மூலம் முன்வைக்கப்பட்டுள்ள புள்ளிவிபரவியற் தரவுகள் படி 2018 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்டுள்ள ஒட்டுமொத்த விரிவுரைகள், விழிப்புணர்வூட்டல்கள், கண்காட்சிகள் மற்றும் செயலமர்வுகளின் எண்ணிக்கை 154907 ஆகும். அதன் பொருட்டு வருடாந்தம் பங்குபற்றுவோர் எண்ணிக்கை 03 மில்லியனுக்கும் அதிகமாகும். பொலிசினால் வழமை போல் இவ் விழிப்புணர்வூட்டல்கள் நீண்ட காலமாக நடாத்தப்பட்டு வந்தாலும், வாகன விபத்துக்களில் குறிப்பிடத்தக்க அளவிலான வீழ்ச்சியைக் கடந்த காலப் பகுதிகளில் காண முடியாதுள்ளது. உதாரணமாக, 2018 ஆம் ஆண்டிற்கு முன்னர் மூன்று வருடங்களில் அபாயகரமான வாகன விபத்துக்களின் அதிகரிப்பைக் கவனத்திற் கொண்டால், 2015 ஆம் ஆண்டில் 2590 அபாயகரமான வாகன விபத்துக்கள் அறிக்கையிடப்பட்டுள்ளதுடன், 2016 ஆம் ஆண்டில் 2824 அபாயகரமான வாகன விபத்துக்கள் வரை 9% ஆல் அதிகரித்துள்ளது. 2017 ஆம் ஆண்டில் 2933 அபாயகரமான வாகன விபத்துக்கள் அறிக்கையிடப்பட்டுள்ளதுடன், அது 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியில் 4% அதிகரிப்பாகும்.

2018 ஆம் ஆண்டின் தரவுகளுக்கு அமைய இவ் விழிப்புணர்வூட்டல்கள் மேற்குறித்தவாறு மிகப் பரந்த முறையில் மேற் கொள்ளப்பட்டுள்ளதுடன், அதன் பொருட்டு அதிகளாவனவர்கள் பங்குபற்றியுள்ளனர். உதாரணமாக, ஏறத்தாழ 08 இலட்ச சாரதிகள் வரை பங்குபற்றியுள்ளதுடன், விழிப்புணர்வு வழங்கப்பட்ட பாதசாரிகளின் எண்ணிக்கை ஏறத்தாழ 02 இலட்சமாகும். ஏனைய அனைத்து விழிப்புணர்வூட்டல்களுக்கும் பங்குபற்றியோர் எண்ணிக்கை 03 மில்லியனுக்கும் அதிகமாகும்.

விழிப்புணர்வூட்டல்களுடன் ஒப்பிடுகையில், 2018 ஆம் ஆண்டில் அனைத்து முறைகளிலுமான வாகன விபத்துக்களில் வீழ்ச்சியைக் காண முடிவதோடு, அதன் கீழ் அபாயகரமான வாகன விபத்துக்கள் 2017 ஆம் ஆண்டில் 2965 இலிருந்து 2018 ஆம் ஆண்டில் 2953 வரை குறைவடைந்துள்ளன. 2018 ஆம் ஆண்டில் படுகாயமேற்படுத்தும் வாகன விபத்துக்களின் வீழ்ச்சியானது சதவீதமாக 2% ஆகும். ஒட்டுமொத்த வாகன விபத்துக்கள் 2017 ஆம் ஆண்டை விட 5% ஆல் 2018 ஆம் ஆண்டில் வீழ்ச்சியடைந்துள்ளன.

❖ **கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய விடயங்கள்**

முழுமையாக நோக்குகையில், வாகன விபத்துக்களால் ஏற்படுத்தப்படும் உயிர்ச் சேதம் மற்றும் சொத்துச் சேதங்கள் குடும்பத்திற்கும் மற்றும் பொதுவில் நாட்டின் பொருளாதாரத்திற்கும் தீங்கான பாதிப்பை ஏற்படுத்தும். எனவே, இது தொடர்பில் அனைத்துத் தரப்பினரும் விசேட கவனம் செலுத்த வேண்டியது அத்தியாவசியமாகும். வாகன விபத்துக்களைக் கட்டுப்படுத்தலானது தனியே பொலிசினால் மாத்திரம் செய்யக் கூடிய ஒன்று அல்ல என்பதுடன், பெருந் தெருக்களைப் பயன்படுத்தும் அனைவருக்கும் அதன் பொறுப்பு உரித்தாகும். பொலிஸ் எவ்வளவு தான் சட்டத்தை நடைமுறைப்படுத்தினாலும், பாரிய அளவில் விழிப்புணர்வூட்டினாலும், வருடாந்தம் வாகன விபத்துக்களில் குறிப்பிடத்தக்க அளவில் வீழ்ச்சி ஏற்படாமை குறித்து ஒட்டுமொத்த சமூகத்தினதும் அவதானம் செலுத்தப்படல் வேண்டும். குற்றங்களைக் கட்டுப்படுத்துவதன் மூலம் சட்டம் மற்றும் ஒழுங்கைப் பேணுவதற்காக ஒதுக்க வேண்டிய பொலிஸ் உத்தியோகத்தரின் கடமை நேரத்தில் அதிக நேரம் வாகன விபத்தைக் கட்டுப்படுத்துவற்காக செலவிட வேண்டியுள்ளதால் பொலிசின் முக்கிய பணிக்கும் ஓரளவு பாதிப்பு ஏற்படுகிறது என்பதைக் குறிப்பிட வேண்டும்.

வாகன விபத்து அதிகரிக்கின்றமை குறித்து பொலிசை குறை கூறல் அல்லது பொலிசை சுட்டிக் காட்டல் மூலம் சமூகத்தினால் இந்தச் சிக்கலுக்குத் தீர்வு காண முடியாது என்பதுடன், அதன் பொருட்டு ஒட்டு மொத்த சமூகமும் கூட்டு வேலைத் திட்டம் ஒன்று குறித்து அதிக கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

# 09. திடீர் மரணங்கள்

இலங்கையில் வருடாந்தம் இடம்பெறும் திடீர் மரணங்கள் குறித்து அவதானம் செலுத்துகையில், குறிப்பிடத்தக்க அளவு அதிக மரணங்கள் அறிக்கையிடப்படுகின்றமையை சுட்டிக் காட்டலாம். இவ் அத்தியாயத்தின் ஊடாக 2018 ஆம் ஆண்டில் இடம்பெற்ற அத்தகைய திடீர் மரணங்கள் குறித்து 2016 மற்றும் 2017 ஆகிய வருடங்களுடன் ஒப்பீட்டு ரீதியில் விடயங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இலங்கை பொலிசிடம் அறிக்கையிடப்படும் திடீர் மரணங்களை நோய்.். இயற்கையான காரணங்கள் மற்றும் இயற்கை அல்லாத காரணங்களினால் இடம்பெறும் மரணங்களாக வகைப்படுத்தலாம். பின்வரும் அட்டவணை மூலம் 2016 – 2018 வரை மூன்று வருடங்களில் இடம்பெற்றுள்ள மரணங்கள் புள்ளிவிபரவியல் அடிப்படையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.

அட்டவணை இலக்க 24 **2016 – 2018 ஒட்டுமொத்த திடீர் மரணங்கள் அட்டவணை**

| காரணங்கள் | 2016 | 2017 | 2018 |
|---|---|---|---|
| நோய் / இயற்கைக் காரணங்கள் (இயற்கை அனர்த்தங்களும் உள்ளடங்கலாக) | 23472 | 26088 | 25856 |
| வேறு காரணங்கள் | 3336 | 3637 | 3134 |
| **மொத்தம்** | **26808** | **29725** | **28990** |

மூலம் - பொலிஸ் புள்ளிவிபரவியல் அலகு

❖ **தரவுப் பகுப்பாய்வு**

மேற்குறித்த அட்டவணைக்கு அமைய கடந்த மூன்று வருடங்களில் இடம்பெற்ற மரணங்கள் குறித்த புள்ளிவிபரவியற் தரவுகளை பகுப்பாய்வு செய்கையில், நோய்.். இயற்கையான காரணங்கள் காரணமாக இடம்பெறும் திடீர் மரணங்கள் 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியில் 2018 ஆம் ஆண்டில் ற்கு அண்மித்த வீழ்ச்சியைக் காட்டுகின்றமை புலனாகிறது. இவ் வகுதியினுள் இயற்கை அனர்த்தங்கள் காரணமாக ஏற்படும் மரணங்களும் உள்ளடங்குவதோடு, 2018 ஆம் அண்டில் இயற்கை அனர்த்தங்கள் காரணமாக ஏற்பட்ட மரணங்கள் குறைந்த அளவில் காணப்படுகின்றமையானது மேற்குறித்த 2018 ஆம் ஆண்டில் அனர்த்தங்கள் காரணமாக ஏற்பட்ட மரணங்களின் வீழ்ச்சிக்குத் தாக்கம் செலுத்தியிருக்கலாம் என்ற முடிவுக்கு வரலாம். இவ் அத்தியாயத்தின் மூலம் இயற்கை அல்லாத காரணங்களினால் இடம்பெறும் திடீர் மரணங்கள் குறித்து அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

### 9.1 இயற்கை அல்லாத காரணங்களினால் இடம்பெறும் திடீர் மரணங்கள்

இலங்கை பொலிசிடம் அறிக்கையிடப்படும் திடீர் மரணங்கள், அதற்குத் தாக்கம் செலுத்திய 22 காரணங்களின் கீழ் வகைப்படுத்தப்படுகின்றன. (ஒட்டுமொத்த வகைப்படுத்தலுடனான அட்டவணை இணைப்பு 01 இன் கீழ் காட்டப்பட்டுள்ளது.) அவற்றுள் 18 இயற்கை அல்லாத காரணங்களினால் இடம்பெறுகின்றன. அவற்றுள்ளும் பெருமளவில் இடம்பெறும் விசேட கவனத்திற்கு உள்ளாக வேண்டிய துறைகளின் திடீர் மரணங்கள் பின்வரும் அட்டவணை மூலம் வெளிக்காட்டப்பட்டுள்ளன.

அட்டவணை இலக்கம் 25 — **2016 – 2018 வரை இயற்கை அல்லாத காரணங்களினால் இடம்பெறும் மரணங்கள் தொடர்பான அட்டவணை**

| தொடரி லக்கம் | தன்மை | 2016 | | | 2017 | | | 2018 | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் |
| 1 | நீரில் மூழ்குவதால் | 177 | 700 | 877 | 150 | 577 | 727 | 133 | 634 | **767** |
| 2 | பாம்பு தீண்டி | 40 | 60 | 100 | 38 | 62 | 100 | 29 | 48 | **77** |
| 3 | வன விலங்குகளின் தாக்குதலினால் | 21 | 97 | 118 | 12 | 102 | 114 | 19 | 100 | **119** |
| 4 | கட்டிடங்களிலிருந்து கீழே விழுவதால் | 15 | 169 | 184 | 29 | 187 | 216 | 27 | 153 | **180** |
| 5 | மரங்களிலிருந்து விழுவதால் | 15 | 179 | 194 | 8 | 182 | 190 | 8 | 200 | **208** |
| 6 | மின்சாரம் தாக்கி | 18 | 117 | 135 | 16 | 117 | 133 | 15 | 98 | **113** |
| 7 | புகையிரத விபத்துக்கள் | 27 | 164 | 191 | 25 | 173 | 198 | 36 | 165 | **201** |
| 8 | தீக்கிரையாவதால் | 90 | 38 | 128 | 71 | 35 | 106 | 45 | 31 | **76** |
| **மொத்தம்** | | **403** | **1524** | **1927** | **349** | **1435** | **1784** | **312** | **1429** | **1741** |

மூலம் - பொலிஸ் புள்ளிவிபரவியல் அலகு

## ❖ தரவுப் பகுப்பாய்வு

அட்டவணைக்கு அமைய கடந்த மூன்று வருடங்களில் இயற்கை அல்லாத இக் காரணங்களினால் இடம்பெற்ற மரணங்களில் ஓரளவு வீழ்ச்சியைக் காணலாம். 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியில் 2018 ஆம் ஆண்டில் 10% ஆல் இம் மரணங்கள் குறைவடைந்துள்ளன. 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2018 ஆம் ஆண்டில் இவ்வாறான திடீர் மரணங்களின் வீழ்ச்சி சதவீதம் 2% ஆகும்.

அட்டவணைக்கு அமைய இயற்கை அல்லாத காரணங்களினால் இடம்பெற்ற திடீர் மரணங்களுள் அதிகமானவை நீரில் மூழ்கியமையால் ஏற்பட்ட மரணங்களாகும். 2016 ஆம் ஆண்டில் அவ்வாறான மரணங்கள் 877 அறிக்கையிடப்பட்டுள்ளதுடன், 2017 ஆம் ஆண்டில் அது 727 வரை 17% ஆல் குறைவடைந்துள்ளது. 2018 ஆம் ஆண்டில் மீண்டும் அம் மரணங்களின் எண்ணிக்கை 767 வரை 5% ஆல் 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியில் உயர்வடைந்துள்ளது.

அட்டவணை இலக்கம் 24 ற்கு அமைய நீரில் மூழ்கி மரணித்தவர்களுள் 83% அதாவது, 634 பேர் ஆண்களாவதோடு, மரணித்த பெண்களின் எண்ணிக்கை 133 ஆகும். 8 – 40 வயதிற்கு இடைப்பட்ட அதிகளவானோர் நீரில் மூழ்கி மரணித்துள்ளதோடு, அது நீரில் மூழ்கியமையால் ஏற்பட்ட மரணங்களின் ஒட்டுமொத்த எண்ணிக்கையில் 53% ஆகும். அனைத்து வயதினரும் குறிப்பிடத்தக்க அளவு நீரில் மூழ்கி மரணித்துள்ளதோடு, ஒரு குறிப்பிட்ட வயதினருள் அதிகளவான பெண்கள் நீரில் மூழ்கி இறந்துள்ளதோடு, 70 வயதிற்கு மேற்பட்டவர்களே அவ்வாறு அதிகளவு மரணித்துள்ளனர். அதற்கமைய 70 வயதிற்கு மேற்பட்ட பெண்கள் 33 பேர் நீரில் மூழ்கி மரணித்துள்ளனர். அது நீரில் மூழ்கியமையால் ஏற்பட்ட பெண்களின் ஒட்டுமொத்த மரணங்களுள் 25% ஆகும்.

இரண்டாவதாக அதிகளவு அறிக்கையிடப்படும் மரணங்களின் எண்ணிக்கையானது மரங்களிலிருந்து கீழே விழுந்தமையால் அல்லது மரங்களுக்கு அடியில் சிக்கியமையால் ஏற்பட்ட மரணங்களாகும். 2016 ஆம் ஆண்டில் இவ்வாறாக 194 பேர் மரணமடைந்துள்ளதுடன், 2017 ஆம் ஆண்டில் அவ் எண்ணிக்கை 190 வரை 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியில் 2% ஆல் வீழ்ச்சியடைந்துள்ளது.

2018 ஆம் ஆண்டில் மரங்களிலிருந்து கீழே விழுந்தமையால் ஏற்பட்ட மரணங்களின் எண்ணிக்கை 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியில் 208 வரை 9% ஆல் உயர்வடைந்துள்ளது.

மூன்றாவதாக அதிகளவான திடீர் மரணங்கள் புகையிரத விபத்துக்களால் நிகழ்ந்துள்ளன. அட்டவணைக்கு அமைய 2016 மற்றும் 2017 ஆகிய வருடங்களில் முறையே 191 மற்றும் 198 ஆக இருந்த புகையிரத விபத்தினால் ஏற்படும் மரணங்களின் எண்ணிக்கை 2018 ஆம் ஆண்டில் 201 வரையான சிறியதொரு அதிகரிப்பைக் காணலாம். அதன் போது புகையிரத விபத்தினால் ஏற்பட்ட ஒட்டுமொத்த மரணங்களுள் 82% ஆண்களாவதோடு, அதில் பெரும்பாலானவர்கள் 25 - 60 வயதிற்கிடைப்பட்டவர்கள் என்பது இணைப்பு 01 திடீர் மரண அட்டவணை மூலம் தெளிவாகிறது.

கட்டிட நிர்மாணங்களின் போது பேண வேண்டிய பாதுகாப்பு நியமங்கள் உரிய முறையில் இல்லாத காரணத்தால் கட்டிடங்களிலிருந்து விழுவதன் காரணமாக ஏற்படும் மரணங்களையும் குறிப்பிடத்தக்க அளவு அட்டவணைக்கு அமைய இனங் காணலாம். 2016 ஆம் ஆண்டில் இவ்வாறான மரணங்கள் 184 அறிக்கையிடப்பட்டுள்ளதுடன், 2017 ஆம் ஆண்டில் இம் மரணங்கள் 216 வரை 17% ஆல் உயர்வடைந்துள்ளன. 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியில் 2018 ஆம் ஆண்டில் கட்டிடங்களிலிருந்து விழுதல் அல்லது கட்டிடங்களுக்கு அடியில் சிக்குதல் காரணமாக ஏற்பட்ட மரணங்கள் 180 அறிக்கையிடப்பட்டுள்ளதுடன், அது 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியில் 17% வீழ்ச்சி எனக் குறிப்பிடலாம். இம் மரணங்களுள் 85% ஆண்களாவதோடு, அதிகளவான மரணங்கள் 35 – 70 வயதிற்கு இடைப்பட்டவர்களது மரணங்களாகும்.

பாதுகாப்பற்ற மின்சார பாவனையும் திடீர் மரணத்தை ஏற்படுத்தும் பிரதானமான காரணமாகும் என்பதை அட்டவணை மூலம் சுட்டிக் காட்டலாம். 2016 ஆம் ஆண்டில் பாதுகாப்பற்ற மின்சார பாவனை காரணமாக மின்சாரம் தாக்கி ஏற்பட்ட மரணங்களின் எண்ணிக்கை 135. 2017 ஆம் ஆண்டில் அம் மரணங்களின் எண்ணிக்கை 133 வரை சிறு அளவில் குறைவடைந்துள்ளதோடு, 2018 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்ட மரணங்களின் எண்ணிக்கை 113 ஆகும். அதாவது, 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியில் 15% வீழ்ச்சியாகும். மின்சாரம் தாக்கி 2018 ஆம் ஆண்டில் மரணித்தவர்களுள் 87% ஆண்களாவர்.

வன விலங்குகளின் தாக்குதலால் ஏற்படும் மரணங்களும் குறிப்பிடத்தக்க அளவு கடந்த மூன்று வருடங்களில் அறிக்கையிடப்பட்டுள்ளன. 2016 ஆம் ஆண்டில் இவ்வாறான மரணங்கள் 118 அறிக்கையிடப்பட்டுள்ளதுடன், அதனுடன் ஒப்பீட்டு ரீதியில் 2017 ஆம் ஆண்டில் வன விலங்குகளின் தாக்குதலால் ஏற்பட்ட மரணங்கள் 114 வரை 3% ஆல் குறைவடைந்துள்ளன. 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியில் 2018 ஆம் ஆண்டில் இவ்வாறான மரணங்கள் 119 அறிக்கையிடப்பட்டுள்ளதுடன், சதவீதமாக 4% அதிகரிப்பாகும்.

பாம்பு தீண்டியதால் ஏற்பட்ட மரணங்களை எடுத்துக் கொண்டால், 2016 மற்றும் 2017 ஆகிய வருடங்களில் 100 மரணங்கள் வீதம் அறிக்கையிடப்பட்டுள்ளதுடன், 2018 ஆம் ஆண்டில் அவ் எண்ணிக்கை 77 வரை 23% ஆல் குறைவடைந்துள்ளன. பாம்பு தீண்டியதால் ஏற்பட்ட மரணங்கள் குறித்த அட்டவணையின் தரவுகளுக்கு அமைய ஏனைய திடீர் மரணங்களுடன் ஒப்பீட்டு ரீதியில் பெண்கள் மற்றும் ஆண்களின் மரணங்களில் பாரிய வித்தியாசத்தைக் காண முடியாததோடு, மூன்று வருடங்களிலும் பாம்பு தீண்டியதால் மரணித்த பெண்களின் எண்ணிக்கை 107 ஆகும். ஆண்களின் எண்ணிக்கை 170 ஆகும். பாம்பு தீண்டியதால் 2018 ஆம் ஆண்டில் மரணித்தவர்களுள் 62% ஆண்களாவர்.

தீக்கு இரையாகியமையால் ஏற்பட்ட மரணங்களில் குறிப்பிடத்தக்க அளவு வீழ்ச்சியை அட்டவணையில் தரப்பட்டுள்ள மூன்று வருடங்களில் காணலாம். அதற்கமைய 2016 ஆம் ஆண்டில் தீக்கிரையாகியமையால் 128 மரணங்கள் இடம்பெற்றுள்ளதுடன், அதற்கு ஒப்பீட்டு ரீதியில் 2017 ஆம் ஆண்டில் 106 மரணங்கள் வரை 17% ஆல் குறைவடைந்துள்ளன. 2018 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்ட மரணங்களின் எண்ணிக்கை 76 ஆவதோடு, அது 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியில் 28% வீழ்ச்சி என்பதை இனங் காணலாம்.

மேலே கலந்துரையாடப்பட்ட ஏனைய மரணங்களை விட மாறுபட்டதாக தீக்கிரையாவதால் ஏற்படும் மரணங்களில் காணக் கூடிய விசேடப் பண்பு யாதெனில், மரணித்தவர்களுள் பெரும்பாலானவர்கள் பெண்களாக இருக்கின்றமையாகும். அதற்கமைய 2016 ஆம் ஆண்டில் இவ்வாறாக மரணித்தவர்களுள் 70% பெண்களாவதோடு, 2017 ஆம் ஆண்டில் பெண்களின் மரண சதவீதம் 67% ஆகும். 2018 ஆம் ஆண்டில் தீக்கிரையாகி மரணித்தவர்களுள் 59% பெண்களாவர்.

### ❖ கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய விடயங்கள்

முழுமையாக நோக்குகையில், வருடாந்தம் குறிப்பிடத்தக்க அளவினா் திடீா் மரணங்களுக்கு உள்ளாகின்றமை மேற்குறித்த தரவுகளுக்கு அமைய புலனாகிறது. அவற்றுள் இயற்கை காரணங்களால் நிகழும் மரணங்களைத் தவிர்த்து, இயற்கை அல்லாத காரணங்களாலும் குறிப்பிடத்தக்கவர்கள் வருடாந்தம் மரணமாகின்றனா் என்பது அட்டவணை இலக்கம் 23 மூலம் தெளிவாகிறது. உதாரணமாக, 2018 ஆம் ஆண்டில் இந்த முறையில் மரணித்தவர்களின எண்ணிக்கை 3134 ஆகும். பெரும்பாலான இம் மரணங்களைத் தடுக்க முடியும் என்பதே இங்கு கவனத்திற் கொள்ள வேண்டிய விடயமாகும். உதாரணமாக, அட்டவணை இலக்கம் 24 மூலம் காட்டப்பட்டுள்ள முறையில் திடீா் மரணங்களைத் தடுக்க முடியும் என்பதோடு, அதன் பொருட்டு முறையானதொரு வேலைத் திட்டம் தேவையாகவுள்ளது. அதன் பொருட்டு சமுதாயத்தின் அனைத்துத் தரப்பினரையும் அறிவுறுத்த வேண்டும் என்பதோடு, எல்லாப் பணிகளுக்கும் நவீன பாதுகாப்பு முறையொன்றை அறிமுகப்படுத்தல் வேண்டும். பாடசாலை மட்டத்திலிருந்து அரச மற்றும் தனியாா் நிறுவன மட்டம் வரை விரிவான விழிப்புணர்வூட்டல் மற்றும் பின்னூட்டலை மேற்கொள்ள வேண்டும் என்பதோடு, பொலிஸ் மற்றும் ஏனைய பாதுகாப்பு பிரிவுகளினதும் ஒத்துழைப்புடன் நடைமுறைப்படுத்தக் கூடிய வேலைத் திட்டமொன்றை இதற்காகத் துரிதமாக அரசத் துறையின் தலையீட்டில் ஆரம்பிப்பதன் மூலம் தேவையற்ற இவ் உயிர் இழப்புக்களைத் தவிர்க்க முடியும் என்பதோடு, அது நாட்டின் பொருளாதாரத்திற்கும் நன்மையாகும்.

# 10. இயற்கை அனர்த்தங்கள்

இலங்கையில் நிலத்தில், கடல் எல்லையில் மற்றும் வானில் நிகழும் இயற்கை அனர்த்தங்கள் எட்டு வகைகளாக வகுக்கப்பட்டு விபரிக்கப்பட்டுள்ளதுடன், அவை பொதுவாக நிகழ்பவை எனவும் பொதுவாக நிகழாதவை எனவும் அறியலாம். பின்வரும் அட்டவணை இலக்கம் 26 மூலம் கடந்த 03 வருடங்களின் அதாவது, 2016, 2017 மற்றும் 2018 ஆகிய வருடங்களின் இயற்கை அனர்த்தங்கள் ஒப்பீட்டு ரீதியில் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

அட்டவணை 26 **2016 – 2018 வரை இயற்கை அனர்த்தங்கள் மூலமான மரணங்கள் மற்றும் காணாமல் போதல் அட்டவணை**

| தொடரி லக்கம் | அனர்த்த வகை | 2016 | | | | | | 2017 | | | | | | 2018 | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மரணித்தோரின் எண்ணிக்கை | | காணாமல் போனோர் எண்ணிக்கை | | இடம்பெயர்ந்தோரின் எண்ணிக்கை | | மரணித்தோரின் எண்ணிக்கை | | காணாமல் போனோர் எண்ணிக்கை | | இடம்பெயர்ந்தோரின் எண்ணிக்கை | | மரணித்தோரின் எண்ணிக்கை | | காணாமல் போனோர் எண்ணிக்கை | | இடம்பெயர்ந்தோரின் எண்ணிக்கை | |
| | | ஆ | பெ | ஆ | பெ | ஆ | பெ | ஆ | பெ | ஆ | பெ | ஆ | பெ | ஆ | பெ | ஆ | பெ | ஆ | பெ |
| 1 | சுனாமி | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 2 | வெள்ளம் | 13 | 0 | 0 | 0 | 36815 | 31491 | 55 | 74 | 18 | 15 | 131888 | 128690 | 2 | 7 | 0 | 0 | 30595 | 21638 |
| 3 | நிலநடுக்கம் | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 4 | மண்சரிவு | 36 | 19 | 44 | 59 | 2591 | 2686 | 28 | 38 | 29 | 16 | 642 | 564 | 0 | 2 | 0 | 0 | 155 | 133 |
| 5 | சூறாவளி | 0 | 0 | 0 | 0 | 14 | 7 | 0 | 1 | 1 | 0 | 46 | 48 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 6 | வேறு இயற்கை அனர்த்தங்கள் | 6 | 2 | 1 | 0 | 3 | 0 | 25 | 21 | 0 | 1 | 618 | 415 | 4 | 16 | 0 | 0 | 25190 | 15795 |
| **மொத்தம்** | | **55** | **21** | **45** | **59** | **39423** | **34184** | **108** | **134** | **48** | **32** | **133194** | **129717** | **6** | **25** | **0** | **0** | **55940** | **37566** |

மூலம் - பொலிஸ் புள்ளிவிபரவியல் அலகு

## ❖ தரவுப் பகுப்பாய்வு

அட்டவணையில் உள்ளடக்கப்பட்டுள்ள தரவுப் பகுப்பாய்வின் மூலம் 2016, 2017 ஆகிய வருடங்களுடன் ஒப்பீட்டு ரீதியில் 2018 ஆம் ஆண்டில் இயற்கை அனர்த்தங்களால் ஏற்பட்ட மரணங்கள் மற்றும் காணாமல் போதல்களில் தெளிவான வீழ்ச்சி காணப்படுகின்றமை தெளிவாகிறது.

எமது நாட்டில் பெருமளவில் இடம்பெறும் இயற்கை அனர்த்தங்களான வெள்ளம் மற்றும் மண் சரிவுகளை எடுத்துக் கொண்டால், 2016 மற்றும் 2017 ஆகிய இரண்டு வருடங்களுடன் ஒப்பீட்டு ரீதியில் 2018 ஆம் ஆண்டில் தெளிவானதொரு வித்தியாசத்தைக் காணலாம். அதாவது, மண் சரிவு காரணமாக 2016 ஆம் ஆண்டில் 55 பேர் மரணமடைந்துள்ளதுடன், 2017 ஆம் ஆண்டில் மரணமடைந்தோர் எண்ணிக்கை 66 ஆகும். அது 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியில் 20% அதிகரிப்பாகும். 2018 ஆம் ஆண்டில் மண் சரிவு காரணமாக மரணித்தோர் எண்ணிக்கை 02 ஆக இருந்ததோடு, சதவீதமாக அது 96% வீழ்ச்சியாகும்.

வெள்ள விபத்து காரணமாக 2016 ஆம் ஆண்டில் 13 பேர் மரணமடைந்ததுடன், 2017 ஆம் ஆண்டில் வெள்ளம் காரணமாக மரணித்தோர் எண்ணிக்கை 129 ஆகும். 2018 ஆம் ஆண்டில் வெள்ளம் காரணமாக மரணித்தோர் எண்ணிக்கை 09 வரை குறைவடைந்துள்ளது.

வெள்ளம் காரணமாக இடம்பெயர்ந்தோரின் எண்ணிக்கையை எடுத்துக் கொண்டால், 2016 ஆம் ஆண்டில் 68306 பேர் இடம்பெயர்ந்துள்ளதுடன், 2017 ஆம் ஆண்டில் வெள்ளம் காரணமாக இடம்பெயர்ந்தோரின் எண்ணிக்கை 260578 வரை உயர்வடைந்துள்ளது. 2018 ஆம் ஆண்டில் வெள்ளம் காரணமாக இடம்பெயர்ந்தோரின் எண்ணிக்கை 52233 ஆகும்.

அட்டவணையில் வேறு இயற்கை அனர்த்தங்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ள வகுதிக்கு உரித்தாகும் கட்டிடங்கள் இடிந்து விழல், சுவர் இடிந்து விழல், மண்மேடுகள் சரிந்து விழல், அவற்றில் சிக்கி உயிரிழத்தல் குறித்து கவனம் செலுத்துகையில், 2016 ஆம் ஆண்டில் இவ்வாறான அனர்த்தங்கள் மூலம் மரணித்தவர்களின் எண்ணிக்கை 8 ஆகும். 2017 ஆம் ஆண்டில் 46 பேர் இவ்வாறான

வேறு இயற்கை அனர்த்தங்கள் மூலம் மரணித்துள்ளதோடு, 2018 ஆம் ஆண்டில் வேறு இயற்கை அனர்த்தங்கள் மூலம் மரணித்தோரின் எண்ணிக்கை 20 ஆகும்.

அட்டவணைக்கு அமைய இயற்கை அனர்த்தங்களாகக் குறிப்பிடப்பட்டுள்ள சுனாமி, புவியதிர்ச்சி மற்றும் சூறாவளி போன்றன இலங்கையில் அரிதாக ஏற்படும் நிகழ்வுகளாவதோடு, 2018 ஆம் ஆண்டில் அது தொடர்பிலான நிகழ்வுகள் இடம்பெறவில்லை.

அட்டவணையில் குறிப்பிடப்பட்டள்ளவாறு இயற்கை அனர்த்தங்கள் காரணமாக இடம்பெயர்ந்தோரின் எண்ணிக்கை குறித்து கவனம் செலுத்துகையில், 2016 ஆம் ஆண்டில் 73607 பேர் இடம்பெயர்ந்துள்ளதுடன், 2017 ஆம் ஆண்டில் இடம்பெயர்ந்தோரின் எண்ணிக்கை 262911 வரை உயர்வடைந்துள்ளது. 2018 ஆம் ஆண்டில் இயற்கை அனர்த்தங்கள் காரணமாக இடம்பெயர்ந்தோரின் எண்ணிக்கை 93506 ஆக இருந்ததுடன், 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியில் 64% வீழ்ச்சியாகும்.

2017 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியில் திடீர் விபத்துக்களால் ஏற்பட்ட பாதிப்புக்களில் 2018 ஆம் ஆண்டில் தெளிவானதொரு வீழ்ச்சியை மேற்குறித்த தரவுப் பகுப்பாய்வுக்கு அமைய இனங் காண முடியும். அதற்கான காரணங்களாக சமூக விழிப்புணர்வைப் போன்றே அனர்த்த நேரங்களில் பொலிஸ் மற்றும் ஏனைய அனர்த்த முகாமைத்துவப் பிரிவுகளின் கூட்டுச் செயற்பாட்டு விருத்தி போன்ற விடயங்களைச் சுட்டிக் காட்டலாம்.

## 11. பொது மக்களுக்கான சிறப்பு சேவைகள்

பொது மக்களின் முறைப்பாடுகளைத் தீர்ப்பதனை மிகவும் வினைத்திறன் மற்றும் பயன்மிக்க வகையில் செயற்படுத்துவதற்காக பொது மக்கள் முறைப்பாடுகளை பொறுப்பேற்கும் மற்றும் தீர்க்கும் சேவைகள் மாகாண மட்டத்தில் மற்றும் பொலீஸ் தலைமையகத்தை அடிப்படையாகக்கொண்டு நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இதனூடாக மக்களுக்கு தமது முறைப்பாடுகளை நேரடியாக பொலீஸ் மா அதிபருக்கு அல்லது வேறு உயர் பொலீஸ் அதிகாரியிடம் முன்வைத்து நிவாரணத்தைப் பெற்றுக்கொள்ள முடியும். இவ்வாறான நான்கு திட்டங்கள் கீழ் குறிப்பிடப்படும் அட்டவணையின் ஊடாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளதுடன் அதற்காக 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகள் ஒப்பீட்டு ரீதியில் முன்வைக்கப்பட்டுள்ளன.

அட்டவணை இல. 27 **2016 – 2018 பொது மக்களின் முறைப்பாடுகளை தீர்த்தல் பற்றிய அட்டவணை**

| இலூயு2:கூ8 | முறைப்பாட்டு வகை | 2016 | | | | 2017 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | பதியப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை | தீர்க்கப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை | விசாரிக்கப்பட்டுவரும் எண்ணிக்கை | தீர்க்கும் சதவீதம் | பதியப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை | தீர்க்கப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை | விசாரிக்கப்பட்டுவரும் எண்ணிக்கை | தீர்க்கும் சதவீதம் | பதியப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை | தீர்க்கப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை | விசாரிக்கப்பட்டுவரும் எண்ணிக்கை | தீர்க்கும் சதவீதம் |
| 1 | பொலீஸ் மா அதிபர் பொது மக்கள் நிவாரண தினம் | 1323 | 1288 | 35 | 97% | 1500 | 1459 | 41 | 97% | 1328 | 1047 | 281 | 79% |
| 2 | 119 | 1002283 | 997970 | 4313 | 100% | 1124828 | 1119627 | 5201 | 100% | 1123210 | 1118801 | 4409 | 100% |
| 3 | பொலீஸ் மா அதிபரிடம் கூறுங்கள் | 1844 | 1841 | 3 | 100% | 2008 | 1990 | 20 | 99% | 2046 | 1644 | 402 | 80% |
| 4 | பொது மக்கள் நிவாரண கருமபீடம் | 1785 | 1521 | 264 | 85% | 1566 | 1367 | 199 | 87% | 1171 | 598 | 573 | 51% |
| **மொத்தம்** | | **1007235** | **1002620** | **4615** | **100%** | **1129902** | **1124443** | **5461** | **100%** | **1127755** | **1122090** | **5665** | **99%** |

மூலம் - பொலீஸ் புள்ளிவிபரப் பிரிவு

### ❖ தரவுப் பகுப்பாய்வு

அட்டவணைக்கமைய பொலீஸ் மா அதிபர் பொது மக்கள் நிவாரண தினத்தன்று கிடைத்த முறைப்பாடுகளில் 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2017 ஆம் ஆண்டில் அதிகரிப்பைக் கண்டுகொள்ள முடியும். அதற்கமைய 2016 ஆம் ஆண்டில் கிடைத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை 1323 ஆக இருந்ததுடன் அது 1500 வரை 13% இனால் 2017 இல் அதிகரித்துள்ளது. 2018 ஆம் ஆண்டில் முறைப்பாடுகளின் எண்ணிக்கை 2017 ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1328 வரை 1 இனால் குறைவடைந்துள்ளது. தீர்வுகள் பெற்றுக்கொடுத்தல் தொடர்பில் நோக்கும்போது 2018 இல் பொலீஸ் மா அதிபர் பொது மக்கள் நிவாரண தினத்தன்று முன்வைக்கப்பட்ட முறைப்பாடுகளின் 79% இற்கு தீர்வுகள் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது. 2017 இல் அது 97% ஆகும்.

இந்தத் திட்டங்களில் அதிகளவு முறைப்பாடுகள் கிடைக்கும் சேவை 119 முறைப்பாட்டு சேவையாகும். அட்டவணைக்கமைய இந்த சேவைக்கு 2016 இல் கிடைக்கப்பெற்ற மொத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை 1002283 ஆகும். அது 2017 இல் 12%இனால் அதிகரித்து முறைப்பாடுகளின் எண்ணிக்கை 1124828 ஆக அதிகரித்தது. 2018 இல் 119 இற்கு கிடைத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை 1123210 ஆக இருந்ததுடன் அது 2017 ஆண்டுடன் ஒப்பிடுகையில் குறைவடைந்துள்ளது. இந்த முறைப்பாடுகளுக்குத் தீர்வுகளைப் பெற்றுக்கொடுத்தல் சதவீதத்தை எடுத்துக்கொண்டால் மூன்று வருடங்களிலும் 99% இனைத் தாண்டியுள்ளது.

'பொலீஸ் மா அதிபரிடம் கூறுங்கள்' சேவைக்காக 2016 இல் 1844 முறைப்பாடுகள் கிடைத்ததுடன் 2017 இல் 2018 வரை 9% இனால் அதிகரித்துள்ளது. 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2018 இல் கிடைத்த முறைப்பாடுகள் 2046 வரை 2% இனால் குறைவடைந்துள்ளது. இந்த

முறைப்பாடுகளைத் தீர்க்கும் சதவீதம் 2018 இல் 80% ஆக இருந்ததுடன் அது 2017 இல் அடைந்துள்ள 99% ஆன தீர்த்தல் சதவீதத்துடன் ஒப்பிடுகையில் குறைவானதாகும்.

**'பொலீஸ் மா அதிபரிடம் கூறுங்கள்'** திட்டத்திற்கு கிடைத்த முறைப்பாடுகளில் முன்னர் குறிப்பிட்டதன் பிரகாரம் அதிகரிப்பு காண்பிக்கப்படுவதுடன் பொது மக்கள் நிவாரண கரும பீடத்திற்கு கிடைத்த முறைப்பாடுகளில் குறைவைக் கண்டுகொள்ள முடியும். 2016 இல் பொது மக்கள் நிவாரண கரும பீடத்திற்கு 1785 முறைப்பாடுகள் கிடைத்ததுடன் 2017 ஆண்டாகும்போது அது 1566 வரை 12% இனால் குறைவடைந்துள்ளது. 2018 ஆம் ஆண்டாகும்போது அந்த எண்ணிக்கை 1171 வரை 25% இனால் மேலும் குறைவடைந்துள்ளது.

பொது மக்கள் நிவாரண கரும பீடத்திற்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளிலும் 2017 ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2018 ஆம் ஆண்டில் தீர்த்தல் சதவீதத்தில் குறைவைக் காண முடியும். 2016 மற்றும் 2017 ஆண்டுகளில் முறையே 86% மற்றும் 87% ஆன தீர்க்கும் சதவீதம் 2018 ஆம் ஆண்டில் 5 வரை குறைவடைந்துள்ளது.

எவ்வாறாயினும் மொத்தமாக இந்த நான்கு திட்டங்களுக்கும் கிடைக்கப் பெற்ற மொத்த முறைப்பாடுகளின் தீர்த்தல் சதவீதம் 99% இனைத் தாண்டியுள்ளது.

## 11.1 தடை நீக்கல் சேவை

இலங்கை பொலீஸினால் அமுல்படுத்தப்படும் தனிச் சிறப்பான பொது மக்கள் சேவையாக இந்த தடை நீக்கல் சேவையை அறிமுகஞ் செய்ய முடியும். இதனூடாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ரீதியாக விண்ணப்பதாரிகளுக்கு பொலீஸ் அறிக்கைகள் வழங்கப்படுவதுடன் இந்த அறிக்கைகள் மிகவும் நம்பகத் தன்மை வாய்ந்தவைகள் என உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ரீதியில் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. 2018 ஆம் ஆண்டில் தடை நீக்கல் சேவை அமுல்படுத்தப்பட்ட விதம் சம்பந்தமான தரவுகள் கீழுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அட்டவணை இல. 28 **2018 ஆம் ஆண்டில் தடை நீக்கல் அறிக்கைகள் வழங்கப்படல் பற்றிய அட்டவணை**

| | கிடைத்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை | வெளியிடப்பட்ட அறிக்கைகளின் எண்ணிக்கை | சதவீதம் | வெளியிடப்பட விருக்கும் அறிக்கைகளின் எண்ணிக்கை | ஈட்டிய வருமானம் (ரூபா) |
|---|---|---|---|---|---|
| உள்நாட்டு தடைநீக்கல் அறிக்கை | 39088 | 38992 | 100% | 96 | 39,132,500.00 |
| உள்நாட்டு தடைநீக்கல் அறிக்கை | 11159 | 10272 | 92% | 887 | 16,738,500.00 |
| **மொத்தம்** | **50247** | **49264** | **98%** | **983** | **55,871,000.00** |

மூலம் - பொலீஸ் தலைமையக தடை நீக்கல் பிரிவு

❖ **தரவுப் பகுப்பாய்வு**

அட்டவணைக்கமைய 2018 ஆம் ஆண்டில் முன்வைக்கப்பட்ட உள்நாட்டு விண்ணப்பங்கள் 39088 இல் 38992 விண்ணப்பங்கள் அதாவது 99% மானவைகளுக்கு தடை நீக்கல் பற்றிய அறிக்கை வழங்கப்பட்டுள்ளது. ஆம் ஆண்டில் தூதுவராலயங்கள் மற்றும் இணையத்தளத்தின் ஊடாக 11159 வெளிநாட்டு தடை நீக்கல் விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றதுடன் அதில் 10272 இற்கான அறிக்கைகள் வழங்கப்பட்டுள்ளன. அது தவிர 2017 ஆம் ஆண்டில் கிடைக்கப்பெற்ற 1683 விண்ணப்பங்களுக்கான தடை நீக்கல் அறிக்கைகள் 2018 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டுள்ளதுடன் அதற்கமைய 2018 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட மொத்த வெளிநாட்டு தடை நீக்கல் அறிக்கைகளின் எண்ணிக்கை 11955 ஆகும்.

அட்டவணைக்கமைய தடை நீக்கல் அறிக்கைகளை வழங்குவதன் ஊடாக இலங்கை பொலீஸ் 2018 ஆம் ஆண்டில் ரூபா 55 மில்லியனுக்கும் அதிகமான தொகையை உழைத்துள்ளது

# 12. சமூக பொலீஸ் சேவை

மிகவும் பயன்மிக்க பொலீஸ் சேவையொன்றைப் பெற்றுக் கொடுப்பதற்காக பிரஜைகளின் பங்களிப்பு மற்றும் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ளுதலானது இன்று உலகம் பூராவும் பயன்படுத்திக்கொள்ளப்படும் செயல்முறையொன்றாகும். இலங்கைப் பொலீஸும் மேற்கூறப்பட்ட எண்ணக்கருவை அடிப்படையாகக் கொண்டு மிகவும் வெற்றிகரமாக சமூக பொலீஸ் சேவை முறையை நடைமுறைப்படுத்தி வருகின்றது. அதன் கீழ் 2018 ஆம் ஆண்டில் பல்வேறு குழுக்களைப் பேணி நடாத்துதல், அறிவுறுத்தலைப் போன்றே பல்வேறு செயற்பாடுகள் உட்பட்ட அநேகமான நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்தியுள்ளதுடன், அதன் கீழ் பொலீஸ் நடவடிக்கைகளுக்காக பொது மக்களின் உதவியை பல்வேறுபட்ட வகையில் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. கீழ் குறிப்பிடப்படும் அட்டவணை ஊடாக 2018 ஆம் ஆண்டில் முழு நாடும் உள்ளடக்கப்படும் வகையில் சமூக பொலீஸ் சேவை நடைமுறைப்படுத்தப்பட்ட விதம் பற்றிய தகவல்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

## 12.1 பல்வேறுபட்ட குழுக்களை நடாத்துதல்

2018 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட ஆலோசனை சபைக் குழுக்கள், சமூக பொலீஸ் தாய்க் குழு, சமூக பொலீஸ் குழு மற்றும் அந்தக் குழுக்களின் பங்கேற்பு பற்றிய தகவல்கள் கீழே அட்டவணை 27, 28 மற்றும் 29 ஊடாக முன்வைக்கப்பட்டுள்ளது.

அட்டவணை இல. 29

**2018 இல் சமூக பொலீஸ் ஆலோசனை சபைக் கூட்டங்களை நடாத்தியமை பற்றிய அட்டவணை**

| பிரிவுகளின் எண்ணிக்கை | ஆலோசனை சபைகள் அமைக்கப்பட்டுள்ள பொலீஸ் நிலையங்களின் எண்ணிக்கை | நடாத்தப்பட வேண்டிய குழுக்களின் எண்ணிக்கை | நடாத்தப்பட்ட குழுக்களின் எண்ணிக்கை | பங்கேற்ற அங்கத்தவர்களின் எண்ணிக்கை | நிலையப் பொறுப்பதிகாரியின் பங்கேற்பு | மாவட்டத்திற்குப் பொறுப்பான பொலீஸ் அத்தியட்சகர்/உ.பொ.அத்தியட்சகரின் பங்கேற்பு | பிரிவுக்குப் பொறுப்பான உத்தியோகத்தரின் பங்கேற்பு |
|---|---|---|---|---|---|---|---|
| 42 | 486 | 5820 | 5358 | 41585 | 5282 | 1815 | 339 |

மூலம் : சமூக பொலீஸ் பிரிவு

அட்டவணை இல. 30

**2018 இல் சமூக பொலீஸ் தாய்க் குழுக் கூட்டங்கள் நடாத்தியமை பற்றிய அட்டவணை**

| பிரிவுகளின் எண்ணிக்கை | தாய்க் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ள பொலீஸ் நிலையங்களின் எண்ணிக்கை | நடாத்தப்பட வேண்டிய தாய்க் குழுக்களின் எண்ணிக்கை | நடாத்தப்பட்ட தாய்க் குழுக்களின் எண்ணிக்கை | பங்கேற்ற அங்கத்தவர்களின் எண்ணிக்கை | நிலையப் பொறுப்பதிகாரியின் பங்கேற்பு | மாவட்டத்திற்குப் பொறுப்பான பொலீஸ் அத்தியட்சகர்/ உ.பொ.அத்தியட்சகரின் பங்கேற்பு | பிரிவுக்குப் பொறுப்பான உத்தியோகத்தரின் பங்கேற்பு |
|---|---|---|---|---|---|---|---|
| 42 | 486 | 1944 | 2600 | 81430 | 3125 | 823 | 253 |

மூலம் : சமூக பொலீஸ் பிரிவு

அட்டவணை இல. 31

**2018 இல் சமூக பொலீஸ் குழுக் கூட்டங்கள் நடாத்தியமை பற்றிய அட்டவணை**

| பிரிவுகளின் எண்ணிக்கை | கிராம அலுவலர் பிரிவுகளின் எண்ணிக்கை | அமைக்கப்பட்டுள்ள சமூக பொலீஸ் குழுக்களின் எண்ணிக்கை | ஒரு மாதத்திற்குள் நடாத்தப்பட வேண்டிய எண்ணிக்கை | ஒரு வருடத்திற்குள் நடாத்தப்பட்ட எண்ணிக்கை | ஒரு வருடத்திற்குள் நடாத்தப்படாத எண்ணிக்கை | பங்குபற்றிய குழு அங்கத்தவர்களின் எண்ணிக்கை | பங்குபற்றிய ஏனைய நபர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|
| 42 | 14092 | 14068 | 14068 | 158435 | 10381 | 2671218 | 1509800 |

மூலம் : சமூக பொலீஸ் பிரிவு

## 12.2 பல்வேறுபட்ட அறிவுறுத்தல்கள் மற்றும் செயற்பாடுகளை மேற்கொள்ளல்

இதன் கீழ் பல்வேறுபட்ட துறைகளின் ஊடாக அறிவுறுத்தல்கள் விடுக்கப்படுவதுடன் சிறுவர் துன்புறுத்தல், போதைப் பொருட்கள் ஒழிப்பு, தொற்று நோய்களைக் கட்டுப்படுத்தல் மற்றும் பல்வேறுபட்ட தொழில் பயிற்சிப் பட்டறைகள் என்பன நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

இது தவிர நடமாடும் பொலீஸ் நிலையங்களை அமைத்தல் மற்றும் வருடாந்தம் மேற்கொள்ளப்படும் பல்வேறு கலாசார வைபவங்கள், விளையாட்டு நிகழ்ச்சித் திட்டங்கள், மத நல்லிணக்கம் பற்றிய நிகழ்ச்சித் திட்டங்கள், சிரமதானம் உட்பட சுற்றுச் சூழலை சுத்தம் செய்யும் நிகழ்ச்சித் திட்டங்கள், ஒரு நாள் பொலீஸ் நடமாடும் சேவை நிகழ்ச்சித் திட்டம் என்பன ஊடாக மக்களுக்கு பாரிய சேவையொன்று ஆற்றப்பட்டுள்ளதுடன் அது பற்றிய விபரம் கீழுள்ள அட்டவணை ஊடாக முன்வைக்கப்பட்டுள்ளது.

அட்டவணை இல. 32

**2018 இல் சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் சிறுவர் துன்புறுத்தலை தடுப்பதற்கான அறிவுறுத்தல்கள் மற்றும் செயற்பாடுகள் பற்றிய அட்டவணை**

| பிரிவுகளின் எண்ணிக்கை | பிள்ளைகளை அறிவுறுத்தல் | | | | வயது வந்தவர்களை அறிவுறுத்தல் | | | பங்குபற்றிய பொலீஸ் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை | பங்குபற்றிய வளவாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | பாடசாலைப் பிள்ளைகளுக்கான அறிவுறுத்தல்கள் மற்றும் செயற்பாடுகளின் எண்ணிக்கை | முன் பள்ளி, நன்னடத்தை இல்லம், அறநெறிப் பாடசாலைகள் போன்ற நிறுவனங்களின் பிள்ளைகளுக்கான அறிவுறுத்தல்கள் மற்றும் செயற்பாடுகள் எண்ணிக்கை | கிராம அலுவலர் பிரிவுகளில் பிள்ளைகளுக்கான அறிவுறுத்தல் மற்றும் செயற்பாடுகளின் எண்ணிக்கை | பங்குபற்றிய பிள்ளைகளின் எண்ணிக்கை | கிராம அலுவலர் பிரிவுகளில் வயது வந்தவர்களுக்கான அறிவுறுத்தல் மற்றும் செயற்பாடுகளின் எண்ணிக்கை | இனங்காணப்பட்ட குடும்பங்களின் வயதுவந்தோர்களுக்கான அறிவுறுத்தல்கள் மற்றும் செயற்பாடுகளின் எண்ணிக்கை (வயதுவந்தோர், வெளிநாடுகளுக்குச் சென்ற குடும்பங்கள், மதுபானம் மற்றும் போதைப் பொருட்களுக்கு அடிமையாகிய குடும்பங்கள்) | பங்குபற்றிய வயதுவந்தோர்களின் எண்ணிக்கை | | |
| 42 | 22964 | 10199 | 27653 | 2465423 | 130538 | 20427 | 2639474 | 192396 | 29838 |

மூலம் : சமூக பொலீஸ் பிரிவு

அட்டவணை இல. 33 **2018 இல் பொது மக்களை அறிவுறுத்தல் மற்றும் செயற்பாடுகள் பற்றிய அட்டவணை**

| இல. | நிகழ்ச்சித் திட்டம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | பொது மக்களை அறிவுறுத்தும் உரைகள் (குற்றங்கள் / சிறுவர் துன்புறுத்தல்கள் / பெண்கள் துன்புறுத்தல்கள் / வாகனங்கள் / போதைப் பொருட்கள் ஆகியன) | 157778 |
| 2 | டெங்கு உட்பட்ட தொற்றும் நோய்கள் சம்பந்தமாக அறிவுறுத்தல் | 118497 |
| 3 | பாடசாலைப் பிள்ளைகளை அறிவுறுத்தும் உரைகள் (சிறுவர் துன்புறுத்தல் / சிறுவர் துஷ்பிரயோகம் / தலைமைத்துவம் ஆகியன) | 25119 |
| 4 | பாடசாலையை விட்டுச் சென்ற பிள்ளைகளை (இலக்காகக் கொள்ளப்பட்ட குழுக்களை தொழில் பயிற்சியில் ஈடுபடுத்துவதற்காக நடாத்தப்பட்ட செயலமர்வுகள், விரிவுரைகள் ஆகியன உ-ம்:- பயிலுனர் சபை / தொழில்நுட்பக் கல்லூரி) | 4399 |
| 5 | பாடசாலை வேன்களின் சாரதிகள் / உதவியாளர்களை அறிவுறுத்தல் | 13521 |
| 6 | பஸ் வண்டிகள் / முச்சக்கர வண்டிகள் / லொரி வண்டிகள் மற்றும் ஏனைய வாகன சாரதிகள் / நடத்துனர்கள் / பயணிகள் மற்றும் வாடிக்கையாளர்களை அறிவுறுத்தல் | 31697 |
| 7 | போதைப் பொருட்கள் மற்றும் மதுபானப் பாவனையை தடுப்பதற்காக நடாத்தப்பட்ட அறிவுறுத்தல் நிகழ்ச்சிகள் | 96416 |
| 8 | ஏனைய அறிவுறுத்தல் நிகழ்ச்சிகள் | 32813 |
| | **மொத்தம்** | **480240** |
| 1 | பாடசாலை மாணவர்களுக்கிடையிலான பேச்சுப் போட்டிகள் / சித்திரப் போட்டிகள் / ஏனைய விளையாட்டுப் போட்டிகளை நடாத்துதல் | 2391 |
| 2 | பிரஜைகளின் பங்கேற்புடனான வைபவங்களை நடாத்துதல் (புத்தாண்டு வைபவங்கள் / சமய வைபவங்கள் / கிரிக்கட், வொலிபோல் போன்ற விளையாட்டுப் போட்டிகளை நடாத்துதல்) | 12673 |
| 3 | மதங்களுக்கிடையில் சகவாழ்வை ஏற்படுத்தும் நோக்கில் நடாத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் | 13746 |
| 4 | பாதைகள் / பற்றைக் காடுகள் / சன நடமாற்றமற்ற இடங்களை சுத்தம் செய்யும் சிரமதானம் (டெங்கு ஒழிப்பு / சுற்றுச்சூழலை சுத்தம் செய்தல் ஆகிய நிகழ்ச்சிகளை நடாத்துதல்) | 28279 |
| 5 | பொது மக்கள் சேவைகள் (பாதைகளை அமைத்தல் / வீடுகளை அமைத்தல் மற்றும் ஏனையவை) | 7163 |
| 6 | சமூக பொலீஸ் குழு அங்கத்தவர்களின் ஊடாக சரியான தகவல்களைப் பெற்றுக்கொள்ளல் | 14821 |
| 7 | பாடசாலைக்குச் செல்லாத பாடசாலைக்கு அனுப்புவதற்கு ஊக்குவித்தல் | 10732 |
| 8 | ஏனைய செயற்பாடுகள் | 11605 |
| | **மொத்தம்** | **101410** |
| | **முழு மொத்தம்** | **581650** |
| **பங்கேற்பு** | பொலீஸ் உத்தியோகத்தர்கள் | 357103 |
| | சமூக பொலீஸ் குழு அங்கத்தவர்கள் | 2145480 |
| | பொது மக்கள் | 5020034 |
| | **மொத்தம்** | **7522617** |

மூலம் : சமூக பொலீஸ் பிரிவு

## 12.3 பொலீஸ் நடமாடும் சேவைகளை நடாத்துதல்

2018 ஆம் அண்டு பூராவும் நடாத்தப்பட்ட நடமாடும் பொலீஸ் நிலையங்களை நடாத்துதல் மற்றும் ஒரு நாள் நடமாடும் சேவைகளை நடாத்துதல் சம்பந்தமான தகவல்கள் கீழே 33 மற்றும் 34 ஆம் இலக்க அட்டவணைகளின் ஊடாக முன்வைக்கப்பட்டுள்ளது

அட்டவணை இல. 34

**2018 இல் ஒரு நாள் பொலீஸ் நடமாடும் சேவையின் ஊடாக நடாத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் பற்றிய அட்டவணை**

| | | |
|---|---|---|
| **பிரதேச பொலீஸ் பிரிவுகளின் எண்ணிக்கை** | | **42** |
| **நடாத்தப்பட்ட நடமாடும் சேவைகளின் எண்ணிக்கை** | | **1987** |
| இல. | பதியப்பட்ட புதிய முறைப்பாடுகளின் எண்ணிக்கை | 4170 |
| 1 | விசாரிக்கப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை | 3652 |
| 2 | இணக்க சபைக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை | 1029 |
| 3 | வழங்கப்பட்ட முறைப்பாடுகள் பிரதிகளின் எண்ணிக்கை | 3901 |
| 4 | வழங்கப்பட்ட துரித முறைப்பாடுகள் பிரதிகளின் எண்ணிக்கை | 6211 |
| 5 | பிறப்பு / இறப்பு / விவாகங்களை பதிவு செய்தல் | 1920 |
| 6 | மோட்டார் வாகனங்கள் பிரிவின் ஊடாக கல்வி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல் | 1358 |
| 7 | குற்றங்கள் / நானாவித முறைப்பாடுகள் பிரிவின் ஊடாக குற்றங்களைத் தடுத்தல் சம்பந்தமான கல்வி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல் | 880 |
| | சிறுவர் மற்றும் மகளிர் பணியகத்தின் ஊடாக கல்வி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல் | 944 |
| | ஊழல் தடுப்புப் பிரிவினால் கல்வி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல் | 1308 |
| 8 | புாடசாலை மாணவர்களிடையே பேச்சுப் போட்டிகளை நடாத்துதல் | 324 |
| 9 | இளைஞர்களிடையே விளையாட்டுப் போட்டிகளை நடாத்துதல் | 692 |
| 10 | மருத்துவ கிளினிக்குகளை நடாத்துதல் | 1053 |
| | கண நோய் கிளினிக்குகளை நடாத்துததல் | 458 |
| | மலேரியா மற்றும் இரத்த சோதனை கிளினிக்குகளை நடாத்துததல் | 228 |
| | ஆயுர்வேத கிளினிக்குகளை நடாத்துததல் | 618 |
| 11 | விவசாய ஆலோசனைகள் மற்றும் மரக் கன்றுகளை விநியோகிக்கும் நிகழ்ச்சித் திட்டங்கள் | 3472 |
| 12 | வேறு சமூக சேவைகளை மேற்கொள்ளல் | 2950 |
| 13 | ஏனைய விரிவுரைகள் | 4059 |
| | **மொத்த நிகழ்ச்சித் திட்டங்கள்** | **39227** |
| 14 | பொலீஸ் உத்தியோகத்தர்கள் | 32901 |
| 15 | இராணுவ மற்றும் அரச உத்தியோகத்தர்கள் | 3176 |
| 16 | அரச துறை உத்தியோகத்தர்கள் | 38282 |
| 17 | பொது மக்கள் | 606569 |
| 18 | அதிதிகள் உட்பட்ட பொது மக்கள் | 28591 |
| **மொத்தப் பங்கேற்பு** | | **709519** |

மூலம் : சமூக பொலீஸ் பிரிவு

அட்டவணை இல. 35 **2018 இல் நடமாடும் பொலீஸ் நிலையங்களுடன் தொடர்பான செயற்பாடுகள்**

| | | |
|---|---|---|
| **பிரிவுகளின் எண்ணிக்கை** | | 42 |
| **நடமாடும் பொலீஸ் நிலையங்களில் இணைக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள்** | | **4665** |
| **நடாத்திய நிகழ்ச்சித் திட்டங்கள்** | சமய நிகழ்ச்சித் திட்டங்கள் | 3896 |
| | கலாசார நிகழ்ச்சித் திட்டங்கள் | 1763 |
| | சுகாதார நிகழ்ச்சித் திட்டங்கள | 3993 |
| | கல்வி நிகழ்ச்சித் திட்டங்கள் | 4483 |
| | விளையாட்டு நிகழ்ச்சித் திட்டங்கள் | 1624 |
| | சிரமதான நிகழ்ச்சித் திட்டங்கள | 6532 |
| | ஏனையவை | 4288 |
| கிடைத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை | | 6184 |
| வழங்கப்பட்ட முறைப்பாட்டுப் பிரதிகளின் எண்ணிக்கை | | 4162 |
| விசாரிக்கப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை | | 6351 |
| நடவடிக்கை மேற்கொண்ட அழைப்பாணைகளின் எண்ணிக்கை | | 3218 |
| நடவடிக்கை மேற்கொண்ட பிடியாணைகளின் எண்ணிக்கை | | 1088 |
| மேற்கொண்ட ஊழல் தடுப்பு சுற்றிவளைப்புக்களின் எண்ணிக்கை | | 3510 |
| ஏனையவை | | 5611 |
| மதிப்பீடு செய்யப்பட்ட நிதிசார் பெறுமதி :- **ரூபா** | | **5.23ரூ.08** |

மூலம் : சமூக பொலீஸ் பிரிவு

## 12.4 வீடுகள் அமைத்தல் மற்றும் பழுதுபார்த்தல்

வீடு என்பது மனிதனின் அடிப்படைத் தேவைகளில் ஒன்றாகும். எனவே வீடற்ற ஒருவருக்கு வீடொன்றை அமைத்துக்கொடுத்தல் ஒரு புண்ணிய கருமமாகும். இலங்கை பொலீஸினால் பொது மக்களின் ஒத்துழைப்புடன் 2018 ஆம் ஆண்டில் புதிய வீடுகளை நிர்மாணித்தல் மற்றும் வீடுகளைப் பழுதுபார்த்தல் போன்ற பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன், அதனூடாக பொது மக்களுக்கு பாரிய சேவையொன்றை வழங்க முடியுமாகியது. சகல ஆண்டுகளிலும் இலங்கை பொலீஸின் வழிகாட்டலின் கீழ் பொது மக்கள் பங்களிப்புடன் இவ்வாறான சமூக உபசரணை சேவைகள் மேற்கொள்ளப்படுவதுடன் 2018 ஆம் ஆண்டில் இந்த சேவைகள் மேற்கொள்ளப்பட்ட விதம் சம்பந்தமான தகவல்கள் கீழே 35 மற்றும் 36 ஆம் இலக்க அட்டவணைகளின் ஊடாக முன்வைக்கப்பட்டுள்ளது.

அட்டவணை இல. 36 **2018 இல் ஏழைக் குடும்பங்களுக்காக நிர்மாணிக்கப்பட்ட வீடுகள் பற்றிய அட்டவணை**

| இல. | மாகாணம் | பிரிவுகளின் எண்ணிக்கை | கட்டுவதற்கு ஆரம்பிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை | நிறைவு செய்யப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை | நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுவரும் வீடுகளின் எண்ணிக்கை | செலவு செய்யப்பட்ட மொத்த மதிப்பீட்டுத் |
|---|---|---|---|---|---|---|
| 1 | மத்திய | 5 | 5 | 1 | 4 | 3,240,000.00 |
| 2 | சப்ரகமுவ | 3 | 6 | 1 | 5 | 4,200,000.00 |
| 3 | ஊவா | 3 | 27 | 7 | 20 | 28,503,526.00 |
| 4 | தென் | 4 | 23 | 9 | 14 | 21,342,500.00 |
| 5 | கிழக்கு | 4 | 7 | 7 | 6 | 4,713,267.10 |
| 6 | வடக்கு | 6 | 15 | 5 | 10 | 5,391,701.90 |
| 7 | வட மத்திய | 2 | 12 | 4 | 8 | 8,459,080.00 |
| 8 | வடமேல் | 5 | 33 | 13 | 20 | 43,682,813.00 |
| 9 | மேல் | 10 | 11 | 6 | 5 | 5,872,450.00 |
| **மொத்தம்** | | **42** | **139** | **53** | **92** | **125,405,338.00** |

மூலம் : சமூக பொலீஸ் பிரிவு

அட்டவணை இல. 37 **2018 இல் பழுதுபார்க்கப்பட்ட ஏழைக் குடும்பங்களின் வீடுகள் பற்றிய அட்டவணை**

| இல. | மாகாணம் | பிரிவுகளின் எண்ணிக்கை | பழுதுபார்ப்பு ஆரம்பிக்கப்பட்டுள் ள வீடுகளின் எண்ணிக்கை | பழுதுபார்ப்பு முடிவுறுத்தப்பட்டு ள்ள வீடுகளின் எண்ணிக்கை | பழுதுபார்ப்பு மேற்கொள்ளப் பட்டு வரும் வீடுகளின் எண்ணிக்கை | செலவு செய்யப்பட்ட மொத்த மதிப்பீட்டுத் தொகை (ரூ.) |
|---|---|---|---|---|---|---|
| 1 | மத்திய | 5 | 4 | 4 | 0 | 133,200.00 |
| 2 | சப்ரகமுவ | 3 | 6 | 1 | 5 | 10,245,400.00 |
| 3 | ஊவா | 3 | 3 | 2 | 1 | 1,648,487.75 |
| 4 | தென் | 4 | 2 | 2 | 0 | 250,000.00 |
| 5 | கிழக்கு | 4 | 3 | 2 | 1 | 984,500.00 |
| 6 | வடக்கு | 6 | 0 | 0 | 0 | - |
| 7 | வட மத்திய | 2 | 2 | 2 | 0 | 262,500.00 |
| 8 | வடமேல் | 5 | 1 | 1 | 0 | 3,809,874.00 |
| 9 | மேல் | 10 | 12 | 10 | 2 | 5,278,750.00 |
| **மொத்தம்** | | **42** | **33** | **24** | **9** | **22,612,711.75** |

மூலம் : சமூக பொலீஸ் பிரிவு

### ❖ தரவுப் பகுப்பாய்வின் ஊடாக சமூக பொலீஸ் செயற்பாட்டின் பயனை அளவிடல்

இலங்கை பொலீஸ், பிரஜைகளின் பங்கேற்புடன் 2018 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்திய சமூக பொலீஸ் நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் அறிவுறுத்தல் விடுத்தல், குழுக்களை நடாத்துதல் போன்ற விடயங்களை அதிகளவில் மேற்கொண்டுள்ளதனை மேற்குறிப்பிடப்பட்ட அட்டவணையின் ஊடாக கண்டுகொள்ள முடியும். பொழிப்பை நோக்கும்போது 2018 இல் 166393 பல்வேறுபட்ட குழுக்கள் நடாத்தப்பட்டுள்ளதுடன் அந்தக் குழுக்களில் பங்கேற்ற நபர்களின் எண்ணிக்கை 2794233 ஆகும்.

2018 ஆம் ஆண்டில் பிள்ளைகளை அறிவுறுத்தும் நடவடிக்கைகளை நோக்கும்போது குற்றங்கள், சிறுவர் துன்புறுத்தல்கள், சிறுவர் துஷ்பிரயோகம், போதைப்பொருள் குற்றங்கள் போன்ற விரிவான விடயத் துறைகள் உள்ளடக்கப்படும் வகையில் பிள்ளைகளுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதுடன் அந்த அறிவுறுத்தல் நிகழ்ச்சித் திட்டங்களில் பங்கேற்ற பிள்ளைகளின் எண்ணிக்கை 2465423 ஆகும்.

இது தவிர பொலீஸ் நடமாடும் சேவை நிகழ்ச்சித் திட்டங்களின் ஊடாக பல்வேறு சமூக உபசரணை நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதுடன் அதில் பங்குபற்றிய நபர்களின் எண்ணிக்கை 709519 ஆகும்.

சமூக பொலீஸ் செயற்பாட்டிற்காக சகல ஆண்டுகளிலும் இலங்கை பொலீஸ் அதிக எண்ணிக்கையிலான உத்தியோகத்தர்களின் சேவையை வழங்கி வருகின்றது. 14092 கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடக்கப்படும் வகையில் 2018 ஆம் ஆண்டில் 14068 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த அனைத்துக் குழுக்களுக்கும் பொறுப்பாக ஒரு பொலீஸ் உத்தியோகத்தர் அலுவல் மேற்கொள்வதுடன் அவர் சமூக பொலீஸ் செயற்பாட்டை கிராம அலுவலர் பிரிவுடன் ஒருங்கிணைப்பார்.

அதிக எண்ணிக்கையிலான பிரஜைகளின் பங்கேற்பு, அதிகளவிலான பொலீஸ் உத்தியோகத்தர்களின் பங்கேற்பு மற்றும் அதிக எண்ணிக்கையிலான அறிவுறுத்தல் நிகழ்ச்சித் திட்டங்கள் ஒரு வருடத்தினுள் மேற்கொள்ளப்படுவதுடன் அந்த செயற்பாட்டின் பயனை அளவிடுவதற்கான செயற்பாட்டை தயாரித்தல் விசேடமாக கவனத்திற்கொள்ளப்பட வேண்டிய விடயமாகும்.

2018 ஆம் ஆண்டில் பலமான குற்றங்கள், பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான பலமான குற்றங்கள், சிறு குற்றங்கள், நானாவித முறைப்பாடுகள், போதைப் பொருள் குற்றங்கள் மற்றும் மதுபானம் தொடர்பான குற்றங்கள் என்பவற்றினை அளவுகோலாகக்கொண்டு அதனூடாக சமூக பொலீஸ் செயற்பாட்டை ஓரளவு அளவிட முடியுமாக இருக்கும்.

2018 ஆம் ஆண்டில் அறிக்கைப்படுத்தப்பட்ட பலமான குற்றங்களின் எண்ணிக்கையை 2017 ஆண்டுடன் ஒப்பிடுகையில் சுமார் இனால் அதிகரித்துள்ளபோதிலும் கடந்த சில வருடங்களை ஆராயும்போது ஒப்பீட்டு ரீதியில் பலமான குற்றங்களில் வீழ்ச்சியைக் காண முடியும்.

எவ்வாறாயினும் பிள்ளைகளுக்கு எதிரான பலமான குற்றங்கள் 15% இனால் 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2018 ஆம் ஆண்டில் அதிகரித்துள்ளதுடன் பிள்ளைகளுக்கு எதிரான சிறிய குற்றங்களிலும் அதிகரிப்பைக் காண முடியுமாக இருக்கின்றது. பெண்களுக்கு எதிரான பலமான குற்றங்கள் 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 4%இனால் குறைவடைந்துள்ளதனை காண முடியுமாக இருப்பதுடன் பெண்களுக்கு எதிரான சிறிய குற்றங்களிலும் குறைவைக் காண முடியும்.

நானாவித முறைப்பாடுகளை எடுத்துக்கொண்டால் 2017 ஆண்டைப் பார்க்கிலும் குறைவைக் காண முடியுமாக இருப்பதுடன் குடும்பப் பிரச்சினைகள் 4% இனாலும் குடும்பப் பிரச்சினைகள் 7% இனாலும் குறைவடைந்துள்ளது. அத்துடன் பெற்றோர்களைத் துன்புறுத்தல் மற்றும் கவனிக்காதிருத்தல் 7% இனால் குறைவடைந்துள்ளது.

ஊழல் குற்றங்கள் 9% குறைவடைந்துள்ளதுடன் நியதிச் சட்டக் குற்றங்களின் கீழ் நிலவும் சுற்றாடலுக்கு எதிரான குற்றங்கள் கணிசமானளவினால் குறைவடைந்துள்ளது. போதைப் பொருட்கள் தொடர்பாக பதிவாகியுள்ள குற்றங்கள் 2017 ஆம் ஒப்பிடுகையில் 16% இனால் குறைவடைந்துள்ளதுடன் கைது செய்யப்பட்ட நபர்களின் எண்ணிக்கை 9% இனால் அதிகரித்துள்ளது.

❖ **கவனத்திற்கொள்ளப்பட வேண்டிய விடயங்கள்**

மொத்தமாக சமூக பொலீஸ் செயற்பாட்டின் ஊடாக மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளின் விளைதிறனை மேலே குறிப்பிடப்பட்ட அளவுகோல்களின் ஊடாக ஓரளவு அளவிட்டுக்கொள்ள முடியும். முக்கியமாக பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களின் ஊடாக பிள்ளைகள் மற்றும் வயதுவந்தோர் அறிவுறுத்தப்படல் குற்றங்கள் குறைவடைதல் மீது தாக்கம் செலுத்தியுள்ளதைக் காண முடியும். அத்துடன் பொலீஸுக்கு தகவல்கள் வருவதனால் போதைப் பொருட்கள் தொடர்பான குற்றங்கள் அதிகளவில் வெளிவருவதுடன் குற்றவாளிகள் கைது செய்யப்படும் நடவடிக்கைகளும் துரிதப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த விதமாக சமூக பொலீஸ் செயற்பாடுகளின் விளைதிறனை ஓரளவு மட்டத்தினால் அளவிட முடியுமாக இருந்தபோதிலும் அதற்காக விரிவான மற்றும் முறையான செயல்முறையொன்று அவசியமாகவுள்ளது. அதனூடாக அதன் சாதகம் மற்றும் பலவீனங்களை இனங்கண்டு மேலும்

இந்த முறையை விருத்தி செய்வதன் ஊடாக குற்றச் செயல்களை குறைத்துக்கொள்ள முடியுமாக இருப்பதுடன் சமூகப் பாதுகாப்பையும் விருத்தி செய்துகொள்ள முடியும். இந்த செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களை உரிய முறையில் மதிப்பீட்டுக்குட்படுத்த வேண்டியிருப்பதுடன் அதனூடாக சமூக பொலீஸ் செயற்பாடு மீதான பொலீஸ் உத்தியோகத்தரின் அர்ப்பணிப்பை மேலும் மேம்படுத்த முடியுமாக இருப்பதுடன் மொத்தமாக சமூக பொலீஸ் எண்ணக்கருவின் உச்சளவு பெறுபேறுகளை அடைந்துகொள்ள முடியுமாக இருக்கும்.

## 13. சூழல் பாதுகாப்பு

சூழலுக்கு எதிரான குற்றங்களுக்கு சட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதுடன் சூழல் பாதுகாப்புக்காக பல்வேறு கருத் திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் ஊடாக இலங்கை பொலீஸ் சூழலைப் பாதுகாப்பதன் முக்கியத்துவத்தை சிறப்பான வகையில் புரிந்துணர்ந்து தனது அலுவலை நிறைவேற்றி வருகின்றது.

2018 ஆம் ஆண்டிலும் முன்னைய ஆண்டுகளைப் போன்றே சூழல் பாதுகாப்புக்காக பல்வேறு வேலைத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டதுடன் விசேடமாக காலத்திற்குக் காலம் பொது மக்களின் வாழ்க்கை மீது அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ள டெங்கு நோயை கட்டுப்படுத்துவதற்காக முழு நாடும் உள்ளடக்கப்படும் வகையில் டெங்கு ஒழிப்பு மற்றும் அறிவுறுத்தல் வேலைத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. 2018 ஆம் ஆண்டின் சூழல் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டங்களின் பொழிப்பு கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

❖ **கடற்கரையோர பாதுகாப்பு மற்றும் கால்வாய்கள் சுத்தப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டம்**

I. சர்வதேச கரையோர சுத்திகரிப்பு தினம் மற்றும் சர்வதேச சமுத்திர வளங்களைப் பாதுகாத்தல் வாரத்தின் நிமித்தம் 2018.09.16 ஆம் திகதி காலி மாவட்டத்தை மையமாகக்கொண்டு படல்ல கடற்கரையோர சுத்திகரிப்பு நிகழ்ச்சித் திட்டம்
II. 2018.09.17 ஆம் திகதி அம்பாறை மாவட்டத்தை மையமாகக்கொண்டு திருக்கோவில் கடற்கரையோர சுத்திகரிப்பு நிகழ்ச்சித் திட்டம்
III. 2018.09.18 ஆம் திகதி அக்கரைப்பற்று கடற்கரையோர சுத்திகரிப்பு நிகழ்ச்சித் திட்டம்
IV. 2018.09.21 ஆம் திகதி காரைத்தீவு கடற்கரையோர சுத்திகரிப்பு நிகழ்ச்சித் திட்டம்
V. சர்வதேச கரையோர சுத்திகரிப்பு தினம் மற்றும் சர்வதேச சமுத்திர வளங்களைப் பாதுகாத்தல் வாரத்தின் நிமித்தம் 2018.09.21 ஆம் திகதி வெள்ளவத்தை கடற்கரையோர சுத்திகரிப்பு நிகழ்ச்சித் திட்டம்
VI. 2018.09.30 ஆம் திகதி வத்தளை கடற்கரையோரத்திலிருந்து நீர்கொழும்பு கடற்கரையோரம் வரையிலான சுத்திகரிப்பு நிகழ்ச்சித் திட்டம்
VII. 2018.10.06 ஆம் திகதி பேஸ்லைன் வீதி தொடக்கம் நாராஹேன்பிட்ட கிரிமண்டல மாவத்தையில் அமைந்துள்ள பொருளாதார நிலையம் வரையிலான கால்வாய்கள் சுத்திகரிப்பு நிகழ்ச்சித் திட்டம்
VIII. 2018.10.20 ஆம் திகதி தெஹிவளை கால்வாய்கள் சுத்திகரிப்பு நிகழ்ச்சித் திட்டம்

❖ **மர நடுகை வேலைத் திட்டங்கள்**

2018.06.02 ஆம் திகதி மர நடுகை தினத்துடன் இணையான வகையில் பொலீஸ் களப்படை தலைமையக வளவில் மர நடுகை நிகழ்ச்சித் திட்டத்தை நடாத்துதல்.

❖ **குப்பைகளை வகைப்படுத்தல் சம்பந்தமாக பொது மக்களை அறிவுறுத்தல்**

I. 2018.06.02 ஆம் திகதி கொம்பெனித்தெரு பொலீஸ் பிரிவின் 'கியு' பாதையில் குப்பைகளை வகைப்படுத்தல் சம்பந்தமாக பொது மக்களை அறிவுறுத்தல்
II. 2018.06.23 ஆம் திகதி கொம்பெனித்தெரு பொலீஸ் பிரிவின் விதானகே மாவத்தையில் அமைந்துள்ள சுமார் 572 தோட்ட வீடுகளில் வசிப்பவர்களுக்கு குப்பைகளை வகைப்படுத்தல் சம்பந்தமாக அறிவுறுத்தல்
III. 2018.06.30 ஆம் திகதி பொரளை பொலீஸ் பிரிவின் 400 வீடுகளில் வசிப்பவர்களுக்கு குப்பைகளை வகைப்படுத்தல் சம்பந்தமாக அறிவுறுத்தல்
IV. 2018.10.04 ஆம் திகதி பொலீஸ் உத்தியோகத்தர்கள், இராணுவ உத்தியோகத்தர்கள், பொது சுகாதார வைத்தியர்கள் மற்றும் பொது மக்களின் பங்கேற்புடன் சுத்தமான நகரொன்றை உருவாக்குதல் சம்பந்தமாக கட்டுநாயக்க எவரிவத்தை பஸ் தரிப்பிடத்தில் அறிவுறுத்தல் நிகழ்ச்சித் திட்டத்தை நடாத்துதல்.

❖ **விசேட அறிவுறுத்தல் நிகழ்ச்சித் திட்டங்கள்**

I. 2018.06.17 ஆம் திகதி மத்திய சுற்றாடல் அதிகார சபையுடன் இணைந்து பொலன்னறுவை புலத்திசிபுர கல்விக் கல்லூரி கேட்போர்கூடத்தில் சுற்றாடல் சட்டம் சம்பந்தமாக 300 பொலீஸ் உத்தியோகத்தர்களை அறிவுறுத்தல்.

II. 2018.09.14 ஆம் திகதி சூழல் பாதுகாப்பு பிரிவு, கடல் பிரிவு, பொலீஸ் உயிர் காப்பு சங்கம் மற்றும் கொழும்பு மாநகர சபை அதிகாரப் பிரதேசத்திற்குரிய பொலீஸ் நிலையங்களின் சுமார் 200 உத்தியோகத்தர்களை அறிவுறுத்தல்.

❖ **டெங்கு ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டம்**

நாட்டின் மாகாண மட்டத்தில் பல விசேட டெங்கு ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளதுடன் பொலீஸ் பிரிவு மட்டத்தில் தேசிய நுளம்பு ஒழிப்பு வாரங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. இதன் கீழ் 2018 ஆம் ஆண்டில் ஏராளமான வீடுகள் மற்றும் நிறுவனங்கள் பரீட்சிக்கப்பட்டு அறிவுறுத்தல்கள் மற்றும் சட்ட ரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. கீழே அட்டவணை 37 இன் ஊடாக அது தொடர்பான தகவல்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

அட்டவணை இல. 38 **2018 இல் டெங்கு ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் பற்றிய அட்டவணை**

| நிகழ்ச்சித் திட்டம் | செயற்படுத்திய பிரதேசம் | கால எல்லை | பொலீஸ் உத்தியோகத்தர்களின் பங்கேற்பு | சோதனையிடப்பட்ட அரச / தனியார் நிறுவனங்கள் | சோதனையிடப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை | சிவப்பு அறிவித்தல் விடுக்கப்பட்ட எண்ணிக்கை | வழக்குத் தாக்கல்கள் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | சுகாதாரப் பிரிவினால் | பொலீஸினால் |
| விசேட டெங்கு ஒழிப்புத் திட்டம் | மேல், வட, கிழக்கு, மத்திய, சப்ரகமுவ போன்ற மாகாணங்கள் உள்ளடக்கப்படும் வகையில் | 2018.01.01 2018.12.31 | 7543 | 30258 | 634899 | 24811 | 4730 | 790 |
| முதலாவது தேசிய நுளம்பு ஒழிப்பு வாரம் | 39 பிரதேச பொலீஸ் பிரிவுகள் | 2018.04.03 2018.04.09 | 11601 | 28142 | 449967 | 20362 | 2933 | 400 |
| இரண்டாவது தேசிய நுளம்பு ஒழிப்பு வாரம் | 41 பிரதேச பொலீஸ் பிரிவுகள் | 2018.09.26 2018.10.02 | 8482 | 25483 | 310757 | 19984 | 2132 | 476 |

மூலம் - பொலீஸ் சுற்றாடல் பாதுகாப்பு பிரிவு

# 14. மனித வள அபிவிருத்தி

